
சோமகாந்தன்
விடிவெள்ளி பூத்தது

01.10.89

# விடிவெள்ளி பூத்தது

"ஈழத்துச் சோமு"

வரதர் வெளியீடு

விடிவெள்ளி பூத்தது
(நாவல்)

ஆசிரியர்: ''ஈழத்துச் சோமு''

மேலட்டை ஓவியம்: ஏ. இராசையா

வெளியீடு: வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம்.

முதற் பதிப்பு: செப்டம்பர் 1989

அச்சுப் பதிப்பு: ஆனந்தா அச்சகம்
226, காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம்

விலை: நூலகப் பதிப்பு ரூபா 40/-

---

அடுத்த 'வரதர் வெளியீடு'
''செங்கை ஆழியான்''
எழுதிய
**மழையில் நனைந்து வெயிலில் காய்ந்து...**
நாவல்

# பதிப்புரை

''விடிவெள்ளி பூத்தது'' என்ற இந்த நாவலை மிக்க மகிழ்ச்சியுடன் .வாசகர்களுக்குத் தருகிறேன்.

''ஈழத்துச் சோமு'' என்ற பிரபல எழுத்தாளர், இந்த நாவலின் மூலம் ஒ ரு நாவலாசிரியராகவும் வாசகர்களுக்கு அறிமுகமாகின்றார்.

எழுதிப் பழகிய அவருடைய கை, இந்த நாவலை மிக அற்புதமாகப் படைத்திருக்கிறது.

ஒ ரு காலத்தில் மிகக் கொடூரமாக விளங்கிய யாழ்ப்பாணத்துச் சாதியாசாரம், எவ்விதம் மெல்ல மெல்ல அழிந்து, ஒரு புது யுகத்தை எ ட் டி ப் பார்க்கிறது எ ன் ற உண்மையை இந்த நாவல் மிக அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறது.

இந்த நாவலின் சிறப்பம்சங்கள் இன்னும் பல. நூல் வெளிவந்ததும் ஆய்வாளர்கள் அவற்றை வெளிக் கொணருவார்கள்.

'ஈழத்துச்சோமு' என்ற பெயரை ஈழத்து நாவல் உ ல கி ல் இந்நூல் நிலைநிறுத்தி வை க் கு மெ ன் ப தி ல் எனக் ஐயமில்லை.

நானே எழுதிய ஒரு நூலை வெளியிடுவது போன்ற மகிழ்ச்சியோடு இந்நாவலை வெளியிடுகிறேன். ஏனெனில் ''ஈழத்துச் சோமு'' எனது 'நல்ல' நண்பர். மிகச் சிறப்பாக இதை எழுதியிருக்கிறார்.

யாழ்ப்பாணம் — வரதர்

6 - 9 - 89

முன்னுரை

# இலக்கியமும் வரலாறும்

பேராசிரியர் கா. சிவத்தம்பி

மிக அண்மையில், யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற ''எழுபதுகளிலிருந்து ஈழத்துக்கலை இலக்கியம்'' என்ற கருத்தரங்கத் தொடரின் அங்குரார்ப்பண, அறிமுகவுரையில்' ஈழத்தில் 1970-89க் காலப்பகுதியின் புனைகதை முயற்சிகளைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, இக்காலப் பகுதியிலே தோன்றிய பிரதானமான நாவல்கள் - டானியலின் 'பஞ்சமர்' செங்கை யாழியானின் 'காட்டாறு' போன்றவை - இலக்கியமென வெளிவந்த வரலாறுகளே (Literature as History) என்று கூறினேன்.

அந்த உரையினை ஆற்றிய அன்று இரவு நண்பர் சோமு தந்த, இந்நாவலின் கையெழுத்துப் பிரதியை வாசித்த பொழுது, அந்தப் பட்டியலிற்சேர வேண்டிய மேலுமொரு படைப்பு வெளிவரப் போகின்றது என்பதை உணர்ந்து கொண்டேன்.

யாழ்ப்பாணத்துச் சமூக அமைப்பினுள் பிராமணர் பெறுகின்ற இடம் மிகச் சுவாரசியமானது. யாழ்ப்பாணத்தின் ஒடுக்கப்பட்ட சாதிகளுள் பிராமணரைச் சேர்த்துக்கொள்ள முடியாதென்பது உண்மையெனினும், அவர்கள் நம்மிடையே ''ஒதுக்கப்பட்டவர்கள்'' என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது. ஒதுக்கற்பாடு ஒடுக்குமுறைகளுக்கு, ஒரே வேளைகளில் அடக்குமுறைகளுக்குக் கூட, ஆட்பட வேண்டிய நிலையினை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்துப் பிராமணர்கள் தமிழ் நாட்டுப் பிராமணர் போன்று பொருளாதார மேலாண்மையுடையவர்கள் அல்லர். இவர்களுக்கு இங்கு சடங்காசார முதன்மை மேலிடமே உண்டு. மதக்கிரியைகளைச் செய்வதற்கு வேண்டிய முதன்மை நிலையுண்டு. ஆனால் அந்த முதன்மை நிலைக்கு அதிகார அக்கீகாரம் வழங்கும் பொருளதார பலம் இல்லை. இதனால் இவர்களின் உயர் நிலையே இவர்களின் சமூக அசைவியக்கத்துக்கான தடையாக ஆகி விடுகின்றது. இந்த உண்மையைத் தெணியானின் ''பொற்சிறையில் வாடும் புனிதர்கள்'' என்ற நவாலிற் காணலாம். (அது முரசொலியில், சில பகுதிகள் நீக்கப்பெற்று பிரசுரிக்கப் பட்டது). தெணியானுக்கு, பிராமணச் சமூகம் தூரத்தது, சற்றுத் தொலைவிலிருந்தே பார்க்கின்றார். அப்படிப் பார்க்கும் பொழுது, மற்றைய ''ஒடுக்கப் பட்ட'' சாதியினரைக் கட்டுப் படுத்தும் சிறைக் கம்பிகள் பிராமணரையும் கட்டுப் படுத்துகின்றன என்பதைக் கண்டார். கண்டமை, அத்தலைப்பிற் பளிச்சிடுகின்றது. தாழ்த்தப் பட்டவர்களின் சிறை இரும்புச்சிறை. உயர்வொதுக்கம் பெற்றவர்களின் சிறை பொற்சிறை. வித்தியாசம் அவ்வளவுதான் என்பது தெணியானின் தலைப்புத் தரும் பூடகமான செய்தி.

யாழ்ப்பாணத்துச் சமூக அமைப்பிற் ''சிறைக்குடிகள்'' என ஒரு வழக்காறு உண்டு என்பது இன்னொரு சுவாரசியமான தகவல்.

இந்த நாவலில், யாழ்பாணக் கிராமத்துப் பிராமணக் குடும்பமொன்றின் கதை, ''உள்வீட்டுப் பிள்ளை'' யொன்றிலேயே சொல்லப்படுகின்றது.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் இயக்கத்தின் பங்களிப்புகளில் முக்கியமானது, அதுவரை தெரியப்படாதிருந்த, சாதியமைப்பின் அகச்சலனங்கள், எதிர் பார்ப்புகள், ஏமாற்றங்கள், விரக்திகளை அந்த அந்த உள் வீட்டுப் பிள்ளைகளே எழுயதிமைதான். டானியல், ஜீவா, கதிர்

காமநாதன், பெனடிக்ற்பாலன், யோகநாதன், வரிசையில் ''ஈழத்துச் சோமு''வாக இருக்கும் சோமகாந்தன், இப்பொழுது தமது பின்புலத்தின் ஏக்க தாபங்களை, விரக்தி வைராக்கியங்களை எடுத்துக் கூறுகிறார். ஏழைப் பிராமணன் தமிழகத்து இலக்கியத்துக்குப் புதியவன் அலலன். ஈழத்திலக்கியத்துக்கு நிச்சயமாகப் புதியவன்.

யாழ்ப்பாணத்துக் கிராமத்துப் பிராமணனும் கிராமத்தவன் தான்; குடும்பஸ்தன்தான், சராசரி யாழ்ப்பாண மத்திய தரவர்க்க அபிலாஷைகளைக் கொண்டவன்தான், சாதி வரையறைக் குட்பட்டவன்தான், அவனும் சிங்களவர் கண்ணில் தமிழன்தான். பிராமணர்களல்லாதார் மத்தியில் சாதி ஏற்ற இறக்கங்கள் இருப்பது போல அவனுக்குள்ளும் உண்டு. பொருளாதார ரீதியில் சக தொழிலாளியான 'சைவ'க் குடும்பத்துடன் - அதாவது பண்டாரக் குடும்பத்துடன் (இரண்டு பேருக்குமே கோவில் தான் தொழில் ஸ்தானம்; இந்தச் 'சைவம்' என்ற பதப்பிரயோகத்தின் உள்ளார்த்தங்கள் சுவையானவை). திருமண உறவு வைத்துக் கொள்வது எத்துணை சிக்கலானது என்பதெல்லாம் இந் நாவல் மூலம் தெரிய வருகிறது.

உண்மையில் பஞ்சமர் முதல், இந்த நாவல் வரை வரும் இத்தகைய நாவல்கள் யாவும் ''இலக்கியங்களென அன்றேல் இலக்கியங்களாக வரும் வரலாறுகளே.''

இவற்றிற் காணப்படும் முக்கியமான பிரச்சினைப் பொருள் யாதெனில், இவை எந்த அளவுக்கு இலக்கியங்களாக உள்ளன என்பதேயாகும். அந்த உரைகல் ஒன்றை மாத்திரம் வைத்துக் கொண்டு இவர்களை விழுத்த விரும்பும் அழகியல் விற்பன்னர்கள் பலர் இருக்கிறார்கள்.

இந்த வரலாற்றுக் கதைகளின் ஒரு முக்கிய பண்பு, இவை நாவல்'களாக விருப்பதிலும் பார்க்க 'கதை'களாக விருப்பதுதான். கதை என்பது தொடர் நிலைச்சம்பவக் கோவை

வெளிப்பாடு. உண்மையான நாவல் என்பது மனித உறவுச் சிக்கல் ஒன்றின் அல்லது பலவற்றின். சித்தரிப்பு. **(debiction : bortrayal)**. நாவலுக்கு ஒரு கதைச் சட்டகம் வேண்டும். கதையே நாவலாகி விடாது.

ஆனால் இலக்கியம் சமூகப் பயன் பாடுடையதாக விருத்தல் வேண்டுமென்பதை வற்புறுத்துவோர் சில கட்டங்களில், சித்தரிப்புக்கு முன்னர் விவரணம் அத்தியாவசியமாகின்றது என்பர். நண்பர் சோமுவின் இந்தப் படைப்பு யாழ்ப்பாணக் கிராமத்துப் பிராமணக் குடும்பமொன்றின் விவரணம்.

—கார்த்திகேசு சிவத்தம்பி

நடராஜ கோட்டம்
வல்வெட்டித் துறை
*31 - 8 - 1989.*

# என்னுரை

இந்நாவல் 'எமது மண்ணின் பிரம்மபுத்திரர்' பற்றியகதை. மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் எனது சிறுகதைத் தொகுதி 'ஆகுதி' வெளியாகிய போது, எனது இலக்கிய அபிமானிகள் நாட்டின் பல பகுதிகளில் விழாவெடுத்துப் பாராட்டினர். 'ஆகுதி' சிறுகதை போன்ற களத்தை வைத்து நாவலொன்றை எழுத வேண்டுமென மேடைகளிலேயே எனக்கு கோரிக்கைகள் வந்தன...... ஓராண்டுக்கு முன்பு, எனது மிக மிக நெருக்கமான உறவினரொருவரின் மரணச் சடங்குகள் மயானத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் இக்கதைக்கான கரு மனதில் பதிந்து விட்டது. காலக்கெடு தந்து, ஓடியாட விடாமல் ஒரே இடத்தில் என்னை உட்காரச் செய்து இருவாரத்துள் இதனை எழுதி முடிக்கச் செய்த கெட்டித்தனமும் பெருமையும் மூத்த எழுத்தாளராகிய நண்பர் 'வரதர்' அவர்களுக்கேயுரியது, பிரசவிக்கப்பட்ட கோலத்தில், இதனை புரட்டிப்பார்த்து, முதற் பாராட்டை தெரிவித்து உற்சாக மூட்டி, முதற் தரமான முகப்போவியத்தையும் அமைப்பித்துத் தருவதில் அக்கறையெடுத்துக் கொண்ட நாவலாசிரியர் 'செங்கையாழியான்' அவர்களின் நல்ல உள்ளத்துக்கு நன்றியுடையேன். தமது பல நெருக்கடிகளின் மத்தியிலும் முன்னுரை தந்த பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள்,

அழகிய முகப்போவியம் வரைந்துள்ள பிரபல ஓவியர் திரு. ஆ. இராசையா அவர்கள்,

சிறந்த முறையில் இந்நூலினை வெளியிட்டுள்ள 'வரதர் வெளியீடு' நிறுவனத்தார் -

இந்நாவலை எழுதியபோது, வேண்டிய வசதிகளைக் கண்ணுங் கருத்துமாகச் செய்து தந்து, அன்றன்றாடு எழுதி முடித்தவற்றை வாசித்து அபிப்பிராயஞ் சொல்லி, ஊக்க மூட்டிய எனது அருமை மகள் கலாஞ்சலி, ஆகியோர் எனது நன்றிக்குரியவர்கள்.

'ஈழத்து சோமு' நா. சோமகாந்தன்.

111, ஓட்டுமடம் வீதி.
யாழ்ப்பாணம். 1-9-89.

# விடிவெள்ளி பூத்தது!

மொள மொள வென்றிருந்த எழுந்தருளிப் பிள்ளையார் பொன்னிறமாக மின்னிக்கொண்டிருந்தார். தொந்திவயிற்றை மறைத்து கழுத்தளவுவரை புஷ்பச்சோடினையால் சாத்துப்படிச் சைவம் தமது கைவண்ணத்தைக் காட்டியிருந்தார். தலையில் சிறிய பொற்குடையும், கழுத்தில் கண்ணைப் பறிக்கும் தங்கநிற ஆபரணங்களும் பச்சை சிவப்புப் பட்டு உத்தரியமும், கையில் செங்கழுநீர்ப்பூவும், கண்களில் ஒளிரும் அருளுமாக வசந்த மண்டப பூசையில் பிள்ளையார் கொலுவிருந்தார்,

ஆஜானுபாகுவான ஐந்தரை அடி உயரம், தழல் நிற மேனி, அகன்ற நெற்றி, அதில் துலாம்பரமாக மின்னும் வெண்ணீற்றுக்குறிகள், நடுவில் குங்கும சந்தனக்கலவைப் பொட்டு, தீட்சண்யங் கொண்ட கண்கள், சாந்தம் பொலிகிற முகம், புன்முறுவல், கழுத்தில் கௌரிசங்க உரித்திராட்ச மாலை, காதில் கடுக்கன், தோளில் உத்தரீயம், பஞ்சகச்சத்துக்கு மேல் இடுப்பில் வரிந்து கட்டிய சிவப்புப்பட்டு - வைத்தீஸ்வரக் குருக்களின் எடுப்பான தோற்றம் அந்தப் பக்திச் சூழ்நிலையை மேலும் பொலிவாக்கியது.

அடுக்குத்தீபம் உயர்ந்து எழுந்து, இடமும் வலமுமாக ஆடி அசைந்து தணிய, அலங்கார தீபங்கள் ........ சோடோபசாரங்கள் ........ பஞ்சாலாத்தியை அவர் கையில் தூக்கிய போது, கண்கொள்ளா அந்த அழகுக்காட்சியைக் கண்ட பக்தி லயிப்பில், அரோஹராச் சத்தமும் வாத்திய முழக்கமும் ஆர்ப்பரித் தெழுந்தன.

''அஸ்ய எஜமானஸ்ய சக உபயகர்த்தா எஜமானஸ்ய
குடும்பானாம் க்ஷேம ஸ்தைர்ய வீர்ய விஜய
ஆரோக்ய அபிவிர்த்தியர்த்தம் மஹாந்தோ
அநுக்ரஹ்ணந்து ........'' குருக்களின் அட்சர சுத்த மான மஹாசீர்வாத மந்திர உச்சரிப்பு மற்றெலலாச் சத் தத்தையும் அமுக்கித் தனித்து ஒலித்தது.

கோயில் எஜமான் கணபதிப்பிள்ளை குருக்களிடமிருந்து பெற்றுக்கொண்ட காளாஞ்சியை கண்களில் ஒற்றிவிட்டு, அதனைத் தமது பக்கத்தில் நின்ற மனைவி சின்னப்பிள்ளை நாச்சியிடம் கொடுத்தார்.

பிள்ளைத்தண்டுங் கையுமாக கட்டு மஸ்தான நான்கு வாலி பர்கள் பக்தி சொட்டப் பூசிய விபூதி சந்தனப் பூச்சுடன் வசந்தமண்டபத்துள் காலடி எடுத்து வைத்தனர்.

அரோஹரா.........
அரோஹரா........
அரோஒஹரா.........!

கணபதிப்பிள்ளையருக்கு இனி அங்கு வேலையில்லை. சன நெரிசலில் அவரின் பெரிய உடம்பு வியர்த்து வழிந்தது. சனத்தைப் பிட்டுக் கொண்டு அவர் கோபுர வாசலுக்கு வந்து நின்று, சால்வையை உரிந்து, உடம்பைத் துடைத்து ஒற்றி, உதறிவிட்டு, நிமிர்ந்து பார்த்தபோது, கிழக்கு வீதி முழுவதும் தலை மயமாகக் காட்சியளித்தது.

அன்றைய திருவிழா கோயில் எஜமான் என்ற வகையில் கணபதிப்பிள்ளையின் தனி உபயம். எட்டுநாட்களாக நடந்து முடிந்த திருவிழாக்களுக்கென வந்த சாமான்களில் கொஞ்சங் கொஞ்சமாக எடுத்தொதுக்கி வைத்திருந்தார். நிவேதனச்சாமான்கள், அபிஷேக திரவியங்கள் எல்லாம் செலவின்றிச் சேகரித்து விட்டார்...... வந்த இடத்தில் மூன்று நான்கு மேளக் கூட்டங்களுக்கும் சொல்லி வைத்து, அவர்களின் செலவை தலையில் கட்டுவதற்கு சிலரை நிய

மித்தும் விட்டார். பூஞ்சாத்துப்படிப் பொறுப்பைச் சைவம் ஏற்றிருந்தார். மண்டகப்படிக்கும் காளாஞ்சிக்கும் வைத்த வெற்றிலை சீவல் கூட நேற்று வந்ததில் மிச்சம் பிடித்த ஒரு பகுதிதான், பக்கத்து வீட்டுக்காரனின் தோட்டத்தில் நான்கு வாழைக்குலை வெட்டிவித்துப் புகைப் போட்டுக் கொண்டு வந்துவிட்டார். நல்ல காலம்! - அவர் வீட்டு முற்றத்துப்பலா இம்முறை காய்த்துத் தள்ளியிருந்தது. நாலைந்து பழங்களை மனம் வந்து தமது உபயமாகக் கொண்டு வந்து சேர்த்திருந்தார்.

இடுப்புச் சால்வையை உரிந்து உடம்பை ஒற்றித்துடைத்து உதறிவிட்டு அவர் கிழக்குப் பக்கம் நிமிர்ந்து பார்த்த போது.........

இரண்டு நாட்களாக பொலிஷும் பெயின்றும் போட்டுத் துடைத்து துப்புரவாக்கப்பட்டதேர், கட்டாடிமாரால் சிவப்பும் வெள்ளையுமாக வரி வரியாகச் சேலைகளால் அலங்கரிக்கப்பட்டு, குத்துக்கால்களில் கமுகு, வாழைகள் கட்டப்பட்டு, நுங்குக்குலைகளும் செவ்விளநீர்க் குலைகளும் தொங்க, துணியினாலமைந்த குஞ்சங்கள் பொம்மி எழ.........இரு குதிரைகள் இழுத்துக்கொண்டோடத் தயாரான கம்பீரக் கோலத்தில், ஈசான மூலைக்கும் கோபுர வாசலுக்குமிடையில் காத்து நின்றது. அந்த ரதோற்சவங்காண அந்த ஊர் மட்டுமல்ல, அயலூரவர்களும் அங்கு திரண்டு நின்றனர்.

வடமராட்சியை கிழக்கு மேற்காக ஊடறுத்துச் செல்லும் அப் பெருந் தெருவுக்குத் தெற்கே பரந்து கிடக்கும் அக்கிராமத்தில், குட்டிக்கோவில்களாக எட்டுப் பத்து இருந்த போதிலும், ஊர் நடுவிலுள்ள வரசித்தி விநாயகர் கோயில் பிரசித்தமானது.

மேற்கே தாமரைக் குளமும் மருதமரச்சோலையும் பரந்திருக்க, அதன் முன்னால் வரசித்தி விநாயகர் எழுந்தருளியிருந்தார். அவரின் கோயிற் கட்டிடம் ஒன்றும் அப்படிப் பெரிதன்று - இராஜ கோபுரத்துக்கு அத்திபாரம் போட்டு

அநேக வருடங்களாகியும் அது ஓர் அடி உயரங் கூடஎழும்ப வில்லை. சுற்று மதில்களிலும் அங்கொன்றும் இங்கொன் றுமாக நுணா மரங்கள் எழும்பித் தலை உயர்த்தி விட்டன. ஏதோ ஊராருக் கெல்லாம் வரங் கொடுக்கிற வரசித்தி விநாயகர் தமது கோயிலுக்கு அப்படி ஒன்றும் வரத்தைக் கொடுக்கக் காணவில்லை. ஆனால் ஆண்டு தோறும் நடக் கும் ஆடம்பரமான பத்து நாள் மஹோற்சவம் வருடம் முழுவதும் மனசில் நிற்கக் கூடியதாக அமைந்து விடும்.

கோயிலின் வடக்கே பரந்த தோட்டவெளி, அதனைக் கடந் துள்ள பனங்கூடலில் நான்கு, ஐந்தாம் திருவிழாக்காரர் களின் குடிசைகள். கிழக்கே கோயில் எசமான் பகுதி ஆட்க ளின் கோட்டைதான் - அவர்களுக்கு எட்டாந் திருவிழா. தெற்கே பரந்த வயல் வெளியும் அதன் எல்லையில் குடிமக் களான அம்பட்டர் வண்ணாரின் குளம், குடிசைகளுமிருந் தன. அதற்கும் அப்பால் மயானமும் உப்பு வெளியும். மேற்கில் தச்சுவேலைத் தலங்களும், புகையிலைக் குடில்களு மாக அக்கிராம மக்கள் வகுத்துப்பிரித்து வாழ்ந்து கொண் டிருந்தனர்.

அக்கோயில் எசமானின் முந்திய பரம்பரையினர் வெகு புத் திசாலிகளாக இருந்திருக்க வேண்டும். தொகையில் சிறி தாக இருந்த தமது குடிமக்களுக்கு முற்பகுதித் திருவிழாக்க ளை ஒதுக்கிக் கொடுத்துவிட்டு, சாதிப் பிரிவின்படி மேலே மேலே உயர்த்திக்கொடுத்து தேர்த் திருவிழாவைத் தாமெடுத் துக் கொண்டு ...... வெகு உயரே ஏறிக் குந்தி இருந்து கொண் டனர். இப்படி எழுதா வழக்கமாக எத்தனையோ வருடங் களாக அக்கோயிலின் திருவிழாக்கள் அமைந்திருந்தன. சாதி அடிப்படையில் மஹோற்சவத் தினங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டிருந்ததால், பக்தியிலும் பார்க்க போட்டி மனப்பான்மை உற்சவத்தில் மட்டுமல்ல, சமூகத்திலும் வளர்ந்து வந்தது.

துவஜாரோகணத்தன்று மதிய வயசைத்தாண்டிய முப்பதோ நாற்பது பேரின் விபூதிப் பூச்சும் தோய்த்த வேட்டியுமாக

ஆரம்பிக்கும் மஹோற்சவம், சிலநாட்கள் கழிய களை கட்டிச் சூடு பிடித்துவிடும். தீவட்டியுடன் விரைவாக வீதி வலம் வந்த பிள்ளையார், லைற் எஞ்சின் இரைச்சலோடு அசைந்துவரத் துவங்கி விடுவார். அடுக்குச் சிகரச்சோடினை, அலங்காரப் பந்தல், மேல் மேளச்சமா, சதுர்க்கச்சேரி, மணிச்சப்பறம், போட்டிச் சாத்துப்படி, ஒலிபெருக்கி, வாணவேடிக்கை......... இரவுத் திருவிழாவுக்காக வீதிவலம் வருகிற விநாயகரை வடக்கு வீதியில்வைத்து மேளச்சமா நடத்துகிறபோது இளஞ் சூரியனும் எழுந்து அவரை நமஸ்கரிக்கத் தவறுவதில்லை.

கொஞ்சக் காலத்துக்கு உற்சவக் கிரியைகளை மட்டும் அடக்கமாக நடத்தி, திருவிழா ஆடம்பரச் செலவுகளுக்குச் செலவாகிற பணத்தைக் கொண்டு இராஜ கோபுரத் திருப்பணியையும், மற்றும் திருத்த வேலைகளையும் செய்யலாமே என உற்சவத்துக்கு வருகிற ஒவ்வொரு தடவையும் குருக்கள் சொல்லிப் பார்த்துவிட்டார்.

''எங்கடை பிள்ளையார் அலங்காரப்பிரியன்- அவருக்கு டீங்கான திருவிழாத்தான் பிடிக்கும்'' எனக் கோயில் எசமானும் உபயகாரர்களும் ஒரேகுரலில் மறுமொழி சொல்வதைக் கேட்டு அவர் சிரித்துக் கொள்ளுவார். யாக வாசலுக்குச் சுவாமி வந்துவிட்டது.

திபு திபு எனச்சனம் நெரிபட்டு கோபுர வாசலில் இடிபட்டுப் பிதுங்கிக் கொண்டு வெளியேறியது. கணபதிப்பிள்ளை கோபுர வாசலில் நின்று தேரைக் கூர்ந்து நோக்கிக்காக்காய் நோட்டம் விட்டார். அவருடைய புத்திரர்களிருவரும் சாக்குகள் சகிதமாக ஏற்கனவே தேரில் ஏறி வயிரவர்கள் போலக் காத்துநின்றனர்.

கீழே ஈசானமூலை அரசமரத்தடியிலிருந்து ஆரம்பித்து, அகன்ற கிழக்கு வீதியையும் நிரப்பி, தெற்கு வீதியிலும் வழிந்து ......... வேறுபாடுகளை மறந்து, ஊர்திரண்டு சனசமுத்திரமாகக்கலந்து முட்டி மோதிக்கொண்டிருந்தது.

அதற்கு முதல் நாள் வேட்டைத் திருவிழா - வேழாளர் உபயம். அதுவரை நடைபெற்ற திருவிழாக்களிலும் பார்க்க, தங்களுடையது உசத்தி எனக்காட்ட, கிராமப்பிரதட்சணமாகச் சுவாமியைக் கொண்டுபோய், தங்கள் கிழக்குப் பகுதியின் படலை படலையாக நிறுத்தி, கூட்டங் கூட்டமாக மேளங்கள் கார்களில் வந்திறங்க, நள்ளிரவுவரை சமர் நடத்திவிட்டுத்தான் மற்றும் வீதிகளுக்கு விட்டவர்கள், மூன்று வீதிகளிலும் பூரண கும்பவரவேற்பைப் பெற்று அர்ச்சனை ஆசீர்வாதம் அருளி வந்த பிள்ளையாரை, வடக்குப்பக்கம் திரும்பியவுடன், வயலுக்கூடாக அவசர அவசரமாக இழுத்துக்கொண்டு வந்துவிட்டார்கள்! - அல்லது துடக்குப்பட்டு விடும்! ........

கோபுர வாசலில் கரை தட்டிக் கொண்டிருந்தது மக்கள் வெள்ளம். படிக்காவிட்டாலும் கணபதிப்பிள்ளையார் கணக்கில் கெட்டிக்காரர். மனமதிப் பீட்டிலேயே கணக்குப் பிசகாது. தனதுகணக்குச் சரியா என்ற சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக மீண்டும் ஜனசமுத்திரத்தை அளவெடுத்தார். அவர்கள் எல்லோர் கைகளிலும் அர்ச்சனைத் தட்டுக்கள் - ஓலைப் பெட்டிகள். அவருக்குப் பெருமிதமாக இருந்தது.

''எப்படியும் ஐயாயிரத்துக்குக் குறையாது'' -
உண்டியல் பெட்டியில் விழுவது கோயிலுக்குரியது.
உள் அர்ச்சனைக்காசு நித்திய பூசகருக்கு.
உபயகாரர் தெட்சனையும் அபிஷேகவருமானச் சாமான்களும் குருக்களுக்கு ........
தேர் அர்ச்சனை மட்டும் கோயில் எசமானுக்கு........
கணபதிப்பிள்ளையாருக்கு நல்லதிருப்தி.

''அப்பனே விக்நேஸ்வரா ........ கண்கண்ட தெய்வமே!'' என உவகை பொங்க அவர் கூப்பிடுவதற்கிடையில், கோபுர வாசலில் சுவாமி தரிசனமாகிவிட்டார்.

மேள நாதஸ்வர முழக்கம்.- மணி ஒலி மௌனித்துவிட, வைத்தீஸ்வரக் குருக்களின் கம்பீரத் தொனியில் கட்டியம் ஒலித்தது.

''மூஷிகாதிருட, நாக யக்ஞோப வீததாரண, பாசாங்குச ராஜ ராஜ லதன, ஸ்ரீவிக்நேஸ்வர சுமுகா.........''

... ... ... ... ... ... ... ... ... ... ...

... ... ... ... ... ... ... ... ... ... ...

கிணி ......... கிணி ......... கிணீம்.

... ... ... ... ... ... ... ... ... ... ...

''சண்ட பண்டிதண, பிதிர் சண்டிதண கோக்ஷீர நிர்மால்ய பஷ்ணபஹிதாண ஸ்ரீசண்டேஸ்வர சுமுகா.... ....''

கிணி கிணீம்.........கிணி கிணீம்.........கிணி கிணீம்.........

பஞ்சாராத்தி தீபத்தை கொளுத்தி உயர்த்தி பக்தியும்பவ்வியமுமாக ஓங்கார வடிவில் குருக்கள் அசைத்துப் பணித்து தூர்க்க.........

ரீரி ரீரீ.........ரீரி ரீரீ.........ரீரி ரீரீ ........... நாதஸ்வரவித்துவான்களின் மல்லாரி வாசிப்புத் தொடங்கிவிட்டது.

பொன்னும் மணியுங் கொண்டிழைத்த மஞ்சட்பட்டுக்குடை நிழலில் அந்தக்காலை வேளையில் விக்நேஸ்வரப் பெருமான் தேரேறச் சென்ற காட்சி பக்தி பரவசத்தையூட்டிப் பார்ப்பவர்கள் மனசைத் திளைக்கச் செய்தது.

சுவாமி தேரேறி உட்கார்ந்து விட்டார்!

அந்தச் சந்தோஷத்தில் பக்தர்களின் கரகோஷம் வானைத் தொட்டது. தேங்காய்க் குவியல் பட் பட் டென்ற சத்தத்தோடு சிதறி வளர்ந்து கொண்டிருந்தது.

வெளிமண்டபவாசலில் வடக்குப்புறத் தூணருகில் பெண்கள் கூட்டத்தோடு ஒதுங்கிநின்ற குருக்களின் மனைவி ஜானகியம்மா தனது கைகளிலிருந்து திமிறிக்கொண்டு கூட்

டத்துக்குள் போகத்துடிக்கிற சிறுவனைச் சமாதானப்படுத்தி கைகளால் இறுக்கிப்பிடித்து, தேரேறிவிட்ட சுவாமியை அவனுக்குத் தூக்கிக் காட்டினாள்.

நேர்வகிடெடுத்து வாரிமுடிந்த கூந்தலும், அதில் மல்லிகைச் சரமும், நெற்றியில் விபூதிக்குறியும் நடுவில் குங்குமத்திலகமும், நீலப் பட்டுப்புடவையின் தலைப்பை எடுத்துப்போர்த்திய கழுத்தும், அடக்க ஒடுக்கமுமாக நின்று தேரையும் அதில் நிற்கும் கணவரையும் பார்த்து அவள்பெருமிதத்தோடு நின்றாள்.

அர்ச்சனைத் தட்டங்கள் முண்டியடித்து மேலே மேலே போய்க்கொண்டிருந்தன......... ஓலைப் பெட்டிகள் உயர்ந்த கரங்களில் வெகுநேரமாகக் காத்துக் கொண்டு ஒதுங்கிநின்றன. குருக்கள் ஓலைப்பெட்டிகளையும் வாங்கி, தட்டங்களையும் ஓலைப்பெட்டிகளையும் நிவேதித்து அர்ச்சனைகளை சுறு சுறுப்பாகச் செய்தார்.

''சுவாமிக்குப் பக்கத்திலை எங்கடைகுருக்கள் நிக்கிறதைப் பார்த்தால், பிள்ளையார் சுவாமிக்குப் பக்கத்திலை சிவபெருமானே வந்து நிக்கிற மாதிரி இருக்கு'' - பக்கத்தில் நின்ற குறுக்குக் கட்டுக்கட்டின பொக்கை வாய் ஆச்சி வாய்விட்டுச் சொல்லி, தேரைப்பார்த்து தனது கன்னத்தில் போட்டுக் கொண்டாள்.

தீபமுங் கையுமாக, சுவாமி அருகில் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கிற தனது கணவரைப் பார்த்து ஜானகி அம்மா பூரித்துப் போனாள்.

சால்வையை அரையில் இறுகக் கட்டிக் கொண்டு, ஆண்கள் தேர்வடம் பிடிப்பதற்காகப் போட்டியிட்டுக் கொண்டு நிரை வகுத்தனர்.

''வாடா கண்ணு இனிப் போவம் ........ வந்திருக்கிறவாளெல்லாம் பசியெடுக்க முன்னம் சீக்கிரமா சமையலை

முடிக்க வேணும் ........ உனது பாட்டி பாவம்: தனியாகச் சமாளித்துக் கொள்ள மாட்டா'' - அடம்பிடிக்கிற மகனை அணைத்துக் கூட்டிக்கொண்டு ஜானகி அம்மா கோயில் மடத்துக்குப் போய்விட்டாள்.

நெடுங்காலமாகச் சைவம் பூசை பண்ணிக் கொண்டிருக்கிற கோயில் அது. அரிவி வெட்டுக்காலத்திலும், மாசச் சதுர்த்தி நாட்களிலும் மோதகம் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பிள்ளையாருக்கு, மஹோற்சவத்தை நடத்தி வைக்க, பருத்தித் துறைக்கு வண்டி அனுப்பி வைத்தீஸ்வரக் குருக்களைக் கூட்டி வந்து, தெற்கு வீதி மடத்தில் தங்க வைப்பது வழக்கம். மகனைக் கூட்டிக்கொண்டு ஜானகி அம்மா அந்த மடத்துக்குப் போனாள்.

மஹோற்சவம் முடிந்து, கொடியிறக்கி பிராயச் சித்தாபிஷேகத்தையும் முடித்து விட்டு தமது ஊருக்குப் போக குருக்கள் குடும்பத்தோடு தயாராகி விட்டார்.

''ஒரு பிராமணக்குருக்கள் உற்சவத்தோடு நித்திய பூசையையும் இந்தக் கோயிலுக்குப் பண்ணினால்தான் எங்கடை ஊருக்குச் சிறப்பு. எங்களுக்கும் பெருமை. ஊர்ப்புரோகிதத்திலும் கோயில் வருமானத்திலும் குருக்களுக்கு ஒரு குறையும் இல்லாமல் கவனிப்பம். கோயில் மடத்தில குடியிருக்க எல்லா வசதியும் செய்திருக்கிறம். இஞ்சையே வந்து விடவாக்கும் குருக்கள். இந்த முறை கடத்திப்போடாமல் ஓமெண்டு சொல்லவாக்கும்'' - கோயில் எசமான் மட்டுமல்ல, ஊர்ப் பெரியவர்கள், உபயகாரர்களெல்லோரும் அவரைச் சூழ்ந்து கொண்டு கெஞ்சினார்கள்.

பிறந்த ஊரையும், பெற்றதாயையும், உறவினர்களையும் பிரிந்து தனிக்குடித்தனம் வரவேண்டுமேயென்பதனால் மட்டுமல்ல. பிள்ளைகளிருவரையும் படிப்பிக்க வேண்டும் என்பதுதான் குருக்களின் தயக்கத்துக்குப் பிரதான காரணமாயிருந்தது.

அவர்களின் கோரிக்கையை மூன்று வருஷங்களாக ''பார்ப்பம், பார்ப்பம்'' என்று தள்ளிப் போட்டு வந்துவிட்டார்.

''இந்த முறை கடத்தாமல் ஓமெண்டு சொல்லவாக்கும் குருக்கள்.........நீங்கள் வந்தால் கிராமத்துக்கே ஒரு பொலிவாயிருக்கும் ........ பிள்ளையாராணை மறுக்காமல் ஓமெண்டு சொல்லுங்கோ குருக்கள்.''

தனது பிள்ளைகளுக்கு நல்ல கல்வியறிவூட்ட வேண்டுமென்று குருக்களுக்கும் மனைவிக்கும் ஒரே நோக்கமாயிருந்தது. அவர்கள் வசித்துவந்த தும்பளை அக்கிரகார வீதியிலிருந்து போய் வந்து படிக்க பிள்ளைகளுக்கு பருத்தித்துறைப்பள்ளிக்கூடங்கள் வசதியாக விருந்தன. பதினைந்து வயசு ராமச்சந்திரனுக்கும் இளைய மகன் பதினொரு வயசுச்சரவணனுக்கும் இரண்டு மாசங்களுக்கு முன்பு உபநயனத்தையும் முடித்து விட்டார். அவர்களின் படிப்புக்கு இந்தக் கிராமத்தில் வசதியிருக்குமோ என்பதால்தான் அவர்களின் கோரிக்கைக்கு அவர் தயக்கங்காட்டினார்.

''உங்களைத் தெய்வம் மாதிரி வைச்சிருப்பம் குருக்கள். ஒருசாட்டும் சொல்லாமல் குடும்பத்தோடு வந்திடவாக்கும். வரியம் பிறக்க இருவது நாட்கிடக்கு. உங்கடை கையாற்தான் வரியப் பிறப்புப் பூசை நடத்த வேணும்''- அவர் மீது பற்றுக் கொண்டவர்களின் குரல்கள் தழு தழுத்து விட்டன.

அந்த அன்பான வேண்டுகோளுக்கு முன்னால் மறுத்துப் பேச குருக்களால் இயலவில்லை. மனைவி ஜானகியோடும் தனது தாயாருடனும் கலந்துபேசி அந்த ஊருக்கு வந்து விடுவதென்ற முடிவுக்கு வந்து விட்டார்.

ஜே. எஸ். சி. படித்து முடித்து விட்ட மூத்தமகன் இராமச்சந்திரனைப் படிப்பை நிறுத்தி, சமஸ்கிருதமும் வேத சாஸ்திரமும் படிப்பதற்கு திருக்கேதீஸ்வரம் குருகுலத்தில் சேர்த்துவிட்டு, ஏழாம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கிற சரவணனையும் மனைவி ஜானகியையுங் கூட்டிக்கொண்டு

அந்தக் கிராமத்திற்குக் குடிவந்து விடுவதென்ற முடிவை அவர்களுக்குச் சொல்லி விட்டு குருக்கள் புறப்பட்டு விட்டார்.

அவர்கள் உள்ளத்தில் மகிழ்ச்சியும் திருப்தியும்.

வெள்ளைக் கூடாரம் கட்டிய பெரிய வில் வண்டியின் மாடுகளின் கழுத்துச் சதங்கைகள் ஜல் ஜல்லென ஒலித்தன.

2

"அம்மா அம்மோவ்!... இந்தப்பெட்டியை ஒருக்கா இறக்கி விடவாக்கும் ......... காலெல்லாம் கொதிக்குது. உச்சிக்கு வரக்குமுந்தியே வெயில் சுட்டுப் பொசுக்குது".

வீட்டுக்குள்ளிருந்து ஜானகி அம்மா வெளியே வந்து, வள்ளியம்மை ஆச்சியின் தலையிலிருந்த அரிசிப்பெட்டியை இறக்கினாள்.

''இதிலை ஒருகொத்து இருக்கு அம்மா ........ நாளைக்குப் பிள்ளையாருக்குச் சதுர்த்தியெல்லே ......... ஏலக்கூடியதை மோதகமாய் அவியுங்கோ. மிச்சத்தைஎ வச்சுச்சாப்பிடுங்கோ.'' - ஆச்சி சம்மணம் போட்டு உட்கார்ந்து கொண்டு உள்ளங் கால்களைத் தடவினாள்.

அரிசியைக் கொண்டுபோய் உள்ளே வைத்துவிட்டு வந்த ஜானகி அம்மா ஒரு லோட்டா நிறைய மோர் கொண்டு வந்து கொடுத்தாள். குளிர்ந்த மோரை அருந்திமுடித்ததும் ஆச்சி நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

''எங்கடை பெண்டுகளுக்கு இப்படி இதம்பதமாகச் செய்யத் தெரியாதம்மா......... அது சரி மகள் அனுப்புற பால் காணுமே ஆக்கும்......... கோயிலுக்கும் குருக்களுக்கும் குடுக்க வேணுமெண்ட அவளின் ஆசைப்படி அவளின்ரை மறறச் செங்காரிப்பசுவும் கண்டுபோட்டிருக்கு!''

''பெரிய செம்பு முட்ட முட்ட காலையிலும் மாலையிலும் தாராளமா அனுப்புறா. பணம் கொடுத்தா மறுத்து விடுறாளாமே...... ரொம்பநாளுக்கு இப்பிடி தந்துகொண்டிருந்தா கட்டுபடியாகுமா? எங்களுக்கு மனச் சங்கடமாயிருக்கே'' எனச்சொன்ன ஜானகி அம்மாவைப் பார்த்து ஆச்சி சிரித்தாள்.

கோயிலுக்கும் குருக்களுக்கும் குடுக்க குடுத்து வைக்க வேணும். அதை விட்டு விட்டு,........ வெத்தலைப் பெட்டியை ஒருக்கா கொண்டுவர வாயெல்லாம் புளிக்குது''

வெற்றிலையில் அளவாகச் சுண்ணாம்பு பூசி, அதன் மீது பாக்குச் சீவலை வைத்து, இடது உள்ளங்கையைக் குவித்துப் பிடித்து, அதற்குள் வெற்றிலை பாக்கை வலதுகைப் பெருவிரலால் வள்ளியம்மை கசக்குகிற அவதானத்தைப் பார்த்து ஜானகி அம்மா ரசித்துக் கொண்டு நின்றாள்.

''கல்வீட்டு முருகேசற்றை தாயின்ரை திவசம் இதுவரையில முடிஞ்சிருக்கும். முருகேசர் பசி கிடக்கமாட்டார் ........... குருக்கள் வாற நேரமாச்சு ........ நாம் சமைச்சுப் போட்டுதே?'' - வெற்றிலையைக் குதப்பிக்கொண்டு ஆச்சி கேட்டாள்.

''சமையல் முடிச்சாச்சு ......... பசியாக இருந்தால் நீங்க சாப்பிடலாம். . கொண்டு வரட்டா!''

''இண்டைக்கு வேண்டாம் ......... முருகேசற்றை பேத்தி சாப்பிட வரவேணுமெண்டு வந்து சொல்லிப்போட்டுப் போனவள் ...... நேரமாப் போச்சு. வாறன்.'' - ஆச்சி எழுந்து போய்விட்டாள்.

வீட்டுக்குப் பின்புறம் சின்னப்புவின் மகள் சீதேவிப் பெட்டை அரிசி இடித்துக் கொண்டு நின்றாள்.

முருகேசரின் இளைய மகன் கழுத்தை அமுக்க அமுக்க கொண்டு வந்த பெரிர கடகத்திலிருந்து அரிசி காய்கறி

களை அவசரமாக குருக்கள் வீட்டுத் திண்ணையிலிறக்கி விட்டு, திவசச் சாப்பாட்டுப் பந்திக்குப் பறந்தான்.

ஓலை நீக்கின காவோலை மட்டைகளின் பெரிய கட்டு ஒன்றை தலையிலும், ஒரு நுங்குக் குலையைத் தோளிலும், சுமந்து கொண்டு வடக்குப்பக்கத்திலிருந்து தோட்ட வெளியைத் தாண்டி வந்த சிலம்பன், நுங்குக்குலையைக் குருக்கள் வீட்டு முற்றத்தில் வைத்து விட்டு, சின்னப்பு ஆசாரி வண்டியில் கொண்டு வந்து கோடிப் புறம் ஏற்கனவே குவித்திருந்த கழிவு பலகைக் கும்பி அருகில் தலைச்சுமையை யிறக்கினான்.

''சின்னப்பற்றை புறவெட்டு விறகோடு இந்த மட்டையுஞ் சேர அடுப்பு கணகணப்பாய் எரியுமாக்கும்.''

ஒரு பெரிய வாழையிலையில் ஏழு எட்டு இட்லிகளைப் போட்டு, சட்னியும் கறிகளும் வைத்து, இலையை மடித்தெடுத்து, வேலிப் பூவரசமர நிழலில் ஒதுங்கிநின்ற சிலம்பனிடம் ஜானகி அம்மாள் கொடுத்தாள்.

தெற்கே பசேல் என்ற பரந்தவயல்- வடக்கே திரும்பினால் தோட்டவெளி - கத்தரிக்காய், வெண்டைக்காய், தக்காளி, வெண்காயம், மிளகாய், பசியகீரை ........ அங்கு காலத்துக்குக் காலம் எது விளைகிறதோ, அது தேவைக்கு அதிகமாகவே குருக்கள் வீடு தேடி வந்துவிடும்.

அந்தக் கிராமத்தையும் அன்பும் பக்தியும் கொண்டு அவர்களின் தேவையை அக்கறையோடு கவனித்து வரும் அந்த மக்களையும் ஜானகியம்மாவுக்கு மிகவும் பிடித்து விட்டது.

வைத்தீஸ்வரக் குருக்கள் காலைப் பூசையை ஏழு மணிக்கு முடித்துவிட்டு ஒன்பது மணிபோல கந்தபுராண படனத்தை ஆரம்பித்து விடுவார். பாடலுக்குப்பயன் சொல்வதில் அவருக்கு நல்ல பயிற்சி. பெரியதகப்பன் சுப்பிரமணிய சாஸ்திரிகள் கந்தபுராணத்துக்கு உரையெழுதி காண்டங் காண்டமாகத் தமது அச்சியந்திரசாலையில் பதிப்பித்தபோது, இள

வயசில் அவருடனிருந்து, அவற்றைப் 'புறாவ்' பார்த்த அனுபவத்தில் பாடலும் பொருளும் அவருக்கு மனப்பாடமாயிருந்தன.

ஒரு மணிக்கு காப்புச் சொல்லிப் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு, மதிய உணவுக்குச் செல்லும் போது, அங்கு ஏழு எட்டுப்பேர் தான் மிஞ்சியிருப்பர். அவர்களுக்கும் அந்நாட்களில் குருக்கள் வீட்டில் சாப்பாடு காத்திருக்கும். பசித்து வருபவர்களுக்கு எந்நேரமும் தவறாமல் ஜானகி அம்மா அன்னம் பாலிக்கத் தவறுவதேயில்லை.

மூத்த மகன் இராமச்சந்திரசர்மாவை இரு மாசத்துக்கொரு முறை சங்குப்பிட்டிப்பாதையால் போய், திருக்கேதீஸ்வரத்திலிருந்து கூட்டி வந்து ஒரு கிழமை தம்முடன் வைத்திருந்துவிட்டு அனுப்புவர். அவன் பாடமாக்கிய சுலோகங்களைச் சொல்லக்கேட்டும், உச்சரிப்புகளைத் திருத்தியும், கிரியைகளின் சந்தேகங்களைத் தெளியவைத்தும் உதவுவார். சில மாதங்களிலேயே அவன் தனியாகத் திருக்கேதீஸ்வரம் போய்வரப் பாதை பழகிவிட்டான்.

கட்டுக்குடுமியும், திரிபுண்டரக்குறியும், ஒல்லி உடம்பும், கெண்டைக்காலுக்கு மேல் உயர்ந்து நிற்கும் வேட்டியும், இடது தோளில் தவழும் பூணூலுமாக அந்தக்கிராமத்தில் அவனைக்காணும் போது, அவ்வூர் மக்கள் குருக்களுக்குப் பிறகு தங்கள் கோவிலுக்கு ஒருவாரிசு உருவாகிவிட்டதென்ற பக்தி கலந்த திருப்தி கொள்வதுண்டு.

இளைய மகன் சரவணன், அந்த ஊரின் ஒரே பள்ளிக்கூடமான கிழக்குப் பகுதியிலிருந்த சரஸ்வதி வித்தியாலயத்தில் ஏழாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தான்.

''சரவணன் பிறக்கும் போதே அவன் ஜாதகத்தில் புதனும் குருவும் உச்சம். அவனைப் பெரிய படிப்பு படிக்க வைக்க வேணும்'' எனக்குருக்கள் தம்பதி ஆசைப்பட்டுக் கொண்டிருந்தனர்.

# 3

''பறங்கி வாத்தி''

மணியடித்து, மாணிக்கவாத்தியாரின் தலை மறைய, பூவரசந்தடி உண்டாக்கிய தழும்பைத் துடைத்துக் கொண்டு அந்தமாணவன் தனது கோபத்தை வார்த்தையில் வெளிப்படுத்தி ஆற்றிக் கொண்டபோது, சகமாணவர்கள் சிரித்துவிட்டனர். சரவணனுக்கும் சிரிப்புவந்து விட்டது. மாணிக்க வாத்தியாரை அந்த வகுப்புக்குப் பிடிக்காது ஒட்டகம் மாதிரி உயர்ந்த கழுத்து: சுருட்டைச் சப்பிக் கொண்டிருக்கும் வாய், பூனைக்கண், செம்பட்டைமயிர், கண்ணின் புருவ மயிர் கூட செம்பட்டையாய்த்தானிருக்கும், நிறம் நல்ல சிவப்பு.- அவர் தான் கணக்கு வாத்தியார். நெல்லியடியில் பஸ் இறங்கி வியர்க்க வியர்க்க விறு விறென்று ஓடிவந்து... வந்தவுடனேயே ஒரு கை இலேஞ்சியால் நெற்றி வியர்வை துடைக்க, மறுகை கரும்பலகையில் கணக்குப் போட்டுவிடும். உடனே கையில் பிரம்பைத் தூக்கிக் கொண்டு உட்கார்ந்து விடுவார்.

அன்றாடம் அந்த வகுப்பின் முக்கால்வாசிப் பேரின் முதுகை அவரின் கைப்பிரம்பு பதம் பார்க்கத் தவறுவதில்லை. ஆனால் சரவணனுக்கு ஒருநாளும் அவர் அடித்தது கிடையாது. அடிப்பது போல வெருட்டிக் கொண்டு வருவார், அடிக்கமாட்டார். எக்கச்சக்கமாக ஏசுவார்.

''ஐயர்ப் பெடியனாய்க் கிடக்கு ......... அல்லது தோலை உரிச்சுப் போடுவன் ......... இந்தச் சின்னக் கணக்கைச் செய்யத் தெரியாதோ? ...... எழும்பி நில்லும்'' - அந்த உறுமலுக்குப் பிறகு கணக்குப்பாடத்தைத் தயார்ப் படுத்திக் கொண்டு போக அவன் மறப்பதேயில்லை.

அந்தப் பள்ளிக்கூடத்தில், தலைமை உபாத்தியாயரையுஞ் சேர்த்து ஆறு ஆசிரியர்கள் மட்டுமே படிப்பித்தனர். நால்வர் ஆண்கள், ஏனைய இருவரும் பெண்கள்.

நாஷனல் சட்டைக்குள் அடங்காத வயிறும், உச்சந்தலையில் வழுக்கையும், தோளில் பறக்கவிட்ட சால்வையும். நெற்றியில் அப்பிய விபூதியின் மேல் சந்தனப் பொட்டும் வெற்றிலை வாயுமாக ஓலை வேய்ந்த அந்த நீண்ட மண்டபத்தின் தொங்கலில் உட்கார்ந்து, நாள்முழுவதும் கொப்பிகளையும் இடாப்புகளையும் புரட்டிக் கொண்டிருக்கிற தலைமை ஆசிரியர் கிழமையில் மூன்று தடவை சைவ சமயம் போதிக்க அந்த வகுப்புக்கு வருவதுண்டு. கோயில் மணி தூரத்தில் கேட்டாலும், வலக்கையால் நெஞ்சையும் தலையையும் தொட்டுக்கொள்ளத் தவறமாட்டார்.

கனகசபை வாத்தியாரில்தான் அவர்களுக்கு நல்ல பிடிப்பு. தமிழும் குடியியலும் படிப்பிக்கிறவர். எண்ணெய் அளவாக வைத்து கன்ன உச்சி பிரித்த குறொப் மயிர், தலையில் நெளி நெளியாக இருக்கும். வடிவான முகம்: முகத்துக்களவான மீசை: பளிச்சென்ற வெள்ளை உடுப்பு - அவரின் பல்வரிசை கூட சிரிக்கும் போது அப்படி வெள்ளையாகத்தானிருக்கும். அணைத்து மிகஅன்பாகப் படிப்பிப்பார். விளங்காவிட்டால் மீண்டும் ஆறுதலாக தெளிவு படுத்துவார். அவர்கள் எல்லோருக்கும் அவரில் நல்ல பிடிப்பு. கோயிலின் மேற்குப்பகுதியிலிருந்து அவர் சைக்கிளில் வரும்போது சரவணன் அவரை சந்திப்பதுண்டு.

அவன் வீட்டில் வியாசம் எழுதிக் கொண்டு வருகிறநாட்களில், அவனை அவர் வகுப்பில் பெரிதாக வாசித்து முழு மார்க்ஸ் போட்டு, உற்சாகப் படுத்தி விடுவார். அவர் குடியியல் பாடம் நடத்துகிற போது அவன் மிகக் கூர்மையாகக் கேட்டுக் கொண்டிருப்பான்.

புவியியலும், சரித்திரமும், படிப்பிக்க வருகிற கணேசு வாத்தியார் ஒரு வெக்கறை. வெளியே சத்தங் கூட வராது. வகுப்பு நேரம் முழுவதும் புத்தகப் பக்கங்களையே வாசித்துப்போட்டுப் போய்விடுவார். ஆனால் மாணவர்களுக்குப் புள்ளி போடுவதில் அவர் வெகு தாராளம்.

ஆங்கிலம் படிப்பிக்கிற அன்னம்மா அக்காவுக்குக் கிட்ட நெருங்க முடியாது. முக்கால் மணிநேரமும் சுறுசுறுப்பாக வே இருப்பா. தினமும் பூப்போட்ட வெள்ளைச் சேலை கட்டிக்கொண்டு வருவா. வாக்குக் கண் வெளியே தெரியாமலிருக்க கண்ணாடி போட்டிருப்பா. சொற்களைப் பாடமாக்கி வராதவர்களை வகுப்புக்கு வெளியே நிற்க வைத்து விடுவா. அவவின் வாயில் ஆங்கிலம் தூள்பறக்கும். உச்சரிப்பில் அத்தனை அட்சர சுத்தம்.

கட்டைச் சிவப்பு ராசாத்தி அக்கா, கீழ் வகுப்புகளுடன் நின்றுவிடுவா. சரவணனின் வகுப்புக்கு பாடம் எடுப்பதில்லை,

கட்டையாக வெட்டிய மயிருக்கு தாராளமாக அம்மா பூசிய நல்லெண்ணெய் கசிய, நெற்றியில் நீற்றுக் குறியும், சந்தனப் பொட்டும், குறுகுறுத்த விழியும் பூணூலை மூடிய சால்வையும் தோளுமாக தனிவாங்கில் முதல் வரிசையிலிருக்கும் சரவணன், அந்த வகுப்புக்கு வரும் எந்த ஆசிரியரின் பார்வையிலிருந்தும் தப்பிவிட முடியாது. அதனால் படிப்பில் மிகக் கவனமாயிருக்க வேண்டி ஏற்பட்டது.

மாணவர்கள் - பாவம்! - அவன் பூணுலுக்குப் பயந்து, அவனுக்குக் கிட்ட நெருங்குவதேயில்லை. ஏனைய பிள்ளைகள் விளையாட்டு மைதானத்தில் ஓடியாடுகிறபோது கூட, அவர்களுடன் சேர முடியாமல், வகுப்பறையில் சரவணன் சப்பென்று உட்கார்ந்தே இருக்க முடிந்தது.

மத்தியானச் சாப்பாட்டுக்கான 45 நிமிட இடைவேளையில், வேட்டியை மடித்து முழங்கால்வரை கட்டிக் கொண்டு, அந்த ஒழுங்கையின் புழுதியை வாரிக் கிழித்துக்கொண்டு ஓடிவந்து, அம்மா கொடுக்கிற செம்பு நீரால் கால்முகத்தைக் கழுவிக்கொண்டு, நின்ற நிலையில் கொறித்து விட்டு ஓடிவிடுவான். அந்த அப்பியாசம் அவன் உடம்புக்குப்

போதவில்லை. அதனால் நீர் பிடித்து கொழு கொழு என உடம்பு இருந்தது.

கோயில் மேற்கு வீதியில் குளக்கரைக்கு அப்பால், மாலை வேளைகளில் இளைஞர்கள் கோடு அடித்து, குறுக்கும் நெடுக்குமாக ஓடிக் கிளித்தட்டு மறித்துக் கும்மாளமடிக்கிற போது, இவன் வீதியில் நின்று வேடிக்கைதான் பார்க்க முடிந்தது.

''சரவணா! அவையோடு சேர்ந்து விளையாடினால் ஆசாரம் கெட்டுப் போமென்று ஊராட்களுக்குப் பிடிக்காது...... நீ தனியாக விளையாடு.'' குருக்கள் - கூறியிருந்தார்.

''சரவணா! இந்தக் கோயிலைச் சுற்றி ஓடினால் போதும். உடம்பு இளைத்து இறுகிவிடும்''- அம்மா சொற்படி அப்படி ஓடி எட்டுப் பத்து நாட்களிலேயே அவன் சலித்துப் போனான்.

மற்றவர்கள் தொடமுடியாத அடுத்த விளையாட்டு சைக்கிள் 'றிம்' உருட்டல் தான்.

மாலை வேளைகளில் கச்சை கட்டிக்கொண்டு, கையில் சில்லும் கோலுமாக கோயில் வீதியைச் சுற்றியோடும் சரவணனைக் கலைத்துக் கொண்டு சிறுவர்கள் மொய்க்கத் துவங்கினர்.

''ஐயா எனக் கொருக்கா தாரும்........ எனக்கொருக்கா''

''சில்லு வடிவா ஓடுது........ ஐயா ஒருதரம் நானும் ஓடத் தாங்கோ. எனக்குத் தாங்கோ''

சரவணனுக்கு குஷிபிறந்து விட்டது. அவர்கள் கெஞ்சக் கெஞ்ச, தலையைத் தாழ்த்தி நிமிர்த்தி வெகு வேகமாக ஓடினான். விரைவில் களைத்து முச்சிரைக்கத் தொடங்க 'இந்தா பிடி' எனச் சில்லைத் தூக்கி எறிந்துவிட்டு உட்கார்ந்து விட்டான்.

அவர்கள் விளையாடி விட்டுக்கொடுக்கும் சில்லை, உருட்டிக் கொண்டோடி வந்து குளக்கரையில் சரித்துப்படுக்க வைத்து விட்டு, தொப்பென்று குளத்தில் குதித்து, வாயளவு நீருக்கு நீந்திச் சென்று, அதில் எம்பி எம்பிக் குளிப்பது அவனுக்குப் பிடித்துப் போய்விட்டது. மாலைப் பூசை ஆயத்த மணி ஒலிக்க வெளியே வந்து, வேட்டியை மாற்றிக் கொண்டு, வீட்டில் குந்தியிருந்து, விபூதியைக் குழைத்து .........சிரசைத் தொட்டு......... நெற்றியிலும் நெஞ்சிலும் ......... கைகளில், தோள்களில் தடவி, வலது கரத்தால் பூணூலைப் பிடித்து மூக்கையும் வலக் காதையும் தொட்டு சரவணன் சந்தியா வந்தனம் செய்வதைப் பார்த்து ஜானகியம்மாவுக்குப் பெருமையும் சிரிப்புமாகவிருக்கும்.

ஓம் புவர் புவஹம: தத் சதுர் வரேண்யம்.

பர்க்கோ தேவஸ்ய தீமஹி தீயோ யேன

ப்ரசோதயாத்......... ஓம் புவஹ ......... ஓம் சுவஹ .........

அந்தக் குஞ்சுவாயின் காயத்திரி ஜப உச்சரிப்பைக் கேட்டு அந்தத்தாய் அவன் குழப்படிகளை மறந்து மனம் குளிர்ந்து போய்விடுவாள்.

மாலைப் பூசை முடிந்தவுடன் குருக்கள் வீட்டுக்குத்திரும்புவதில்லை. கோயில் வாசலில் அமர்ந்திருந்து, அங்கு வருபவர்களின் துக்கம் துயர்களைக் கேட்டு, அவற்றின் நிவிர்த்திக்காகப் பிரார்த்தித்து ஜெபித்து, ஆறுதல் சொல்லி அவர்களை ஆசீர்வதித்து விபூதி கொடுத்து வீடு திரும்பும் போது, சரவணன் மும்மரமாகப் படிப்பில் மூழ்கியிருப்பான்.

மாணிக்க வாத்தியாரின் உறுமல்......

அன்னம்மா அக்காவின் கடுகடுப்பு......

கனகசபை வாத்தியாரின் அரவணைப்பான படிப்பித்தல்...... சரவணன் மிகக் கவனமாகப் படிப்பில் மூழ்கிருந்தான்,

## 4

அத்தோட்ட வெளியின் ஆகாயத்தில் சிறியதும் பெரியதுமாக பல நிறக் காற்றாடிகள், உயரவும் பதியவுமாக ஒழுங்கு நிரையின்றிப் பறக்கத் துவங்கி விட்டன.

இவ்வளவு காலமும் சுட்டெரித்துக் கொண்டிருந்த சூரியனின் வெம்மைக் கூர்களை உப்பளப்பக்கமாக உதைத்து எழுந்து ஊதிக்கொண்டு வந்த சோளகக் காற்று மழுங்கடித்து விட்டது. பனை மரங்கள் கூட தலையசைத்து அந்த இதத்தை ரசிக்கத்துவங்கி விட்டன.

விளைந்த வெண்காயம் கிண்டி எடுக்கப்பட்டு, தாரோடு பிடிகளாகி, கமக்காரர்களின் வீட்டு விறாந்தைகளில் குலைகளாகத் தொங்கிக் கொண்டிருந்தன.

மதாளித்து நின்ற புகையிலைச் செடிகள் வெட்டிச் சரிக்கப்பட்டு, இலை இலையாகச் சீவப்பட்டு, பதம்போடப்பட்ட பாடங்களில் கிடந்து ஊறி, புகைக் கொட்டில்களில் பாணி குடித்துக் கொண்டிருந்தன.

தோட்ட வெளி வெறுமையாகக் கிடந்தது.

கோயில் வீதியில் கிட்டிப்புள்ளும் கையுமாக ஓடித்திரிந்த சிறுவர்கள், சோளகம் பிறந்ததும், பட்டமும் நூலுமாக அத்தோட்ட வெளியில் கும்மாளமிட்டனர்.

முக்கோணத்துக்குக் கீழ் பெரிய பானை வயிறுத்தோற்றத்தில் பச்சையும் சிவப்புமாக, பரட்டை வாலோடு 'சீனத்தான்'.........

வாலில் ஒடுங்கி, வயிற்றடி பருத்து, கழுத்தடி சிறுத்து, நெளி நெளி உடம்போடு 'கரும் பாம்பன்'...........

மூக்கை நீட்டிக்கொண்டு சிறகை விரித்து சிங்காரமாகவின் கூவிப் பறக்கும் 'வெள்ளைக் கொக்கன்'........

விபூதிக் குறிபோல அடுக்கடுக்காக வெவ்வேறு நிறங்களைப் பூசிக் கொண்டு, நீட்டு வாலைத் தூக்கிப் பறக்கிற 'நீள் சதுரப் பட்டம்' ………

முக்கோணத்துக்குக் கீழ் சற் சதுரப் பெட்டியையும் சீலைத் துண்டு வாலையும் தூக்கிப்பறக்கிற 'சிவப்புச் சாணத்தான்'…… …

கோழிக்குஞ்சைக் கொத்திக் கொண்டு ஓடிப்போய் விடுவேன் எனச் சொல்வது போல தலையை ஆட்டி ஆட்டி உயரே 'பருந்து' பறந்து கொண்டிருந்தது.

மேய்வதற்குக்கட்டிய ஆட்டையும் குட்டியையும் இடம் மாற்றிக் கட்டிவிட்டு, வள்ளிப்பிள்ளை ஆச்சி தோட்டத் தலைப்பில் செருக்கிய புல்லை கடகத்துள் அடைந்து தலையில் தூக்கி வைக்கிற போது, கையில் ஐந்து ஆறு முருங்கைக் காய்களுடன் பெரு வரம்பில் பாக்கியம் நடந்து வந்து கொண்டிருப்பதைக் கண்டுவிட்டாள்.

''ஒரு விசளம் பாக்கியம்…… எத்தனை முறை வந்திட்டன். மனிசனிட்டைச் சொன்னியே …… அடுத்த மாசம் குடி பூர வேணுமெண்டு மூத்த மருமேன் ஒற்றைக்கால்லை நிக்கிறார் சின்னப்பர் நிலை கதவு வேலையை முடிச்சுத்தாறாரில்லை. சின்னப் பெடியளுக்குப் பட்டங் கட்டிக் குடுத்துக் கொண்டு அவங்களோடை குதிச்சு விளையாடிக் கொண்டு திரிகிறார் …… ஒருக்கா இறுக்கி அவரிட்டைச் சொல்லு மோனை''

''நான் சொல்லி அவர் கேக்கப் போறாரே ஆச்சி. காலம்பற எழும்பினால் மனிசன் நேரான ஈச்சமட்டை வட்டில் மட்டை தேடிக்கொண்டு புறப்பட்டிடும். அதைக்கொண்டு வந்து காயப் போட்டுப் பதமாக்கி பக்குவமாய் வெட்டி… மனிசனுக்கு பட்டினியே தெரியாது. வெறிபோல அதிலயே முழுகிடும். ஆரும் குழப்பினமெண்டா அவருக்கு வாற

கோவத்தைத் தெரியுந்தானே ஆச்சி.'' - பாக்கியம் ஆச்சியிடம் சொன்னாள்.

''ஓம் மேனை இந்தக் காத்து அடங்கிற வரைக்கும் சின்னப்பரைப் பிடிக்கேலாது ...... நீயும் ஒருக்காச் சொல்லி விடு ...... உதென்ன முருங்கைக்காயோடை போறாய்?''

''குருக்களம்மாவுக்கு குடுக்கக் கொண்டு போறன் எணை. அவையளுக்கு நாங்க குடுக்காட்டால் ஆர் குடுக்கிறது!''

''எங்கடை குருக்களிலை எல்லாருக்கும் வாரப்பாடுதான்.'' நானும் வாறன் ... வாய் புளிக்குது ... அங்கை போய் ஒருக்கா வெத்திலை போடாட்டால் பத்தியப்படாது ...... வா.'' - ஆச்சியும் பாக்கியமும் தோட்டத்துப் பெருவரம்பில் நடந்து போகிற போது, அதற்கு மேற்கே குருக்களின் இளைய மகன் சரவணன் தனது காற்றாடியைப் பறக்க விடுவதற்கு முனைந்து கொண்டு நின்றான்.

கொப்பித்தாளைக்கிழித்து, தென்னோலை ஈர்க்கைச்செருகி சரவணன் தயாரித்த சின்னப் பெட்டிப் பட்டம் வாலைத் தூக்கி எழுந்து மறுகணமே மல்லாக்காகப் படுத்துவிட்டது.

''முச்சை சரியில்லை'' என அங்கு நின்ற ஒருவன் அதனைச் சரி செய்துவிட, பட்டம் மேலே எழும்பிவிட்டது. காற்றுக்கு எதிர்த்திசையில் வேகமாக ஓடி நூலை வலித்து இழுத்து, அளவாக விட்டுக்கொடுக்க சரவணனின் பெட்டிப் பட்டம் உயரே உயரே எழுந்து கொண்டிருந்தது.

சாணத்தானுக்குக் கிட்டப் போய் விட்டது.

சரவணனுக்கும் புளுகமாயிருந்தது.

''கிட்ட வராதை ஐயா ...... நூல் கொழுவினால் என்ரை பட்டம் அறுத்துப்போடும்''

கிழக்கே காலடி வைத்துச் சரவணன் ஓடத்துவங்க பாம்பனுக்குரியவன் சீறினான்.

''உந்தப் பீத்தற் பட்டத்தைக் கிட்டக் கொண்டுவந்து

என்ரை பட்டம் அறுந்துதோ .. ... உன்னாணை ஐயர் நடக்கிறது வேறை''

அந்தப் பேச்சும் வாலாட்டிக் குருவி போன்ற தனது சின்னப் பட்டமும் அவனுக்குப் பிடிக்கவில்லை. நூலைவலித்து விறுவிறெனப் பட்டத்தை இறக்கி நூலைச்சுற்றிக்கொண்டு வீடு புறப்பட்டு விட்ட சரவணனின் சோர்ந்த முகத்தைப் பார்த்த சின்னப்புவுக்குப் பரிதாபமாக இருந்தது.

''ஏண்டா சரவணா முகம் வாடியிருக்கு ...... யாரும் ஏசிட்டாங்களா?'' - சோர்ந்து போன மகனின் முகத்தைப்பார்த்து பதறிப் போய் ஜானகி அம்மா கேட்டாள்.

''என் காத்தாடி பீத்தலாம். எனக்குப் பெரிய பட்டமாக வாங்கித்தாங்கோ.'' - சர்வணனின் குரல் கரகரத்தது.

''ஓமாக்கும் குருக்கள். என்ரை அவரிட்டைச் சொன்னால் எல்லாற்றையையும் தூக்கியடிக்கக் கூடிய பெரிய பட்டமாய் கொண்டு வந்து குடுப்பார். சின்னப் பிள்ளைக்கு ஆசையாயிருக்கும்தானே ...... நான் அவரை வரச்சொல்லுறன். நாம் ஒரு சொல்லு சொல்லிவிட.'' - தேங்காய் திருவிக் கொண்டிருந்த பாக்கியம் சொன்னாள்.

சரவணனையும் ஜானகியையும் குருக்கள் பார்த்தார்.

முகம் பாவமாயிருந்தது.

'சரி' என்று சொல்லிவிட்டார்.

# 5

கொட்டு வாணம் போல எடுத்த எடுப்பிலேயே மேலே உயர்ந்து எழும்பிய அந்த எட்டு மூலைக்காற்றாடி கெம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தது. சரவணன் இடது கையில் நூற்கட்டையை இறுக்கிப் பிடித்து, மெது மெதுவாக நூலை இளக்கிவிட அவனின் வலக்கரம் அதனை வாங்கி

உயர்த்திப்பிடித்து, சுண்டிச் சுண்டி விட்டுக் கொண் டிருந்தது.

முகிலைத் தொட்டுக் கொண்டு, மேல் காற்றில் அந்தக் காற்றாடி நிதானமாகவும் கம்பீரமாகவும் பறந்து கொண் டிருந்தது.

அன்று காலை சின்னப்பு கையில் பெரிய எட்டு மூலைப் பட்டமும் வாயில் சிரிப்புமாக வீட்டு வாசலுக்கு வந்த போதே ''அம்மா பட்டம் வந்திட்டுது ...... சின்னப்பு எனக் குப் பட்டம் கொண்டு வந்திட்டார்'' என நிலத்தில் கால் கொள்ளாமல் சரவணன் மகிழ்ச்சியில் ஆரவாரப்பட்டான்.

சின்னப்பு கொடுத்த காற்றாடியை வாங்கித் தொட்டுத் தட விப் பார்த்தான். பச்சை, சிவப்பு, மஞ்சள், ............. கடதாசிக் குஞ்சங்கள் மூலைக்கு மூலை தொங்க, வெள்ளை உடம்பில் பொன்னிறத் தாமரைப்பூப் போட்ட எட்டு மூலைப்பட்டம் அவன் தலையைத் தொட்டுக் கொண்டு நின்றது. அவனுக்குப் பூரிப்பாயிருந்தது. அதனைக் குத்தி நிறுத்திப் பின்பக்கம் திருப்பிப் பார்த்துவிட்டுக் கேட்டான். '' ஏன் எணை! இதுக்கு விண் பூட்ட வில்லையே?''

''குட்டிக் குருக்களின்ரை ஆசையைப்பார் ...... விண் பூட்டி னால் பிராமணப் பிள்ளை இதைத் தொடக்கூடாது. நாருக்கு கள்ளுப் பூசித்தான் பதப்படுத்தி விண் கட்டை யிலை பூட்டவேணும்'' - சின்னப்பு விளக்கிச் சொல்ல, ஜானகி அம்மாவின் முகம் அருக்குளித்தது.

''இந்தக் காத்தாடி ரொம்ப ஜோராயிருக்கடா ...... விண் பூட்ட வேண்டாம் ...... கொண்டு போய் விளையாடு'' - பட்டமும் கையுமாக சரவணன் வெளியே ஓடுகிற வேகத் தைப் பார்த்து குருக்களும் மனைவியும் குறுஞ் சிரிப்பு சிரித் தனர்.

முகிலைத் தொட்டுக் கொண்டு மேல் காற்றில் அந்தக் காற் றாடி கம்பீரமாக ................

'சோக்காய் பறக்குது! ......நல்லவடிவு.!''

''எங்களை மிஞ்சிய இந்த எட்டு மூலைக்காரன் யார்!'' - அத்தனை கண்களும் சரவணனை மொய்த்தன.

''அட, அது ஐயற்றை பட்டம்!''

''ஐயர் பட்டம் விடுகிற எடுப்பைப்பார்.''

''பொறு பொறு -உந்தப் பிராமணிக்குப் பாடம் படிப்பிக்க வேணும்''

சந்தோஷம் - ஆச்சரியம் - பொறாமை - ஏளனம் - அந்தப் பிஞ்சு நெஞ்சங்களிலும்தான் எத்தனை வகையான உணர்வுகள்!

மேல் காற்று பலமாகிவிட்டது. முகில்கள் எதிர்த்து நிற்க முடியாமல் பின்வாங்கி வடக்கே வேகமாக ஓடத் துவங்கி விட்டன.

சரவணனின் கையை எட்டு மூலை இழுத்தது. நூலை வலித்து இழுத்து இலாவகமாக இடுப்பில் சுற்றிக்கொண்டு, குளத்தடியை நோக்கி அடிமேல் அடிவைத்து மெது மெதுவாக நடந்து வந்து, மருத மரத்தில் நூலைச்சுற்றிக் கட்டிவிட்ட போதுதான் நிம்மதியாக இருந்தது, அந்த நிழலில் உட்கார்ந்து பச்சை, சிவப்பு, மஞ்சள் குஞ்சங்களும், நீட்டு வாலுமாக ஆகாயத்தில் மிதக்கும் தனது காற்றாடியின் அழகை ரசித்துக்கொண்டிருந்தான்.

காற்றுக்குத்தாக்குப் பிடிக்க முடியாமல் ஏனையவை இறங்கிக் குப்புறப் படுத்துக் கொள்ள, அந்த எட்டு மூலை மட்டும் உச்சத்தில் குஷாலாகப் பறந்து கொண்டிருந்தது!

களைத்துப்போன சிறுவர்களில் பாதிப்பேர் தமது காற்றாடிகளோடு சாப்பிடப் போய்விட்டனர். மீதிப்பேர் மர நிழலில் உட்கார்ந்து ஆகாயத்தைப் பார்த்து சரவணனின் எட்டு

மூலையின் ஒவ்வொரு அசைவைப் பற்றியும் வர்ணனை செய்தபடியிருந்தனர்.

சரவணனைச் சாப்பிடக் கூப்பிடக் குருக்கள் குளத்தடிக்கே வந்து விட்டார்.

''நீ சாப்பிட வா ......அதுவரை பிள்ளைகள் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுவார்கள்.''

வயிறு பசிக்க அவன் அவருடன் கூடப்போய் விட்டான். அவ சர அவசரமாக அள்ளி அடைந்து விட்டு, வெளியில் வந்து கை கழுவுகிற போது ஆகாயத்தைப் பார்த்தான், கோயில் கர்ப்பக்கிரக ஸ்தூபிக்கு மேலால் அவன் காற்றாடி நிதான மாக உயரத்தில் பறந்து கொண்டிருந்தது.

தெற்கு வீதி மதிலோரமாக நடந்து வந்து மேற்கு வீதிக் குத் திரும்புவதற்கிடையில் அது நடந்து விட்டது.

''பட்டம் அறுத்துப் போட்டுது!''

''ஓடுது பட்டம் ...... ஓடுது ...... ஓடுது!''

''ஐயற்றை பட்டம் அறுத்துப் போட்டு ஓடுது ......''

' ஹோஹோ...... கூ...... கூய்''

எல்லாச் சிறுவர்களும் சத்தமிட்டவாறு காற்றாடியைக் கலைத்துக் கொண்டு வடக்குப்புறமாக ஓடினர். இரண்டு மூன்று பேர் முழுசிக் கொண்டு மர நிழலில் உட்கார்ந் திருந்தனர்.

காற்று உதைப்பினால் காற்றாடி வேகமாக ஓடிக் கொண் டிருந்தது. சரவணன் வேட்டியை இறுக்கிக் கச்சையாகக் கட்டிக் கொண்டு அந்தத்திக்கை நோக்கி ஓடினான். கால் கள் பிடரியைத் தொடும் வேகத்தில் ஓடினான்.

தோட்டவெளியின் கீரைமுள்ளும் நெருஞ்சிமுள்ளும் உறுத்து கின்ற உணர்ச்சி கூட அவன் கால்களுக்குத் தெரியவில்லை. பள்ளமும் திடலும் பாராமல் ஏகாக்கிர சிந்தனையோடு

ஓடினான். காற்றாடியில் வைத்த கண்ணை எடுக்காமல் நடுத்தோட்டத்தைத் தாண்டி ஓடியபோது, மேல் காற்றிலிருந்து விடுபட்ட பட்டம் பட்டெனக் கீழிறங்கி, சரிந்து மல்லாந்து, தள்ளாடித் தள்ளாடி இன்னும் பறந்து கொண்டிருந்தது.

அதனை எட்டிப் பிடித்து விடும் வேகத்துக்கு விசை கூட்டி மூசி ஓட,

'தடார்' - வெள்ளெலிப் புற்றில் வலக்கால் புதைய முகம் குப்புற அவன் விழுந்து விட்டான்.

கையை ஊன்றி எழுந்த போது முழங்காலில் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. தோளிலிருந்த பூணூல் கழன்று அறுந்து அவன் காலடியில்.........அதனை அவசரமாக எடுத்து அரையில் சுற்றிக்கட்டினான். அவன் வடக்கே நிமிர்ந்து பார்த்த போது அவனின் காற்றாடி தோட்ட வெளியைக் கடந்து, பனங் கூடலில், வட்டுகளில் மெதுவாக நழுவிக் கொண்டிருந்தது.

''ஐயற்றை பட்டம் பள்ளற்றை காணியுக்கை போய் பனையிலை பால் குடிக்குது.'' - துரத்திக் கொண்டோடிய சிறுவர்கள் களைத்துத்திரும்பிக் கொண்டிருந்தனர்.

ஆனால் சரவணன் திரும்பவில்லை, பச்சை சிவப்புக் குஞ்சம், தாமரைப் பூமேனி - அன்று காலையில்தான் அவன் கைக்கு வந்த, எட்டு மூலைப் பட்டத்தைத் தேடி பனங் கூடலின் காரை முட்களையும் கவனிக்காமல், கண்கள் பனை வட்டுகளைக் குடைய அவன் புது வேகத்தில் ஓடினான். பரட்டை நாய்களின் குரைப்பு வெருட்டல் கூட் அவன் காதுகளில் விழவில்லை.

பனங் கூடலின் கிழக்குப்பக்கக் குடிசையைத் தாண்டி வேகமாகக் கால் எடுத்து வைக்கிற போது, சடைத்த நுணா மரக் கொப்பில் நூல் கொழுவுப் பட்டு, அரைப்பனை உய

ரத்தில் அந்த எட்டு மூலை வாலாட்டிக் கொண்டு நிற்ப தைக் கண்டபோது அவனுக்கு மகிழ்ச்சியாயிருந்தது.

இரைக்கிற மூச்சும் வியர்வை ஒழுகும் உடம்பும் கச்சைக் கட்டுமாகத் தனது குடிசை வாசலில் நிற்கும் சரவணனைக் கண்டசின்னான் நடக்கக் கூடாதது நடந்து விட்டதுபோ லப் பதறினான்.

''ஏன் குருக்களையா இஞ்சை வந்தனியள்?'' - இரு கை களையும் தன் நெஞ்சில் வைத்து எடுத்து உதறிக் கொண்டு கேட்டான்.

''என்ரை பட்டம் அறுத்துக் கொண்டோடி வந்திட்டுது'' சரவணன் நுணா மரத்தைச் சுட்டிக்காட்டினான்.

சின்னான் ஓடிப்போய் ஏறி உச்சிமரக் கிளைக்குத் தாவி நூலைப்பிடித்து பட்டத்தை இறக்கிக் கொண்டு வந்து சரவணனிடம் கொடுத்தான்.

பச்சை, 'சிவப்பு, மஞ்சள்,..........கடுதாசிக்குஞ்சங்கள்.

வெள்ளை உடம்பில் பொற்தாமரைப் பூ..........................

தனது காற்றாடியை ஆசையோடு சரவணன் தடவிப்பார்த் தான்.

''முள்ளுக்கை போகாமல் ஒற்றையடிப் பாதையாலை போவம். நாம் முன்னுக்கு நடக்க குருக்கள்................ நான் கூட்டிக் கொண்டு போய் விடுறன்'' -சின்னான் இய னக் கூட்டுக்குள் பாளைக்கத்தியைச் சொருகிக் கொண்டு தளநாரையும் முட்டியையும் எடுத்துக் கொண்டு சரவண னுக்குப்பின்னால் நடந்து வந்தான்.

தோட்ட வெளிக்குப் போகிற பாதையைக் காட்டி விட்டு, சின்னான் வழிமரத்திலேறிக் கொள்ள, சரவணன் பனந் தோப்பைக் கடந்து தோட்ட வெளியில் கால் வைத்த போது, சிவப்பேறிய கண்களோடு மார்க்கண்டரும் மற்றும்

அவர் பகுதிப் பையன்கள் ஏழு எட்டுப் பேரும் அங்கு காத்து நின்றனர்.

''ஐயர்ப் பெடியனுக்கு பள்ள பகுதியில என்ன வேலை? இவையளுக்குத் திவசம் பண்ணவே இங்கை வந்தனீர்?'' அந்தப்பிரதேசமெங்கும் அதிரும் படியாக மார்க்கண்டரின் குரல் அட்டகாசமிட்டது.

சரவணன் நடுங்கிப் போய்விட்டான்.

தோட்டங் கொத்திக்கொண்டு நின்றவர்களும் கள்ளுக் கொட்டிலுக்குப் போய்க்கொண்டிருந்தவர்களுமாக, அங்கு ஐந்து ஆறு பேர் கூடி விட்டனர்.

''பாருங்கோ குருக்களின்ரை பெடியன்ரை ஆசாரத்தை! பூனூலைக் கழட்டி எறிஞ்சு போட்டு எளிய சாதியளின்ரை வீடெல்லாம் சுத்திக்கொண்டு வாறார்........ நாங்கள் நாளைக்கு எப்பிடிக் கைநீட்டித் திருநீறு வேண்டிறது?'' - மார்க்கண்டரின் வாய் தொன்னைதட்டிக் குளறியது.

விக்கித்து நின்ற சரவணன் விளக்கமாகச் சொல்ல முடியாமல், காற்றாடியை உயரத்தூக்கிக் காட்டினான்,

''ஐயர் எங்களுக்குப் போட்டியாய் பட்டம் விட வந்தார். நாங்கள் நூலை அறுத்துப் போட்டம். அது ஓடிப்போட்டுது''- பிதுங்குகிற கண்களும், காகங்கொத்திக் கிழித்த கடைவாயும், தெத்துப்பல்லும், சொறிபடர்ந்த உடம்புமாகத் தோற்றமளித்த அந்தப்பரட்டைத் தலையன் தாங்கள் புரிந்த சாதனையைச் சொல்லி அட்டகாசமாகச் சிரித்துப் பெருமைப் பட்டான்.

காற்றாடியுங் கையுமாக நிற்கிற சரவணனைப் பார்த்த போது மார்க்கண்டரின் கோபம் கூடிவிட்டது.

''கோயிலுக்கை இருக்க வேண்டிய ஐயருக்கு விளையாட்டு வேணுமோ?....... கொண்டாரும் பட்டத்தை'' -அதட்டி,

அந்தக் காற்றாடியைப் பறித்து, கிழித்து, முறித்து வீசி எறிந்து விட்டார்.

சரவணனுக்கு கண்களில் நீர் பூத்துவிட்டது.

''போட்டிக் காத்தாடி போச்சே!......... ஐயற்றை பட்டம் போச்சே......... கூ.... கூய்.''

அவர்களுக்கு இப்பொழுது பரம சந்தோஷம்!

''எல்லாரும் வாருங்கடா.........பெரிய ஐயரிட்டை இவரைக் கூட்டிக்கொண்டு போய் நல்ல பாடம் படிப்பிக்க வேணும்'' - மார்க்கண்டரின் உறுமலுக்கு அடங்கி அந்த ஆமாஞ்சாமிகள் பின்தொடர, மார்க்கண்டர் பகுதிப் பையன்கள் கைவிலங்கிட்ட கைதியைச் சூழ்ந்து வருவது போலச் சரவணனைச் சூழ்ந்து கொண்டு வர, மார்க்கண்டர் தலைமையில் அந்தப்பட்டாளம் கோவிலடிக்கு வந்தபோது குருக்கள் பதறிப் போனார்.

அங்கே நின்ற கோயில் எஜமான் கணபதிப்பிள்ளையரும் சின்னப்பு ஆசாரியும் ஏதோ என்னவோ என ஏங்கிப் போனார்கள்.

அதுவரை அடக்கி வைத்திருந்த ஏக்கத்தையும் துக்கத்தையும், உடைத்து தகப்பனாரைக் கண்டதும், சரவணன் வெடித்து விம்மத்துவங்கி விட்டான்.

''குருக்களையா! நீங்கள் தெய்வம் மாதிரி...... ஆனா உங்கடை மகன் செய்திருக்கிற நரகல் வேலையை அறிஞ்சால் கொண்டு போடுவியள்......... எளிய சாதியளின்ரை குப்பத்துக்கை உலாத்திக் கொண்டு வாறார்.'' -வெறி முறியாவிட்டாலும், பொருத்தமாகக் கதை சோடிக்கிற திறமை மார்க்கண்டரின் வாயிலிருந்து நழுவிப் போகவில்லை.

''சரவணா! உண்மையா?'' - குருக்களினால் நம்ப முடிய வில்லை.

''அப்ப. . இத்தனை பேர் கண்ணாலை கண்ட விசயம் பொய்யே? ஏன் பேசாமல் நிக்கிறியளடா அறுவாரே......... குருக்களையாவுக்குச் சொல்லுங்கோவனடா.'' - அந்த அதட்டலுக்கும் ஆமாஞ்சாமிகள் வாய் திறக்கவில்லை.

''பட்டத்தை அறுத்துப் போட்டான்கள் ......... அதை ஓடிப் பிடிக்கப் போனனான்'' - சரவணன் உண்மையைச் சொன்னான்.

கோயில் எசமான் குருக்களைப் பார்த்தார். அந்தப் பார் வையில் அடக்கமில்லாத பிள்ளை வளர்ப்போ என்ற கேள்வி கலந்திருந்தது.

''எல்லோருமாய்ச் சேர்ந்து இதை ஏன் பெரிசாக்கிறியள்? சின்னப்பிள்ளை விளையாட்டுப் புத்தியில ...... பட்டத்தைக் கலைச்சுப் பிடிக்கப் போனால் ...... பெரிய குற்றமே......... பெரிய ஆக்களே அங்கே போய் நாட்கணக்கில் குந்தியிருந்து குடிச்சுக் கும்மாளமடிக்கிறதோடை, படுத்தெழும்பியும் வருயின மெண்டது எங்களுக்குத் தெரியாதே ......... மார்க் கண்டர் எல்லாரையும் விசரர் எண்டு நினைக்கிறார்''

தான் ஆசையோடு சிறுவனுக்குச் செய்து கொடுத்த காற்றா டியை அவர்கள் கிழித் தெறிந்து விட்டார்கள் என்ற ஆத் திரம் சின்னப்புவை ஆவேசங் கொள்ளச் செய்து விட்டது.

''காத்தாடி செய்து காசு உழைக்கிற ஆசை சின்னப்பற் றை கண்ணை மறைக்குது......... ஆசாரம் அறியாமல் அலட்டுகிறார்......... பெரிய குருக்களையாவுக்காக விட்ட னாங்கள்......... அல்லது......... பெடியன் பூணூலைக் கூட கழட்டி எறிஞ்சிட்டார் தெரியுமே?'' - மார்க்கண்டர் கூறி யதைக் கேட்டதும் குருக்களுக்குத் திக்கென்றது.

சரவணனின் இடது தோளைக் கூர்ந்து பார்த்தார். அங்கு பூணூலில்லை! - அவரின் கோபம் எல்லையை மீறிவிட்டது. சரவணன் களைத்துச் சுருண்டு விழுந்து விட்ட பின்னர் கூட அந்தக் கோபம் தணியவில்லை.

அன்றிரவு கோயில் மடத்தில் மூன்று ஜீவன்கள் கொதிக்கும் நெஞ்சும், எரியும் வயிறுமாக உறக்கமின்றித் தவித்தன.

## 6

**ச**ண்முகப்பிரியா இராகத்தில் நாதஸ்வரம் திருப்புகழை வாரி வழங்கிக் கொண்டிருந்தது.

பன்னீர் சந்தன நறுமணம் சாம்பிராணிப் புகையுடன் கலந்து பரவிக் கமழ்ந்தது.

ஸ்நபன மண்டபத்தில் ஆறுமுகசுவாமியை அலங்கரித்து கொலு வீற்றிருக்கச் செய்து அவர் முன் அறுவகைக்கனியும், நிவேதனங்களும் படைத்து அந்தணப் பொலிவான ஆறு சிவாசாரியர்கள் முகத்துக் கொருவராக சுவாமியைச் சூழ நின்று, கைகளில் புஷ்பத்தை அள்ளி, இருகரங்களையுஞ் சிரசில் குவித்து..............

த்யாயேத் ஷண்முக மிந்து கோடி சத்ரசம்
ரத்னப்ரபா சோபிதம்
பாலார்க்க தியுதி ஷட்கிரீட விலசத்
கேயூர ஹாரான் விதம்
கர்ணாலம்பித குண்டல ப்ரவிலசத்
கண்டஸ்தலீ சோபிதம்
காஞ்சி கெங்கண கிண் கிணீரவசுதம்
சிருங்கார சாரோதயம்
... ... ... ... ... ... ... ...

கம்பீரமான ஆறு குரல்களும் ஒருங்கு திரண்டு, அட்சர சுத்தமாக தியான மந்திரத்தை உச்சரிக்கத் துவங்கியதும்,

பக்தர்களின் செவிப்புலன் நிறைந்து, எல்லாப் புலன்களும் ஒடுங்கி மனம் இறைவனில் லயித்து நின்றது.

மாசத்தில் ஒரு தடவை அங்கு வந்து மாருதப் புரவல்லி யின் நீள் பெருங் கோயிலான மாவைக்கந்தனின் அபிஷே கத்தையும் சண்முகார்ச்சனையையும் மனங்குளிரத் தரிசிப் பதற்கு சின்னப்பு ஆசாரியார் தவறுவதில்லை.

சின்னப்பு ஆசாரியார் தொழிலில் ஒரு விண்ணன். வேலை யென்று வந்து விட்டால் இரவென்றும் பகலென்றும் பார்ப்பதில்லை. சனி ஞாயிறு ஓய்வு என்ற பேச்சுக்கே இட மிருக்காது. ஆனால் மாசத்தின் முதல் வெள்ளி சனி ஞா யிறு மூன்று நாட்களும் அவரை ஊரிற் பார்க்க முடியாது.

வெள்ளிக்கிழமை கிழக்கு வெளுக்கிறபோதே, ஒரு மாற்று வேட்டியை கையில் எடுத்துக்கொண்டு அவர் புறப்பட்டு விடுவார். பனங்கூடலைத் தாண்டி துவாளி வயலுக் கூடாக எட்டி மிதித்து நடந்தாரென்றால், சூரியன் உதிப் பதற்கு முன் சந்நதி கோயில் மேற்கு வீதியைத் தடவிக் கொண்டோடும் தொண்டமானாற்றின் இடுப்பளவு தண்ணீ ரில் முழுகி எழுந்து சந்நிதியானின் காலைப் பூசையைத் தரிசித்து விடுவார்,

வரிசை வரிசையாக மாட்டு வண்டிகளிலும், கார்களிலும் அரிசி மூடைகள், மரக்கறிகள் வந்து இறங்கி ......... அங் குள்ள மடங்களிலும் மர நிழல்களிலும் பெரிய பெரிய கிடாரங்களில் சமையல் நடந்து கொண்டிருப்பதைப் பார்க்கும் போது கந்தனுடைய பெயருக்கிருக்கிற மகிமை யை எண்ணி சின்னப்பு வியந்து போய் விடுவார்.

''அன்னதானக் கந்தன்!''

அங்கு சாப்பிட்டு விட்டு மத்தியானம் பஸ் எடுத்தாரென் றால், நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கு வந்து சேர 2 மணி ஆகிவிடும்.

ஆறுமுகசாமி வாசற் கோபுரத்தையும் தீர்த்தக் குளத்தின் மண்டபத்தையும் ஊடறுத்துச் செல்லும் பெருந் தெருவில், பஸ் நுழைகிற போதே, பதைத்துத் துடித்து எழுந்து சின்னப்பு பஸ்ஸை நிறுத்த மணியடிக்க,

''ஏனெணை அப்பு நித்திரையாய்ப் போனியே?'' எனக் கொண்டக்டர் சினக்க,

''தொண்டர்க்கும் உண்டகளை'' எனச் சொல்லிச் சிரித்துச் சமாளித்து இறங்கி விடுவார்.

தீர்த்த மண்டபத் திண்ணை அவரைப் போன்ற யாத்திரீகர்கள் ஓய்வெடுப்பதற்கு நல்ல வசதியாயிருந்தது.

எந்நேரமும் பளிச்சென்ற தூய்மையான வீதி, மண்டபத்தில் தொங்கும் வகை வகையான மின் குமிழ் விளக்குகள், செப்புத்திருவாசி வடிவான உள் நுழை வாயில்கள், ஒருதிரியின் சுடர் கூடக் குறையாமல் எரியும் சட்ட விளக்குகள், பெரிய டமார ஒலி, வாத்தியஒலி......... மணியொலி முழங்க பிரணவச்சுடர் பின்னணியில் திகழ, - கம்பீரமாக நிற்கும் கதிர்வேற் பெருமானின் மாலைப் பூசைக்காட்சி சின்னப்புவின் உள்ளத்தைச் சிலிர்க்கச் செய்து விடும்.

''அலங்காரக் கந்தன்!'' எனச்சொல்லி அவர் மனம் புளகாங்கிதம் கொள்ளும்.

பஸ் எடுத்து, கொல்லங்கலட்டியிலுள்ள அவரின் மூத்த மகளின் வீட்டுக்கு சின்னப்பு போய்ச் சேரும் போது குழற்பிட்டும் முருங்கைக் காய்க்குழம்பும் ஆசையோடு செய்து வைத்துவிட்டு அவரின் மகளும் மருமகனும் அவரை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

விபூதி சந்தனப் பிரசாதத்தையும், கடலைப் பொட்டலத்தையும் கொடுத்து விட்டு அவர் கால் அலம்பி வருவதற்கிடையில் இரண்டு தட்டுகளில் அவள் பரிமாறி வைத்துவிட்டு

விளக்குக்கு அருகில் தானும் உட்கார்ந்து விடுவாள், ஊர்ப் புதினங்களை அறிந்து கொள்வதற்கு.

''அபிஷேகக் கந்தனைத் தரிசிக்க வருகிற சாட்டிலை என்ரைமேளின்ரை கைச்சாப்பாடு மாசமொருக்காலாவது கிடைக்குது...... ஏன் மருமேன் ...... நாலைஞ்சு மாசமாய்ப் போச்சு......... நீங்களும் மேளும் எங்கடை வீட்டுப் பக்கம் வரவேயில்லை......., ஏதும் விசேசமோ எண்டு தாய்விசாரிச்சுக் கொண்டு வரச்சொன்னா.''

அப்படி அவர் கேட்கும் போது இளசுகளிருவரும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொள்வார்கள்.

சனிக்கிழமை காலை அவர் எழும்புவதற்கு முன்பே மருமகன் தனது தகப்பனாரின் வேலைத் தலத்துக்குப் போய்விடுவார். தகப்பன் தேர் - வாகன வேலைகள், சிற்பங்கள் செதுக்குகிற சிற்பாசாரியார். அவருக்கு வீட்டோடு பெரிய வேலைத்தலம். அங்கு சின்னப்புவின் மருமகனும் வேலைக்குப் போய் விடுவார். மகளோடு சிறிது நேரங்கதைத்திருந்து விட்டு, குளித்து முழுகி கோயிலுக்குப் புறப்படும் சின்னப்பு மத்தியானச் சாப்பாட்டுக்குத்தான் மகள் வீடு திரும்புவார். அதுவரை..........

ஆலயக்கட்டட விதிப்பிரமாணங்களுக்கு அமைவான பெரு மண்டபங்கள், விஸ்தாரமான அடுக்கு வீதிகள், நெடிய சுற்றுமதில், சிற்ப வேலைப்பாடுகளமைந்த உயர்ந்த மேற்கு வாசற் கோபுரம், வித விதமான வண்ணமும் மணமும் கொண்ட மலர்களைச் சுமந்து நிற்கும் மரஞ்செடிகளைக் கொண்ட பூங்கொல்லை, வகை வகையான பெரிய குலைகளைத் தாங்கி நிற்கும் வெவ்வேறின வாழைகள் நிறைந்த தோட்டம், கமுகு, செவ்விளநீர் மரங்கள், செங்கழநீர்ப் பூந்தொட்டி, இலை தெரியாதளவுக்கு வருஷம் முழுவதும் காய்த்துத் தொங்கும் காஞ்சி மாமரம்,.........சின்னப்புவின் மனசுக்கு அந்தச் சூழல் வெகுரம்மியமாக இருந்தது.

அவர் அங்கு செல்கிற ஒவ்வொரு தடவையும் கந்தசுவாமியார் ஸ்நபனாபிஷேகத்தால் குளிப்பாட்டப் பட்ட படியே இருந்தார். பாலும் இளநீரும் கர்ப்பக்கிரக கோமுகையால் வழிந்தோடிக் கொண்டிருந்தன. கோயில் வீதியில் காலடி வைக்கும் போதே சந்தனக் காப்பும் பன்னீரும் குப்பென நறு மணம் வீசி, மனசுக்கு இதமேற்ற, அந்த இதமான உணர்வில் சின்னப்புவின் மனம் இறைவனில் இலயித்து விடும்.

கர்ப்பக்கிரகம், களஞ்சிய அறை, மடைப் பள்ளி, வாகனசாலை, கோயிற் பூஞ்சோலை, தேர் மண்டபம், வரவு - செலவுக் கணக்கு.......... ஒவ்வொரு விஷயத்திலும் தூய்மையும் ஒழுங்கும் நிலவச் செய்வதற்காக சுறு சுறுப்பாகச் சுற்றிக் கொண்டேயிருக்கிற ஆலய நிர்வாகியான சடாட்சரக்குருக் களைப் பார்த்து ஒரு தனி மனிதர் இந்தப் பெரிய ஆலயத்தை நிர்வகிக்கும் திறமையை எண்ணி வியந்து நிற்பதுண்டு.

''எல்லாம் ஒழுங்காக நடக்க வேணும் என்பதில் எங்கள் குருக்கள் வெகு கறாரானவர். மற்றக் கோயில்களின் முதலாளிமார் படிக்காதவர்கள். கோயில் விஷயம் ஒன்றும் தெரியாது. வருமானக் கணக்கில் தான் குறியாயிருப்பினம். முதலாளி என்ற திமிரும் அவையளுக்கு........ குருக்கள் ஆகம சாஸ்திரங்கள் நல்லாகப் படித்தவர். எப்பிடிக் கோயிலை நடத்த வேணுமென்று அவருக்கு நல்லாகத் தெரியும். கந்தசாமியாருக்கு வாற வரும்படி யெல்லாத்தையும் கந்தசாமியாருக்கே செலவளித்துச் சிறப்புச் செய்பவர். அதனால் அவர் மனச்சாட்சிக்குத் தவிர வேறு ஆருக்கும் பயப்பிடுவதில்லை'

கோயிற் சனக் கூட்டத்தைக் கண்டதும், மற்றவர்களைப் போல குஷி கொண்டு, தனிக்காட்டு ராசா மாதிரி தானே எல்லாவற்றுக்கும் முன்னுக்கு நிற்க வேணுமென்று அவர் தலைக்கனம் கொள்வதுமில்லை. ஆலயத்தின் சேவைகளில் எங்களூரிலுள்ள பொருத்த மானவர்களுக் கெல்லாம் தகுதியான பொறுப்புகளைப் பிரித்துக் கொடுத்திருக்கிறார்.

கட்டிடப்பராமரிப்பு, கடைகளின் வாடகை வசூல், தென்னங் காணிகளின் மேற்பார்வை, பூஞ்சோலைப் பராமரிப்பு, பெரிய சப்பறச் சோடினை, பஞ்சரதப் பவனி ஒழுங்கு, சுவாமி காவுதல்...... இப்படி பொறுப்புக்களைப் பிரித்துக் கொடுத்திருக்கிறார். கந்த சஷ்டிச் சூரன் போருக்கு சூரன் ஆட்டுகிற பொறுப்பை பெலசாலிகளான கடற்கரைப் பக்கத்து ஆட்களுக்கே கொடுத்திருக்கிறார்.

குருக்களுக்கு எல்லாம் சிறப்பாக நடக்க வேண்டுமென்பதில் ஒரே அக்கறை. இறைவனாலே கொடுக்கப்பட்ட திறமைகளும் ஆற்றல்களும் இறைவனுக்கே சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்த அர்ப்பணிப்பில் இறைவன் பூரிக்க, அந்தப்பூரிப்பில் மக்கள் ஆனந்திக்க வேணுமென்பதற்காக அவர் திறமான நாதஸ்வரக் கலைஞர்கள், திருப்புகழ் ஓதுவார்கள், சாத்துப்படி வித்தகர்கள், கைதேர்ந்த சிற்பாசாரியார்கள் எனக் கோயிலுக்குக் கூட்டி வந்து விடுவார். பூசை செய்கிற குருக்கள்மாரே அறிவும் ஒழுக்கமும் அந்தணப் பொலிவுமுடையவர்களாயிருக்க வேணுமென்று தேடிப் பிடித்து வந்து விடுவார். கோயில் மடைப் பள்ளி ஐயர் கூட சுத்தமாயும் ருசியாயும் நைவேத்தியம் செய்யத் தெரியாவிட்டால் அங்கு ஒரு நாள் கூட நிற்க முடியாது. எங்களின் குருக்கள் அப்படிக் கறாரானவர்'' - தனது மருமகன் அடிக்கடி சடாட்சரக் குருக்களைப் பற்றிப் பெருமையாகச் சொல்லிக் கொண்டவைகள் சின்னப்பு ஆசாரியின் நினைவுக்கு வந்தன.

இடக்கையிலுள்ள பூந்தட்டிலிருந்து, இதழிதழாக சண்முகரின் திருப்பாதத்தில் தாமரைப் பூவிதழ்களை சிவாசாரியார்கள் சமர்ப்பித்துக் கொண்டிருந்தனர்.

அர்ச்சனை மந்திரம் வாசித்துக் கொண்டிருந்தவர் வெள்ளெழுத்துக் கண்ணாடி யூடாக எழுத்தெண்ணி இடறிவிழ, அதனை அமுக்கிக் கொண்டு சடாட்சரக் குருக்களின் வாய் மனப்பாடமாகியிருந்த சகஸ்ர நாமாவளியைக் கம்பீரமாக உச்சரித்துக் கொண்டிருந்தது.

# 7

வரசித்தி விநாயகர் கோயிலின் பூசைப்பொறுப்பை வைத்தீஸ்வரக் குருக்கள் ஏற்ற பின்பு, கடந்த இரு வருஷங்களாக மார்கழி மாசத்தில் அந்த ஊர் அதிகாலையில் திருப்பள்ளியெழுச்சி கொள்ளத் துவங்கி விட்டது.

பனிக் கூதலையும் பொருட்படுத்தாமல், அறுபது எழுபது பேராவது எழுந்து குளித்து முழுகி திருவெம்பாவைப் பூசைக்கு வருவது வழக்கமாகி விட்டது. ஆனால் கோயில் எசமான் கணபதிப்பிள்ளை வரமாட்டார். குளிருக்குப் போர்த்து மூடிக் கொண்டு படுத்திருந்து விட்டு ஆறுதலாக 8 மணிக்கு எழுந்து வருகிற போது, அவருக்குப் பிரசாதமாக ஒரு பெரிய தட்டில் வடையும் சர்க்கரை அமுதுக்கட்டிகளும் தனியாக எடுத்து வைக்கப் பட்டிருக்கும்.

கனகசபை உபாத்தியாயருக்கு எடுப்பான சாரீரம் - கணீரென்ற குரலில் அவர் திருவெம்பாவைப் பாடலை இராகத்தோடு பாடும் போது, கர்ப்பக் கிரகத்தில் 'மணியும் தீபத் தட்டுமாக நிற்கிற வைத்தீஸ்வரக் குருக்களே மனஞ்சிலிர்த்து விடுவார்.

மகன் இராமச் சந்திர சர்மா திருக்கேதீஸ்வரத்தில் குருகுலப் பயிற்சியை முடித்துக் கொண்டு வீட்டோடு வந்து விட்டபடியால் கோயிற் பூசைகளில் இப்போது அவருக்கு அவன் நல்ல உதவி.

இராமச் சந்திர சர்மாவுக்கு நல்ல வெண்கலக் குரல். பயிற்திக் காலத்தில் அதிகாலையிலேயே வேத அத்தியனம் செய்து பழக்கப் பட்டதால், ஸ்லோகங்களெல்லாம் மனப்பாடமாகியிருந்தன. கும்பாபிஷேக கொடியேற்ற வைபவங்களில் அவன் பத்ததி வாசிக்கும் போது, அதில் சுருதியும் லயமும் கலந்திருக்கும். வேண்டிய இடங்களில் தொனியை ஏற்றி இறக்கி அட்சர சுத்தமாக மந்திரங்களைப் படிக்கிற போது, பெரிய குருக்கள்மாரே அசந்து போய் விடுவார்கள்.

வெளியூர்க் கோவில் விசேஷங்களுக்கு அவனைத் தான் வேண்டும் என குருமார்கள் போட்டி போட்டுக் கொண்டு அழைக்கும் அளவுக்கு பத்ததி வாசிப்பிலும், அர்ச்சனை சொல்வதிலும் அவன் தனது பத்தொன்பதாவது வயசிலேயே பேரெடுத்து விட்டதைக் கண்ட போது, வைத்தீஸ்வர குருக்களுக்குப் பெருமையாக இருந்தது.

சமக்கலமும் சங்கும் ஊர்வலம் வந்தன. நித்திரைக் கலைந்த நாய்கள் அட்டகாசமாகக் குரைத்துக் கொண்டிருந்தன.

தகப்பனாருக்கு முன்பே இராமச்சந்திரன் நித்திரை விட்டெழுந்து, குடுமியை அவிழ்த்து தன் நீண்ட கேசத்தை நீவி விட்டு, கிணற்று நீரைத் தலையிலூற்றி குளிப்பை முடித்துக் கொண்டு, ஆசார அனுஷ்டானமாக ஆலயத்துக்குள் போனான்.

சரவணன் மேசை விளக்கைக் கொளுத்தி வைத்துக் கொண்டு பாரதியார் பாடல் படித்துக் கொண்டிருந்தான். அவன் சரஸ்வதி வித்தியாலயத்தில் எட்டாம் வகுப்பில் படித்து முடித்த புத்தகங்கள் மேசை ஓரத்தில் ஒழுங்காக அடுக்கி வைக்கப் பட்டிருந்தன.

விடிகாலைப் பொழுதில் சங்கொலியும் மணியொலியும் பிணைந்து படர, வெகு பக்தி பரவசமாக திருவெம்பாவைப் பூசை நடந்து கொண்டிருந்தது.

போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்.
போற்றி அருளுக நின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றி எல்லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்.

கனகசபை உபாத்தியாயரின் கிண்கிணிக் குரலின் உருக்கம் எல்லோர் நெஞ்சத்தையும் கௌவி நின்றது.

பூசை முடிந்து விபூதி பிரசாதம் பெற்றுக் கொண்டு எல்லோ

ரும் போன பின்பு அங்கு தங்கி நின்ற கனகசபை உபாத்தியாயர் குருக்களைக் கூப்பிட்டு அன்றும் அதனையே அழுத்திச் சொன்னார்.

''இளையவருடைய படிப்பைக் குழப்பிப் போடாதேங்கோ..... அவர் கெட்டிக்காறன். படிக்கிற ஆசையுமிருக்கு... எப்பிடியும் பெரிய பள்ளிக் கூடத்துக்கு அனுப்பி வையுங்கோ.''

வைத்தீஸ்வரக் குருக்களின் விருப்பமும் அது தான். ஆனால்... ''எங்க குடும்பத்திலே ஒரு பிள்ளையையாவது படிப்பிக்கணும் ...... நல்லா இங்கிலீஸ் படிச்சு அவன் உத்தியோகம் பார்க்ணும்......... சரவணனைப் படிப்பிக்கணும்.''

கர்ப்பத்தில் அவன் உதித்த நாள் தொடக்கம் ஜானகி அம்மா கண்டு கொண்டிருக்கும் கனவு - ஆசை - எதிர் பார்ப்பு எல்லாம் அது தான் என்பதும் அவருக்குத் தெரியும். ஆனால்.........

அவர் பிராமணர், கோயிற் பூசகர், ஊரை நம்பி வாழ்பவர்!

சரவணன் அந்தப் பள்ளிக் கூடத்தில் ஜே. எஸ். சி வகுப்பில் முதற் பிள்ளையாக வந்து சிறப்பாகச் சித்தி பெற்று விட்டான் என்ற செய்தியைக் கேள்விப் பட்டதும் அன்று மாலைப் பூசைக்கு வந்த ஊர்ப் பிரமுகர்கள் தங்கள் எண்ணங்களைச் சூசகமாகக் குருக்களுக்குச் சொல்லி விட்டனர்.

''புத்தகத்தை வாசிக்கிற அளவுக்குப் படிச்சிட்டார். மூத்த மகனைப் போல இவரையும் கோயிற் பூசைப் படிப்புக்கு அனுப்பி வையுங்கோ குருக்கள்.'' - விதானையார் கதிரித் தம்பி சொன்னார். அவருடைய ஒரே வாரிசு பதினைந்து வயசாகியும் ஆறாம் வகுப்பில் பிடித்து வைத்த சாணிப் பிள்ளையாராக இன்னும் ஆடாமல் அசையாமல் மூன்று வருஷமாக அப்படியே உட்கார்ந்திருக்கிறானே என்ற ஏக்கம் அவருக்கு.

''குருக்களின்ரை பிள்ளைக்கு இங்கிலிசு என்னத்துக்கு.? மந்திரமெல்லாம் சமக்கிருதத்திலைதானே இருக்கு. குடுமியை வளர்த்துப் போட்டு, சமக்கிருதம் படிக்க வைக்க ஆக்கும் குருக்கள்.'' -கொந்தறாத்து முருகேசருக்கு, நாலாம் வகுப்போடு பள்ளிப் பக்கம் எட்டிப்பார்க்காமல், கள்ள இளநீர் பிடுங்கி, விசிலடித்துக் கொண்டு திரியும் தனது மகனைத் தெருஓவசியராக வேனும் இன்னும் ஆக்கமுடியவில்லையே என்ற அங்கலாய்ப்பு.

''ஊரைத்தாண்டி பெரிய பள்ளிக் கூடத்துக்குப் போனால் கூடாத கூட்டத்தில் சேர்ந்து ஒழுக்கம் கெட்டுப் போகும். பிறகு ஊருக்கு அவமானமாகப் போயிடும் குருக்கள். சின்னனிலேயே அவர் ஒரு மாதிரி......... உங்களுக்குத் தெரியுந்தானே?......... ஊர்ப் புரோகிதத் தொழிலை உங்களுக்கு உதவியாகப் பழகினால் போதும்தானே?'' -சண்டியர் மார்க்கண்டர் இதிலும் பார்க்க நயமான மொழியில் பேசத் தெரியாமல் நாக்குழறினார்.

கெட்டிக்காரப் பிள்ளை எவரெண்டாலும் படிக்கிறதில என்ன குற்றம்? -- எங்கடை பெடியள் படிப்பேறாமல் காவாலியாய்ச் சுத்தினம் எண்டதுக்காக, வலு கெட்டிக்காரனாக வரக்கூடிய பிள்ளையைப் படிப்பிக்காமல் மண் போடக் கூடாது குருக்கள்...... ... யோசிக்காமல் மேற்படிப்புக்கு அவரை அனுப்புங்கோ குருக்கள்.'' -காற்றாடி சின்னப்பு ஆசாரியார் உற்சாகமாக சொன்ன போதும் அந்த அரங்கத்தில் அவரின் அபிப்பிராயம் பலம் பெறுமளவுக்கு அவரின் பகுதியாட்களின் தொகை அவ்வூரில் இல்லை. இருபது இருபத்தைந்து ஆசாரிக் குடும்பங்கள் மட்டும் தான் அக்கிராமத்திலிருந்தன.

கோயில் எசமான் சணபதிப் பிள்ளையின் மைத்துனர் பணக்காரத் தாமோதரம் பிள்ளையர் சொன்னது மறைமுகமான எச்சரிக்கை.

''ஊருக்கு வெளியே இருக்கிறது வேதப் பள்ளிக் கூடம். எளிய சாதியளோடு ஒண்டடி மண்டடியாக இருந்துதான் படிக்க வேணும்...... குருக்களின்ரை மேன் அந்த வேதப் பள்ளிக்குப் போனால் கோயில் மடத்தின்ரை ஆசாரம் கெட்டு விடும் எண்டு ஆரும் யோசிச்சியளோ?'' - மகளுக்கு உத்தியோக மாப்பிள்ளைதான் வேண்டுமென்று, சாதி சமயம் பாராமல் இளவாலைக் கத்தோலிக்க டாக்குத்தரை மடக்கி மருமகனாக்கி விட்ட பெருமையில் குதித்த மைத்துனரை ஆமோதிப்பது போல, கணபதிப் பிள்ளையார் கனைத்துச் சிரித்தார்.

,'அவற்றை படிப்பைக் குழப்பிப் போடாதேங்கோ குருக்கள். கெட்டிக்காரன். படிக்க வேணுமென்ற ஆசையும் அவருக்கிருக்கு......... எப்பிடியும் அவரைப் படிப்பிக்க வையுங்கோ......... பெரிய பள்ளிக் கூடத்துக்கு அனுப்புங்கோ.''

வியர்த்து விட்ட மெல்லிய மீசையைத் துடைத்து விட்டுக் கொண்டு கனகசபை உபாத்தியார் உறுதியாகச் சொன்னார்.

''ஓமோம்.. ... உவர் உப்பிடித்தான் சொல்லுவார் அவற்றை ஆக்கள் நாலைஞ்சு பேர் உத்தியோகமாய் விட்டினமெல்லே......... வெளியூர்களில கடைகளும் வைச்சு அவைக்கு காசு பிடிபட்டுப் போச்சு தெண்ட திமிரிலை எங்கடை வீடுகளில் சவங்காவினதை மறந்திட்டினம்.'' - அந்தரக் கந்தப்பர், -கனகசபை உபாத்தியாரின் சாதியைக் குத்திக் காட்டி அவமானப் படுத்தினார். ''தங்களிலும் பார்க்க மற்றவர்கள் முன்னுக்கு வந்து விடக் கூடாதென்ற சுயநலம் பிடித்த கபடர்கள்''- கனகசபை உபாத்தியார் விறுக்கென்று எழுந்து போய் விட்டார்.

கட்டைக் கணவதி, கறுவல், சின்னான், சிலம்பன், - இதில் கருத்து எதுவும் சொல்ல முடியாத வாயில்லாப் பூச்சிகள் வெறும் அனுதாபத்தை மட்டும் மனசுக்குள் சொல்லிக் கொண்டு எழுந்து போய் விட்டனர்.

''எங்கள் குடும்பத்தில் ஒரு பிள்ளையையாவது படிப்பிக்க வேண்டும்.''

''இளையவற்றை படிப்பைக் குழப்பிப் போடாதேங்கோ அவர் கெட்டிக்காரன்......... படிக்க வேணுமென்ற ஆசையு மிருக்கு.''

''பெரிய பள்ளிக்கூடத்துக்குஅனுப்பினால் கோயில் மடத் தின்ரை ஆசாரங் கெட்டுப் போகாதோ?''

மகனைப் படிப்பிக்க வேண்டும் என்பது பெற்றோரின் ஆசைக் கனவு.

படிக்க வேண்டுமென்பது அவனுக்கிருந்த ஆவற் துடிப்பு. உபாத்தியாயரும் அந்த ஆசையைத் தூண்டிக் கொண்டே யிருந்தார். ஆனால்..........

அவர் பிராமணர், கோயிற் பூசகர்.

ஊரை நம்பி வாழ்பவர்.

சரவணனின் எதிர் காலத்தைப் பற்றி ஒரு முடிவுக்கும் வர முடியாமல் வைத்தீஸ்வரக் குருக்கள் சில நாட்களாக மனம் தளம்பிக் கொண்டிருந்தார்.

## 8

அன்று மார்கழித் திருவாதிரை. கோழி கூவுவதற்கு முன்பே எழுந்து பூசைக்குரிய நைவேத்தியங்களைச் செய்து, அபிஷேகத்தை முடித்து, ஆருத்திரா தரிசன விசேஷ பூசையையும் ஒப்பேற்றி முடிக்கிற போது வைத் தீஸ்வரக் குருக்கள் களைத்துப் போனார். மகன் இராமச் சந்திரனும் மனைவி ஜானகியும் வேலைகளைப் பகிர்ந்து செய்த போதிலும், திருவெம்பாவை இறுதி நாள் என்பதால் அபிஷேக வேலையும் கை கொள்ளாத மடப்பள்ளி வேலை யும் அவரைக் களைக்க வைத்து விட்டன. அதனால் அந்த முற்பகல் வேளையிலேயே அவர் நீட்டிப் படுத்து

ஒரு கோழித் தூக்கம் போட்டுக் கொண்டிருந்த போது, மடத்து வாசலில் காரொன்று இரைந்து கொண்டு வந்து நின்றது. வைத்தீஸ்வரக் குருக்கள் எழுந்து பார்க்க, காரிலிருந்து சடாட்சரக் குருக்கள் இறங்கி வந்து கொண்டிருந்தார்.

பெரியப்பா சுப்பிரமணிய சாஸ்திரிகள் கலாநிதி அச்சுயந்திர சாலையில் சமஸ்கிருத நூல்களைப் பதிப்பித்துக் கொண்டிருந்த காலத்தில், புதிய புத்தகங்களை வாங்குவதற்காக அங்கு அடிக்கடி வந்து போகிற சடாட்சரத்துக்கும் வைத்தீஸ்வரருக்கும் இள வயசிலிருந்தே அறிமுகமும் நட்பும் ஏற்பட்டிருந்தது. அடிக்கடி மாவிட்டபுரம் போய் வருகிற சின்னப்பு ஆசாரியும் அவருடைய சிறப்பியல்புகளை வாய் ஓயாமல் சொல்வது வழக்கம்.

பால்ய கால நண்பரை மகிழ்ச்சியாக வரவேற்று உட்கார்த்தி உபசரித்தார் வைத்தீஸ்வரக் குருக்கள்.

பரஸ்பரம் குசலமும் குடும்ப நலமும் விசாரித்த பின், சடாட்சரக் குருக்கள், இம்முறை இலட்சார்ச்சனைக்கு ஏடுவாசிக்க இராமச் சந்திரனை ஏற்பாடு செய்ய வந்திருக்கிற தனது நோக்கத்தைச் சொன்னார்.

வெளியே போயிருந்த அண்ணனும் தம்பியும் அப்போது வீட்டுக்குள் நுழைந்தனர். மக்களிருவரையுங் கூப்பிட்டு சடாட்சரக் குருக்களுக்கு நமஸ்காரம் செய்வித்து, அறிமுகம் செய்து வைத்தார் வைத்தீஸ்வரக் குருக்கள்.

''பால்ய காலத்தில் உம்மைப் பார்த்த மாதிரியே பையனிருக்கிறான்...... சின்னப்பையனும் படிக்கிறானா? அவனையும் நன்கு படிக்க வையும்..... பெரிய படிப்புப் படிக்கட்டும்...... பூணூல் போட்டவுடன் மணியைத் தூக்கிக்கொண்டு, அரைகுறைப் படிப்போடு, ஐயர்மார் பூசைக்கு வந்து விடுகிறதால், பூசைத் தொழில் மலிவாகி மரியாதையுமில்லாமலாகி விட்டது. குடும்பத்தில் ஒருவன் குலத்தொழில்

பார்த்தால் போதும்...... காலம் மாறிக் கொண்டு வருகிறது. நாமும் அதற்கேற்றபடி எங்களை அமைக்க வேணும். அல்லது மற்றவர்கள் எமது முதுகில் ஏறியிருந்து குதிரை விடுவினம். சின்னப் பையனை உத்தியோகத்துக்குப் படிப்பியும்.'' - சடாட்சரக் குருக்கள் அரையும் குறையுமாக எதனையும் சொல்வதில்லை. முழு அபிப்பிராயத்தையும் அழுத்தி ஒரே தடவையிலேயே சொல்லிவிடுவார்.

வைத்தீஸ்வரக் குருக்கள் வந்தவருக்கு பேசச் சந்தர்ப்பத்தைக் கொடுத்து விட்டு அமைதியாக இருந்தார் - அவருக்குச் சொல்வதற்கும் கேட்பதற்கும் நிறைய இருந்தது. இராமச்சந்திரனைப் பார்த்து சடாட்சரக்குருக்கள் கேட்டார்:

''கேள்விப் பட்டிருக்கிறேன். உன் பத்ததி வாசிப்பு பிரமாதமாயிருக்காம். அடுத்த மாசம் ஏழாந்தேதி எமது கோவிலில் இலட்சார்ச்சனை ஆரம்பம். பத்து நாளும் நீ என்னோடுதான் நிற்கவேணும். இடையிலை வேறு விசேஷங்களுக்கு ஏற்பட வேண்டாம், வேளையோடு வந்து சொல்லியிருக்கிறேன்'' - உத்தரவு போல ஒரே மூச்சில் சொல்லி முடித்து விட்டார்.

அவரையும் அவரின் ஒழிவு மறைவில்லாத பேச்சையும் இராமச் சந்திரனுக்குப் பிடித்துப் போய் விட்டது. தகப்பனாரைக் கேட்டு விட்டு ஓமென்று உடன் பட்டு விட்டான்.

''பார்த்தீரா! பையனும் உம்மைப் போலவே வாயில்லாப் பூச்சி. என்ன தருவேன்...... இது தான் கட்டுபடியாகும் என விசாரித்தானா? உடனே ஓம் சொல்லி விட்டான். சரி அது போகட்டும்......... உமது சின்னப் பையன் என்ன படிக்கிறான்? எங்கே படிக்கிறான்?'' - இளமை நட்பின் உரிமையோடு அவர் விசாரித்தார்.

''உள்ளூர்ப் பள்ளிக் கூடத்திலே எட்டாம் வகுப்பு பாசாகி விட்டான். படிப்பிக்க வேணுமென்றுதான் எமக்கு விருப்பம். அவனுக்கும் ஆசை. ஆனால் பக்கத்து ஊரிலிருக்கிற பெரிய பள்ளிக்கூடம் வேதப் பள்ளிக்கூடம் - நாங்கள் குடியிருக்கிறது கோயில் மடம்......... அதனால் ஆசாரம்

கெட்டு விடும் என்று ஊரார் பயப்படுகினம்'' - தன் நண்ப னிடம் உண்மையை மறைக்க குருக்கள் விரும்பவில்லை. நெஞ்சோடு நெருக்கமான அப்படிப் பட்ட ஒருவரின் ஆலோச னையும் அந்நேரம் அவசியமாகப் பட்டது.

''அறிவு எவரிடமிருந்தாலும் அதனைத் தேடிப் போய்ப் பெறுவதில் ஒரு ஆசாரக் குறைவுமில்லை. நீர் வேதப்பள் ளிக் கூடத்துக்கு அவனை அனுப்பும். ஆனால் அதற்குமுன் இந்த மடத்தைக் காலி பண்ணி விட்டு சொந்தமாக ஒரு குடி சையையாவது போட்டுக் கொள்ளும். குடிசையிலிருப்பது வெட்கமில்லை. ஒரு பெரிய நோக்கத்துக்காக தியாகம் செய்ய வேணுமென்றால், உரிய நேரத்தில் அதனைச் செய் யப் பின் வாங்கப்படாது.'' -சடாட்சரக்குருக்களின் உபதேசம் வைத்தீஸ்வரக் குருக்கள் உறுதியான முடிவை எடுப்பதற்கு உந்து சக்தியாக அமைந்திருந்தது.

சடாட்சரக் குருக்களின் கார் புறப்பட்டுப் போய் விட்டது.

குருக்கள் வீட்டிற்கு கார் ஒன்று வந்து சடுதியாகத் திரும்பி விட்டதையறிந்த சின்னப்பு அவசர அவசரமாக அங்கே வந் தார்.

''ஆராக்கும் குருக்கள் காரில வந்து போகினம்?''

''உம்முடைய மாவிட்டபுரம் குருக்கள். அடுத்த மாசம் லெட்சார்ச்சனைக்கு அர்ச்சனைவாசிக்க மூத்தவரை ஒழுங்கு செய்து போட்டுப் போறார்.''

''நான் சொன்னால் நாம் நம்புறேல்லை...... கெட்டித்தனம் எங்கிருந்தாலும், அந்தக் குருக்கள் மணந்து பிடிச்சிடுவார். எங்கடை குருக்களின்ரை பிள்ளையால் இந்த ஊருக்கே இனிப் பேர் வரப் போகுது. சின்னப்பு எங்கே சொன்னான் எண்டு இருந்து பார்க்க.'' - சின்னப்பு சந்தோச ஆரவாரப் பட்டார்.

''பெரிய பிள்ளையை இனி அந்த முருகன் பார்த்துக் கொள் ளுவார்.........சின்னவற்றை படிப்பைப் பற்றி நாம் இனி யோசிக்க........ அவருங் கெட்டிக்காறன்''

''ஓம் சின்னப்பு அவரைப் படிப்பிக்கப் போறன். அவரைப் பள்ளிக்கு அனுப்புவதற்கு முந்தி மடத்தை விட்டு எழும்ப வேணும். எனக்கு ஒரு காணி பாரும்.'' -குருக்களின் பேச்சு சின்னப்பு ஆசாரிக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனாலும் அதன் பின்னணியிலுள்ள யதார்த்தத்தை உணர அவருக்கு அதிக நேரம் எடுக்கவில்லை.

''கோவியச் சுப்பர் உந்த வயற் தலைப்பை விற்கப் போறனெண்டு சொன்னவர். கனகசபை வாத்தியாற்றை பெரிய தேப்பன்தானே ........வாத்தியார் மூலங் கேட்டால் குருக்களுக் கெண்டு மலிவாய்த் தருவினம். எல்லாம் வெல்லலாம். நாம் யோசிக்க வேண்டாம்.''

சின்னப்பு ஆசாரியார் விறு விறென மேற்கு ஒழுங்கையால் நடந்து போவதைப்பார்த்து குருக்களின் மனம் உற்சாக மடைந்தது.

## 9

கனகசபை உபாத்தியாயருக்கு ஆச்சரியமோ அதிர்ச்சியோ ஏற்படவில்லை. சாதிமான்களின் கபடத்தனமான நசுக்கலிலிருந்து நழுவிக்கொள்வதற்கு சரியானமுடிவுக்கு குருக்கள் வந்துவிட்டாரென்ற திருப்தியும் சந்தோஷமும் அவருக்கு ஏற்பட்டது.

குருக்கள் கொடுத்த இரண்டாயிரம் ரூபாவைப்பெற்று, பெரிய தகப்பனாரிடம் கொடுத்துவிட்டு அந்த எட்டுப் பரப்பு வயலையும் குருக்களுக்கு எழுதிக் கொடுப்பித்து விட்டார்.

எல்லை வேலிகளுக்கு கட்டைக் கணவதி, கறுவல் ஆட்கள் பூவரசங்கதியால்கள் நட்டு அச்சறுக்கையான வேலிகள் அமைத்துக் கொடுத்தனர்.

உபாத்தியாயர் உபகரித்த எட்டுப் பத்துப் பனை மரங்களை வடக்குப் பகுதியார் தறித்துச் சரித்து, பிளந்து கை மரங்களாகவும், வளைகளாகவும் செய்து அடுக்கினர்.

ஆறு பெரிய வேப்பந் தூண்களை ஆழமாக நட்டு, சின்னப்பு ஆசாரியாரும் கூட்டாளி வேலைகாரர்களும் வளைவைத்துக் கோப்பிச வேலைகளைத் தொடங்கிவிட்ட போதுதான் -

''ஐயர் காணி வாங்கிப் போட்டாராம்''

''கோயில் மடத்தை விட்டு எழும்பப் போகிறாராம்.'' செய்தி கேள்விப்பட்டு, கிழக்குப் பகுதி அருண்டது.

வசதியான கல்வீட்டு மடத்தை விட்டு விட்டு, குருக்கள் ஊந்த வெள்ளக்காணியுக்கை குடி போய் வலுவாய்க் கஷ்டப் படப் போறியள்.'' - கோயில் எசமான், விதானையார், பணக்காரத் தாமோதரர் எல்லோரும் வந்து ஒரு குரலில் சொன்னார்கள்.

''வயற் காணி யென்றாலும் அதுவும் பூமித்தாயின் மடி தானே'' எனச் சொல்லி, குருக்கள் சிரித்துச் சமாளித்து விட்டார்.

பெரிய பெரிய கடகங்களில் குறுக்குக் கட்டுக் கட்டின பெண்கள் கல்லையும் மண்ணையும் கொண்டு வந்து கொட்டிப் பரவி நிலமடித்து வீட்டுக்கு மண் சுவர் எழுப்பினர்.

ஜானகி அம்மா கொடுத்த சாப்பாட்டையும் தேநீரையுந் தவிர, குருக்களிடம் கை நீட்டி ஒரு சதமேனும் வாங்குவதற்கு அந்தக் கூலிகளும் தச்சர்களும் பிடிவாதமாக மறுத்து விட்டனர்.

வரணியில் வாங்கியிருந்த கிடுகுகளை ஏற்றி இறக்கிய வண்டிக்கார அந்தரச் சுப்பர், ஒவ்வொரு நடை முடிந்தவுடனும், கூலியைப் பெற்றுக் கொண்டு திரும்புவதில் ஒரே குறியாக இருந்தார்.

ஜானகி அம்மாவின் கழுத்துச் சங்கிலியும், இருசோடி காப்புகளும், குருக்களின் மோதிரமும் நெல்லியடிச்சந்தியிலுள்ள தாமோதரம் வட்டிக்கடை இரும்புப் பெட்டகத்தில் அடங்கிவிட, சொந்தக் காணியில் அடக்கமான குடிசை வீட்டுக்கு தைபிறந்த கையோடு குருக்கள் குடும்பம் கிரகப் பிரவேசஞ் செய்தனர்.

சின்னப்பு ஆசாரி மேசையுங் கதிரையும் கொண்டு வந்து கொடுத்தார். சனசசபை உபாத்தியார் மேசைமணிக்கூடு பரிசளித்தார்.

வழக்கம் போலக் குருக்கள் பூசை நிகழ்த்திக் கொண்டிருந் தார்.

சின்னத்தங்கம் நாச்சி எப்போதும் போல சொம்பு முட்டப் பால் அனுப்பிக் கொண்டிருந்தாள்.

வள்ளியம்மை ஆச்சி, வாய்ப் புளிப்புக்கு வெற்றிலை போட வந்து போய்க் கொண்டிருந்தாள்.

ஜானகி அம்மா, வீட்டுத் தேவைக்கான நீரை கோயில் மடத்துக் கிணற்றிலிருந்து, குடம் குடமாகச் சுமந்து வருவ திலுள்ள தனது சிரமத்தைக்கூடப் பெரிதாகக் கருதவில்லை.

இராமச் சந்திர சர்மா மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் இலட்சார்ச்சனைக்கு ஏடு வாசிக்கப் புறப்பட்டுப் போய் விட்டான்.

சரவணன் நீல நிற அரைக் காற் சட்டையும், அதற்குள்ளே விட்ட வெள்ளை அரைக் கைச் சட்டையும், காலில் சப் பாத்தும், தோளில் புத்தகப் பையுமாகப் புதிய பள்ளிக் கூடத்துக்குப் புறப்பட்டு விட்டான்.

கிழக்கு ஒழுங்கைச் சந்தியில், ஆலமரத்து நிழலில் கடதா சிக் கூட்டமும் கையுமாக 'முன்னூற்றி நாலு' விளையா டிக் கொண்டிருந்த அவன் வயசொத்தவர்கள், குடித்த பீடி யைக் குறையிலெறிந்து விட்டு, வலக்கையின் கட்டை விர லையும் சுட்டு விரலையும் வாயுள் புதைத்து, சைக்களில் செல்லும் சரவணனைப் பார்த்து, உரத்து விசிலடித்தது அவன் காதில் விழவில்லை.

'மெதடிஸ்ட் ஆங்கில உயர் கல்லூரி' என்ற வாசகத்தைக் கொண்ட இரும்பினாலமைந்த பெரிய வளைவும், அதன் பின்புறம் உயர்ந்து நின்ற வெள்ளைக் கட்டடங்களும் சர வணனை வரவேற்றன.

## 10

"கோழைக்குச் சதமரணம்

வீரனுக்கு அது ஒரு தடவைதான்"

சீசர் இருக்கையை விட்டு எழுந்து கொண்டான், இரு தோள்ப் பட்டைகளிலும் இணைத்துப் பொருத்தியிருந்த மெல்லிய துணி, முதுகைத் தடவிக் கொண்டு நிலத்தில் பரவி யது. மனைவியின் மன்றாட்டமான வேண்டுகோளைப் புறக் கணித்து விட்டு வந்தவர்களுடன் சீசர் புறப்பட்டு விட்டான்.

பக்கத்தில் தளபதி மார்க் அந்தனி - தலையிறுக்கமான கூர் முடி, கவச உடுப்பு, இடுப்பில் உடைவாள், நடையில் கெம் பீரம் - சரவணனின் அரும்பும் மீசைக்கு மேலும் மைதடவி, வேஷப் பொருத்தம் அவனுக்கு வெகு கச்சிதமாயிருந்தது.

முடி சூட்டு மாளிகை வாசலில், மார்க் அந்தனியின் கவனத் தை சூழ்ச்சியாக ஒருவன் ஈர்க்க, அதேவேளை மனுக்களைப் பெறுவதற்காக சீசர் குனிய, கசியஸ், காஸ்கா, புறூடஸ் தீட்டியிருந்த சதித்திட்டப்படி, ஒருகணத்தில் சீசரைக் குத் திச் சரித்துவிட்டார்கள்.

சபை திடுக்குற்று விட்டது!

கனகசபை வாத்தியார் தன்னை மறந்து கரகோஷஞ் செய்து விட்டார்.

இரத்தந் தோய்ந்த சீசரின் உடலை மக்கள் முன்பு கிடத்தி, தான் செய்த படு கொலைக்கு காரணங்கள் கற்பித்து நியா யப் படுத்தி மக்கள் முன்பு மார்தட்டி நின்று அவர்கள் மனசை புறூடஸ் திசைதிருப்பினான்.

மேடைக்கு வந்த மார்க் அந்தனியை மக்கள் பேசவிட வில்லை, எதிர்த்து ஆரவாரஞ் செய்தபோது, முகத்தைச் சுழற்றி அவர்களின் கவனத்தை இழுக்கின்ற அர்த்தம் பொதிந்த ஒரு பார்வை, அதனைத் தொடர்ந்து மிக உரத்த கம்பீரக் குரலில் ..........

**Friends! I am with you all and love you all**
**Upon this hope, that you shall give me reason**
**Why and wherein Ceaser was dangerous?**

சரவணனின் குரல் மண்டபமெங்கும் எதிரொலித்தது.

கனகசபை வாத்தியாரின் உடம்பும் உள்ளமும் புல்லரித்தது.

மக்களுக்கு சீசர் செலவு செய்தது குற்றமா?

ஏழைகளின் தோழனாக இருந்தது தோஷமா?

மக்களே மனமுவந்து மும்முறை முடிசூட்ட முனைந்த போது அதனை மறுத்த சீசர் பதவி வெறி பிடித்தவரா?

புறூட்டஸ் சீசருக் கெதிராகக் கட்டியெழுப்பிய குற்றச் சாட்டுக் கோட்டையை படிப்படியாக மார்க் அந்தனி உடைத்துப் பொடிப் பொடியாக்கினான்.

சொற்களுக்கு அழுத்தங் கொடுக்க வேண்டிய இடங்களில் தொனியை உயர்த்தி, பணிய வேண்டிய இடங்களில் தணித்து, விழிகளை வெட்டி, வலக்கையை உயர்த்தி ஷேக்ஸ்பியரின் வசனங்களைப் பேசி சரவணன் நடித்ததைப் பார்த்துக் கனகசபை வாத்தியார் வியந்து பூரித்துப் போனார்.

கிராமப் பள்ளிக் கூடத்தில் சப்பென்றிருந்த சரவணனிடம் குவிந்திருந்த ஆற்றல்கள் அந்தப் பெரிய பள்ளிக் கூடத் துக்கு வந்து சில காலத்திலேயே சுடர் விடத்துவங்கி விட் டதைப் பார்த்து அவர் பெருமைப் பட்டுக் கொண்டார்.

கிராமத்துப் பாடசாலையில் முளை விடுகிற வளரக் கூடிய பயிர்களை அவர் இனங்கண்டு பிடித்து, அவ்வாறானவர் களை பெரிய பள்ளிக் கூடங்களுக்கு அனுப்பிப் படிப்பிக்கு மாறு பெற்றோர்களைத் தூண்டிக் கொண்டேயிருப்பார். ஆசாரக் கூண்டுக்கு வெளியே சரவணனைக் கொண்டு வந்து அந்த மெதடிஸ்ட் மிசன் கல்லூரியில் சேர்த்து விடு வதற்கு அவர் பட்ட பாடு........ சரவணன் சேர்ந்த பின்பு, அக்கல்லூரியின் நிறுவியவர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும், அவ்வாண்டு நடந்த போது, அதற்கு சமுகம ளிக்கும் படி குருக்களிடம் கனகசபை வாத்தியார் சொன்ன போது, குருக்கள் மறுத்து விட்டார்.

''சரவணன் அங்கு படிக்கச் சென்றதே நம்மூர்ப் பெரியவர் களுக்குப் பிடிக்கவில்லை........ முறுகிக் கொண்டிருக்கிறார் கள். அந்த வேதப் பள்ளிக் கூடத்து விழாவுக்கு நானும் போய் அங்கு உட்கார்ந்து பார்த்து விட்டு வந்தால், எல் லாருடனும் சமமாக உட்கார்ந்து ஆசாரத்தை அழித்துப் போட்டேன் என புரளியை உண்டாக்குவார்கள். அது சரவணனின் படிப்புக்குத் தடையாக மாறியும் விடலாம். என் சார்பில் வாத்தியாரே அங்கு போய் அவனுடைய படிப்புகளைப் பற்றி விசாரித்து விழாவையும் பார்த்துக் கொண்டு வந்து சொன்னால் போதும்.'' - குருக்கள் கூறி யவற்றிலும் நியாய மிருப்பதாக அவருக்குப் பட்டது.

பல பாடங்களில் அவன் பரிசுகள் வாங்கியதையும், அவ னின் நடிப்பாற்றலையுங் கண்டு அவனைப் பற்றிய தனது கணிப்பு சரியாகி விட்டதில் கனகசபை வாத்தியாருக்கு மிக மகிழ்ச்சியாக இருந்தது.

மறு நாள் காலையில் குருக்கள் வீடு சென்று, சரவண னைப் பாராட்டி விட்டு, சரவணனின் திறமைகளைப் பற் றிக் குருக்களிடம் மனந்திறந்து சொல்லிக் கொண்டிருந்தார்.

அப்போது சின்னப்பு ஆசாரியார் வெளிப் படலையைத் திறந்து கொண்டு அட்டகாசச் சிரிப்போடு உள்ளே வந்தார்.

''குருக்களின்ரை சின்னவற்றை பேர் ஊரெல்லாம் கொடி கட்டிப் பறக்குது. நேற்று இங்கிலீசு நாடகத்தில தூள் பறத்தினாராம்........ பணத்தால் உவையின்ரை திமிரை அடக்க முடியாது. கெட்டித் தனத்தால தான் காசில்லா தவை தலை நிமிர்ந்து நிற்க வேணுமாக்கும்........ வாத்தி யாரைப் போல நாலு மனுசர் இருந்தால் இந்த ஊர் எப் பவோ திருந்தியிருக்கும்'' சின்னப்புவுக்கு பேருற்சாகமாக இருந்தது.

''என்ரை மேளிட்டை போயிருந்தனாக்கும். அந்தக் குருக் களும் அந்த ஊருக்கை பெரிய விசயம் ஒண்டைச் செய் திட்டார்'' - சின்னப்பு மகள் வீட்டுக்குப் போய் வந்த புதி னங்களைச் சொல்ல ஆயத்தமாக ஆறி அமர்ந்து உட் கார்ந்து விட்டார். கனகசபை உபாத்தியாயர் பாடசா லைக்குச் செல்வதற்கு தயார் செய்வதற்காக தமது வீட் டுக்குப் புறப்பட்டு விட்டார்.

11

சின்னப்பு வழக்கம் போல முருகக்ஷேத்திராடனத்தை முடித் துக் கொண்டு, மகள் வீட்டிலிருந்து போனதடவை புறப் படுகிற போதே, மகளுக்குச் சொல்வது போல, மருமகன் அந்தக் கோரிக்கையை அழுத்தமாகச் சொன்னான்.

''குஞ்சு ........ மாமாவிட்டைச் சொல்லு . . இந்த முறை கந்தசட்டிக்கு அவர் மாவிட்டபுரத்துக்கு கட்டாயம் வரவேணும், மாமியையும் கூட்டிவரச் சொல்லிவிடு.''

சின்னப்பு ஸ்கந்த சஷ்டி விரதம் எந்தக் கோவிலிலும் பிடிப்பதில்லை. மரத்தோடு மல்லாடுகிற அவருக்கு விரத மிருப்பது தோது வராது. கடைசி நாளன்று மட்டும் மாலை யில் நேரத்தோடு வேலையை முடித்து விட்டு, சூரன் ஆட் டத்தை நெல்லியடி முருகையன் கோவிலில் பார்த்து விட்டு, அங்கு தலை விழுந்ததும், சின்னப்பு கந்தவனக் கடவை கந்த சுவாமியாரிடம் போகும் பொழுது வடமேற்கு

மூலையில் சூ ர ன் மாங்கொப்புகளில் மறைந்து விளையா டிக் கொ ண் டு நிற்பார். வடமராட்சியில் அந்த இரு கோவிலும் சூரனாட்டத்துக்குப் பேர் பெற்றவை.

பறை வாத்தியம் தாளத்தோடு பேரொலி எழுப்ப........ உருண்ட விழிகளும், ஊ தா நிறப் பருத்த மே னி யு ம், தடித்த மீசையுமாக.......... சூரனைத் தூக்கி, இருத்தி எழுப்பி, ஓ டி, சரித்து........ மத்தியானத்திலிருந்தே கோவில் வெளிவீதி அமர்க்களப் படும் காட்சியை சி ன் ன ப் பு வருடா வருடம் கண்டு களிக்கத் தவறுவதில்லை.

இம்முறை மாவிட்டபுரத்துக்கு வரவேண்டுமென்ற மருமகனின் அழைப்பின் காரணம் புரியாமல் சின்னப்பு யோசித்துக் கொண்டிருந்தார்.

''என்னெணை அப் பு முழிக்கிறாய்......... அவரும் தேப்பனும் இரவு பகலாகச் செய்த பு து ச் சூரனெல்லே இந்த முறை கோயில்லை ஆட்டப் போகினம்! அதுக்குத் தான் மருமேன் வரச் சொல்லிப் போட்டுப் போறார். அம்மாவையும் சீதேவியையும் கூட்டிக் கொண்டு இரண்டு நாளைக்கு முந்தியே வந்திடணை அப்பு.''

''சீதேவிப் பெட்டை எங்கடை குருக்களம்மாவின்ரை செல்லம். அவவை விட்டுட்டு எங்கும் வரமாட்டாள். பாக்கியத்தைக் கூட்டிக் கொண்டு வா றன்'',

வாக்களித்த படி சின்னப்பு முதல் நாளே வ ந் து சேர்ந்து விட்டார்.

விரிந்து பரந்த மார்பும், தடித்த கைகளும், பருத்த கால்களும், கனல் உமிழும் உருண்ட கண்களும், சிரசில் பளிச்சிடும் கிரீடமும், இடுப்பில் கச்சையும், தோளில் பறக்கும் உத்தரியமுமாக, அந்தப் பிரம்மாண்ட உருவம் நெஞ்சு நிமிர்த்தி, கெம்பீரமாக நிற்கிற தோற்றத்தைக் க ண் டு சின்னப்பு பிரமித்துப் போய் விட்டார். தோ ள், கை, கால்களில், புடைக்கும் நரம்புகளைக் கூட வெ கு நுட்பமான கவனத்தோடு செதுக்கியிருந்தார்கள்.

வேலைத் தலத்தில் புகைந்து கொண்டிருந்த சாம்பிராணிக் குச்சியின் நறுமணத்தையும் மேவிக் கொண்டு புதுப் பெயின்ட் மணம் வீசிப் பரவியது.

வாசலில் வாழை கட்டி, தோரணந் தொங்க விட்டு, வெள் ளோட்டஞ் செல்வதற்குச் சூரன் காத்துக் கொண்டிருந்தார்.

''கச்சியப்பர் சொன்ன கந்தபுராண வருணனைக்கு இலக் கணமாக அச்சொட்டாகச் சூரன் அமைந்திருக்கு!''

பீடத்தில் கால் பதித்து, கையில் வாளைத்தூக்கி ஓங்கிய படி நிமிர்ந்து நிற்கும் அப் பேருருவை, பெரியவர் ஒருவர் மறைப்புக்குக் கட்டின திரைச் சேலையைத் தூக்கி எட் டிப் பார்த்து விட்டு, பெருமையாகச் சொல்லி மகிழ்ச்சி யடைந்தார்.

''நேரம் நெருங்கி விட்டுது......... சூரன் தூக்கிறவையளை இன்னும் காணேல்லை.........'' - சின்னப்புவின் மருமகனும் தகப்பனும் நிலை கொள்ளாமலிருந்தனர்.

சின்னப்புவும் சிலரும் கோவிலுக்கு ஓடிச் சென்றார்கள். புதுச் சூரனின் வெள்ளோட்டங்காண நண்பகலிலிருந்தே வந்து திரண்டிருந்த சனக் கூட்டம் அங்கு முட்டி மோதிக் கொண்டிருந்தது.

இதுவரை காலமும் ஆட்டப்பட்டு வந்த சூரனின் உடம்பு: உக்கி உழுத்து, பொழுக்குப்பிடித்து ...... வெடிப்புங் காயமு மாக பின்னமுற்று ... அந்த மூளிச் சூரனைத் துடைத்து தூசுதட்டி, சிங்கமுகாசுர சம்ஹாரத்துக்கு வெளியேவிட மினுக்கிக் கொண்டிருந்தார்கள் சிலர். வாயில் புறுபுறுப்பு,

''ஐயற்றை சொல்லு நடக்காது ...... புதுச்சூரனோடு தச்ச னையும் தூக்கிக் கொண்டுவர வேணுமாம். நாங்கள் மாட்டம் ......அதனிலும் பார்க்க இந்தச் சூரனையாட்டு வம்.''

சடாட்சரக் குருக்கள் வசந்த மண்டப வாசற்படியின் ஓரத்

தில் நிமிர்ந்து உட்கார்ந்திருந்தார். முகத்தில் துணிவும் உறுதியும் படர்ந்திருந்தது. அவரைச் சூழ்ந்து கொண்டு நின்றவர்களிடம் தெட்டத் தெளிவாகச் சொல்லிவிட்டார்.

''புதுச்சூரனாட்டுவதாக இருந்தால் அதனைச் செய்த சிற்பாசாரியாரையும் அந்தச் சிலையோடு ஊர்வலமாகக் கூட்டி வர வேண்டும். சிற்பாசாரி இல்லாவிட்டால் அது வெறும் மரமாகத்தானிருக்கும். மரத்துக்கு உருவமும் களையும் பொலிவும் கொடுத்த சிற்பாசாரியை முறைப்படி கெளரவித்து, அவரிடமிருந்து பாரமேற்ற பின்னர்தான் புதுச் சூரனை ஆட்டலாம்.''

''தச்சுப் பிள்ளைக்கு மாலை போட்டு ஊர்வலமாகச் சூரனோடு தூக்கிவர நாங்கள் மாட்டம்.'' - நரைத்த ஒரு குரல் மூலையிலிருந்து முணகியது.

''வெறும் மரத்தை உயிருள்ளது போன்ற சிற்பமாக வடிக்கிற திறமை உங்களிடமுமில்லை. என்னாலும் முடியாது. அந்தத் திறமையைத்தான் கெளரவிக்கிறோம். . சாதியை அல்ல. சூரனை ஆட்டுகிற லாவகமும் கெட்டித்தனமும் உங்களிடம்தான் இருக்கிறது. அவனிடமுமில்லை, என்னிடமுமில்லை. வேறு ஆட்கள் உங்களைப் போல அப்படி ஆட்டவும் முடியாது. புதுச்சூரனை இம்முறை நீங்கள் ஆட்டவில்லையென்றால், இனி எந்தச் சூரனையும் இந்த ஆலயத்தில் நீங்கள் ஆட்ட முடியாது.'' -சால்வைத் துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு குருக்கள் எழுந்து விட்டார்.

இனி அவருடன் கதைக்க முடியாதென்பது அவர்களுக்குத் தெரியும் - அக்கோவிலில் சூரனாட்டுவதன் மூலமே அவர்களின் ஆண்மையும் வலிமையும் அந்தப் பிரதேசம் முழுவதும் பிரசித்தமாயிருந்தது. அதை இழந்துவிட அவர்கள் தயாராகவில்லை.

குருக்கள் அளிக்கிற மதிப்பு திறமைக்கேயல்லாமல் பிறப்

புக்கு அல்ல என்ற உண்மையையும் அவர்கள் உணர்ந்து கொண்டதும் புதுச் சூரனைத் தூக்கிவரப் புறப்பட்டு விட்டார்கள்.

திட்டமிட்டபடி வெள்ளோட்டமும் சூரசம்ஹாரமும் வெகு சிறப்பாக நடந்தன.

''சின்னப்பு எங்கள் ஜாதிபில குணத்தில அவர் ஒரு பெரும் மனுஷன்.'' -

சின்னப்பு கூறிய கதையைக் கேட்டுக் கொண்டிருந்த வைத்தீஸ்வரக்குருக்கள், தனது நண்பரைப் பற்றித் தாம் நீண்டகாலமாகக் கொண்டிருந்த கருத்தை வாய் விட்டே சொன்னார்.

''கலைகளையும், கலைஞர்களின் உள்ளத்தையும் மதிக்கத் தெரிஞ்ச தங்கமான பிறவி அவர்.'' எனச் சொல்லி சின்னப்பு வாயெல்லாம் பல்லாக ஆமோதித்தார்.

## 12

இரண்டு நாட்கள் விடாமற் பெய்தஅடைமழையில் அந்த ஊர் வெள்ளக் காடாகி விட்டது. களையெடுத்த நெற்பயிர்களின் தலையை மூடிக்கொண்டு தண்ணீர் நிறைந்து நின்றது. மேற்கு வீதித் தாமரைக்குளம் கரை தெரியாமல் முட்டி வழிந்தது. பிள்ளையார் கோயில் வெள்ளத்தில் நீந்திக் கொண்டிருந்தது.

வருஷந்தோறும் வரசித்தி விநாயகர் கோயில் பிள்ளையார் கதைப்படிப்புக்காலத்தில், மழை பெய்வது வழக்கம். முழங்காலளவு தண்ணீரில், வயலில் வடக்குப்பகுதி இளம் பெண்கள் குறுக்குக்கட்டும், வெற்றிலை வாயும், தலையை இறுகக் கவ்விய பனைஓலைப் பெட்டியுமாக, கால்கள் பரப்பி, கவிழ்ந்து நின்று வரிசை வரிசையாக களை பிடுங்க ......... மத்தியான வயலைத் தாண்டிய வயற் சொந்தக்காரர்கள்

அந்தப் பெண்களின் பின்னழகை வயல் வரம்புகளில் நின்று ரசித்து ...... குதர்க்கமுங் கிண்டலுமாக ...... வயல் வெளி ஒரே சுறு சுறுப்பாக இருக்கும்.

அந்த நாட்களில் கோயிலுக்கு கூட்டம் வருவதில்லை. ஆண்களுக்கு வயற்பக்கச் சுறு சுறுப்பு, சுரி, சறுக்கல் எனச் சொல்லிக்கொண்டு கிழக்குப்பகுதிப் பெண்கள் வீட்டோடு அடைகிடந்து விடுவார்கள். மோதகத்துக்குப் பூசைப் பெட்டி கொடுக்கிற இரண்டொரு ஆட்களுடன் குருக்கள் பூசையை முடித்துவிடுவார்.

ஆனால் இம்முறை, முகில் கூட்டங் கூட்டமாக ஓடிப்போய் வங்காளவிரிகுடாவில் குதித்து முழுகி வயிறுமுட்டக் குடித்துவிட்டு எழுந்து பாட்டம் பாட்டமாகச் சீறிக் கொண்டு இரண்டு நாட்களாக பெரு மழையாகப் பெய்துவிட்டது.

மழை ஓய்ந்துவிட்டாலும் அன்றும் வடக்கு கறுத்துக் கிடந்தது,

சரவணன் புத்தகப்பையைப் பக்குவமாகத் தோளிற் கொழுவிக் கொண்டு, இரண்டு கரங்களாலும் காற்சட்டையை முழங்காலுக்கு மேல் மடித்து உயர்த்திப் பிடித்தவண்ணம், வெள்ளம் மூடி நிற்கிற வரம்பைக் குறிவைத்து, மெல்ல மெல்லக் கால் பதித்து, ஆண்டிறுதிப் பரீட்சை எழுதுவதற்காக, வெள்ளத்தை ஊடறுத்து நடந்து போனான்.

கூலித் தொழிலுக்குப் போகிறவர்கள் கூட மழை, வெள்ளம், சுகமில்லை யென்றால் வீட்டில் நிற்கலாம், ஊதியம் மட்டும் கெடும். ஆனால் வைத்தீஸ்வரக்குருக்கள் முட்டுத்தடிமனையும் பொருட்படுத்தாமல். தலையில் தண்ணீரை அள்ளி ஊற்றிக் கொண்டு, வேளா வேளைக்குப் பிள்ளையாருக்குப் பொங்கிப் படைத்துப் பூசை பண்ணிக் கொண்டிருந்தார்.

அவருக்கு உதவி செய்வதற்கு இராமச்சந்திரசர்மா கூட இம்முறை ஊரிலில்லை. வெளியூர்க் கோயில் விசேஷத்துக்குக் கூட்டிக் கொண்டு போய் விட்டார்கள்.

ஜானகி அம்மா - பாவம்! - மாரி தொடங்கி விட்டால், சில வருடங்களாக அவளால் எழுந்து நடமாட முடியாமல் கணுக்கால் முழங்கால் பூட்டுகளை நிமிர்த்தவே முடியாதபடி நோவுடன் கூடிய வாதப்பிடிப்பு வந்து விடும். அவளின் நோவுக்கு எண்ணெய் தேய்த்து ஒத்தடம் கொடுக்கிற வேலையும் குருக்களுக்குச் சேர்ந்துவிட்டது.

ஸ்ரீதேவிப் பெட்டைக்குக் காய்ச்சல், மூன்று நாலு நாட்களாக அந்தப்பக்கம் வரவேயில்லை.

குருக்கள் கோவில் வேலையையும் வீட்டு வேலைகளையும் விரைவாக முடித்துவிட்டு, அடுத்த அடுத்த நாட்களுக்கான உபயகாரர்களுக்கு நினைவூட்டிவிட்டு வருவதற்காக, குடையை எடுத்துக் கொண்டு புறப்பட்டுப் போய் விட்டார்.

ஜானகி அம்மா சாக்குக் கட்டிலில் விரித்த பாயில் சரிந்து படுத்துக் கிடந்தாள்.

மலைப் பாம்பு போல ........

கொழுத்த எருமைக் கூட்டம்போல ........

பெரஹரா யானைகள் போல ........

வடக்கிலிருந்து பருத்த முகில்கள் உறுமிக் கொண்டு துள்ளி எழுந்து ஆகாயத்தில் கவிந்து கொண்டிருந்தன.

அடிக்கடி மின்னல் கண்ணைச் சிமிட்டிக் கொண்டிருந்தது.

பளீச்!

தொடர்ந்து ஆகாயம் வெடித்து உடைந்து கொட்டுப்படுகிற ...... டுடுடு... டும்!

கண்மூடித்திறப்பதற்குள் அது நடந்து விட்டது!

குருக்கள் வீட்டு முற்றத்துப்பனையில் விழுந்த இடி, மரத்தை வட்டோடு முறித்து வீட்டு விறாந்தை மீது வீசிவிட, அந்தப் பாரத்தின் நசுங்கலில், ஜானகி அம்மா நீட்டி நிமிர்ந்து சவமாகி விட்டாள்!

ஓடி வந்த ஊரவர்களும், செய்தி அறிந்து தும்பளையிலிருந்து வந்து சேர்ந்த குருக்களின் உறவினர்களும் கூடி ஆலோசித்து, கோவில் வீதியில் சவமிருந்தால் பூசை தடைப்பட்டு விடுமே என்ற அவசரத்தில், திகைப்பிலும் ஆற்றாமையிலுமிருந்து விடுபட முடியாமல் துடித்துக் கொண்டிருந்த குருக்களையும் மக்களிருவரையும் அணைத்து இழுத்துக்கொண்டு போய், சவத்தைச் சுட்டு விட்டுத் திரும்பினார்கள்.

## 13

''பகவானே ஈஸ்வரா! இந்தப் பரிதாபத்தை எப்படித்தாங்கு கிறது ......அவள் புண்ணியவதி பூவோடும் பொட்டோடும் போய்விட்டாள். என் மகனுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் இப்படி ஆகிவிட்டதே!''- செத்த வீட்டன்றே வந்து கொள்ள முடியாமல் போன குடாநாட்டின் பல பகுதிகளிலும் வாழு கின்ற பிராமணக் குடும்பங்கள் துக்கம் விசாரிக்க அந்த வீட் டுக்கு மாறிமாறி வந்து போய்க் கொண்டிருந்தன. அவர்க ளின் கைகளைப்பற்றிக் கொண்டு கதறுகிற மகனையும் பேரர் களையும் பார்த்து, காவேரியம்மா தனது மொட்டையிலடித் துக் கதறிக் கண்ணீர் உகுத்தாள்.

தும்பளை அக்கிரஹாரவீதியிலிருந்து பூர்வீக வீட்டைவிட்டு வரமாட்டேன் என வைராக்கியத்தோடு வயசு போன கா லத்திலும் தனியாக வாழ்ந்து கொண்டிருந்த வைத்தீஸ்வ ரக் குருக்களின் தாயார் காவேரியம்மா, மகனுக்கும் பிள்ளை களுக்கும் இனி தானே துணையாக இருக்க வேண்டு மென்ற முடிவோடு, வீட்டை இழுத்துப் பூட்டிக் கொண்டு செத்தவீட் டிலன்றே வந்து சேர்ந்துவிட்டாள்.

ஒல்லியான உடம்பு, சுருக்கம் விழுந்த முகம், வெள்ளை மடி சார்ப்புடவை, அதன் தலைப்பு தலையின் ஒட்டவெட்டிய வெள்ளை மயிர்களை எந்நேரமும் மூடியிருக்கும், வெற்றிலை பாக்கு அரைக்கும் அளவுக்கு உறுதியான பற்கள். ஒரு காலத் தில் பொன்னும் வைரமும் மின்னிக் கொண்டிருந்ததற்குச் சான்றாக மூக்கிலும் கழுத்திலும் துளைகள் தூராமலிருந் தன. கழுத்தில் துளசி மணி மாலைமட்டும் அணிந்திருந்தாள்.

''பகவானே ஈஸ்வரா! என் மகனின் வாழ்க்கையை பாதி வய சிலேயே அழித்துச் சோதித்து விட்டாயே''- அடிக்கடி தலை யிலடித்துக் காவேரியம்மா புலம்பிக்கொண்டிருந்தாள்.

மூன்றாம் நாள் வந்திறங்கிய குருக்களின் தங்கை லக்ஷ்மி யைக்கண்டதும், குருக்கள் துக்கத்தை அடக்க மாட்டா மல் விம்மி வெடித்து அழத்துவங்கிவிட்டார்.

அவளும் பிலாக்கணம் வைத்து அழுதபோதிலும், அவளைக் கட்டியழ அந்தவீட்டில் வேறு பெண்களிருக்கவில்லை. தனி யாக அழுதுதீர்த்த பின், மூக்கைச்சீறி எறிந்துவிட்டுச் சொன் னாள்:

''முந்தா நாள்தான் தந்தி வந்தது. பூஜைக்கு வேறு ஆளை ஒழுங்கு செய்து வைத்து விட்டு அத்தானும் கூட வருவதற்கு ஓடித்திரிந்தார். ஆனால் ஆள் எவரும் கிடைக்கவில்லை...... என்னையும் பிள்ளைகளையும் றெயிலேற்றி விட்டார்.''-

அவள் முகத்தில் பயணக்களைப்பும் துக்கமும் படர்ந்திருந் தன. பக்கத்தில் பாவாடை தாவணியோடு மௌனமாகத் தலைகுனிந்து நின்ற அவளின் மூத்தமகள் தேவகியின் மயிர் குழம்பிக் கலைந்திருந்தது. எட்டு வயசுச் சின்னவள் உமா துயரச் சூழ்நிலையின் தாக்கத்தை உணராமல், சூட்கேசின் மேலுட்கார்ந்து கை சூப்பிக் கொண்டு ஆச்சரியமாகப் பார்த் துக் கொண்டிருந்தாள்.

காவேரியம்மா அவர்களை உள்ளே கூட்டிக்கொண்டு போனாள்.

அந்த வீட்டிற்கு துக்கம் விசாரிக்க, தினமும் ஆட்கள் வரு வதும் போவதுமாயிருந்தனர்.

வெளிப்பந்தலின் தூணோடு, பெருமூச்சும் கவலையுமாக வைத்தீஸ்வரக் குருக்கள் சாய்ந்திருந்தார்.

இராமச்சந்திர சர்மா உறவினர்களுக்குத் தசாக அழைப்புப் போஸ்ட்கார்டுகளை எழுதிக்கொண்டிருந்தான்.

சரவணன் பிரமையிலிருந்து விடுபட முடியாமல் சுருண்டு படுத்துக் கிடந்தான்.

லக்ஷ்மியும் மகளும் அடுக்களைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர்.

காவேரியம்மா முற்றத்தில் மகனுக்கு முன்னால் குந்தி உட்கார்ந்து, கைகளால் முழங்கால்களைக் கட்டிக்கொண்டு அவர் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, மகனின் பரிதாபக் கோலத்தைப் பார்க்கச் சகிக்காத பெரு மூச்சுடன் எழுந்து உள்ளே அடுக்களைக்குள் போய் விடுவாள்.

அங்கு கொஞ்ச நேரக் குசு குசுப்பு, அதனைத் தொடர்ந்து அடுத்த பெருமூச்சு.

''ஹூம். உனது தலையெழுத்தும் உப்படி ஆகிவிட்டது!'' அடுக்களையிலிருந்து வெளிவருகிற போது அவளின் ஒட்டிய விழிகளில் நீர் துளிர்த்திருக்கும்.

தேவகி அந்த வீட்டில் இராமச்சந்திரனைக் காணும் போது கூச்சமும் பரபரப்பும் கொண்டாள். அவளின் தள தளத்துப் பூரித்த அந்த வெண்ணிறக் கன்னங்கள் அடிக்கடி சிவப்பைப் பூசிக் கொள்ளத் துவங்கின. சமைக்கிற சாட்டில் அடுக்களையிலேயே அவள் அடைந்து கிடந்தாள்.

சிறுமி உமா சரவணனின் புத்தக அடுக்குகளைச் சிதறி ஆங்கிலப் புத்தகத்தை எடுத்து, தனக்குத் தெரிந்த சொற்களை எழுத்துக் கூட்டி உரத்துப் படிப்பதும், அது முடிய அவனின் கொப்பிகளைக்கிழித்து, கடதாசிக் கப்பல் செய்து, பக்கத்து ஒழுங்கையால் ஓடும் வெள்ளத்தில் மிதக்கவிட்டு ரசிப்பதுமாயிருந்தாள்,

இழுத்துக் கவருகிற மோகனமாக அகன்ற கண்கள், கூரிய நீண்ட மூக்கு, மோவாயில் ஒரு மெல்லிய பள்ளம். சிரிக்கும் போது கன்னத்தில் தவழும் சிறு குழி - தகப்பனின் முகச் சாயல் அப்படியே படிந்திருந்தது.

காவேரியம்மா அவளை இழுத்து அடிக்கடி தலையில் குட்டி அவளை அடக்கிக் கொண்டிருந்தாள்.

தசாகம் முதல் கிரகஜ்ஞம் வரை, சடாட்சரக் குருக்களின் கார் தினமும் அங்கு வந்து போய்க்கொண்டிருந்தது.

''வைத்தீஸ்வரம், பிரம்மன் எழுதினதை எவரும் மாற்ற முடியாது ...... நாங்கள் படித்த அறிவும், அனுஷ்டிக்கும் ஆசாரமும், எங்களின் தெய்வ நம்பிக்கையும் இப்படி சோதனையான நேரத்தில்தான் மனசுக்குத் தைரியம் கொடுக்க வேணும். வாயால் சொல்கிற வார்த்தைகள் எதுவும் ஆறுதல் தர முடியாது ...... நெடுகத் துக்கப்பட்டுக் கொண்டிராமல், அந்த ஜீவன் சாந்தி பெறுவதற்கான கிரியைகளைச் செய்வதுதான் அந்த ஜீவன் உம்மில் கொண்டிருந்த அன்புக்குச் செய்கிற கைமாறும் கடமையுமாகும் ...... மனசைச் சாந்திப் படுத்திக் கொண்டு ஆக வேண்டிய காரியங்களை எழுந்து செய்யும் ... ஒன்றும் குறைவைக்கப்படாது'' தனது நண்பனை அணைத்து ஆறுதல் சொல்லி, அந்தியக் கிரியைகளை விதிமுறைப்படி நடத்த உதவியாக, யாழ்ப்பாணத்திலிருந்து சாஸ்திரிகளைக் கூட்டிவந்து, சடாட்சரக் குருக்கள் தினமும் ஏற்றி இறக்கிக் கொண்டிருந்தார்.

வைத்தீஸ்வரக் குருக்களின் மைத்துனர் - தங்கை லக்ஷ்மியின் கணவர் நாராயணய்யர் தசாகத்துக்குக்கூட களுத்துறையிலிருந்து வரவேயில்லை. அந்தத் துக்கத்தைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் ஒரு தந்தி கூட அவர் அனுப்பவில்லை.

கிரகஜ்ஞத்துக்கு முதல் நாளிரவு தனது கார் நிறைய அரிசி மூடை, காய்கறி, கடைச் சாமான்கள். வாழைக்குலைகள் என ஏற்றிக் கொண்டு, சடாட்சரக்குருக்கள் சமயற்காரருடன் வந்து சேர்ந்துவிட்டார்.

இரவு உணவுப்பந்தியில் சடாட்சரக்குருக்கள், வைத்தீஸ்வரக்குருக்கள், மடப்பள்ளி ஐயர், இராமச்சந்திரன், சரவணன் என்ற வரிசையில் உட்கார்ந்திருந்த போது, ''எனக்

கும் பசிக்குது'' எனச் செல்லமாகச் சொல்லிக்கொண்டு சடாட்சரக் குருக்களுக்குப் பக்கத்தில் ஒரு இலையை எடுத்துப் போட்டுக் கொண்டு உமாவும் உட்கார்ந்து விட்டாள்.

பாட்டிக்கு முகஞ் சுழித்து விட்டது.

''எழும்படி உமா ...... ஆண்கள் பந்தியில் நீ உட்காரக் கூடாது ...... எழும்பு'' - காவேரியம்மா அதட்டினாள்.

''குழந்தை எங்களோடு இருக்கட்டும் பெரியம்மா. பசிக்கு ஆண் பெண் என்ற பாகுபாடு இல்லை.'' - சடாட்சரக் குருக்கள் அவளை இருத்தி வைத்துக் கொண்டார்.

''பள்ளிக்கூடம் போகிறாயா குழந்தை?''

''ஸ்கூலுக்குப் போறேன். நாலாங்கிளாஸ் படிக்கிறேன்''

முதற் கேள்விக்குரிய பதிலையும், அடுத்துக் கேட்கவிருந்ததற்கான மறு மொழியையும் சேர்த்துச் சொல்லிவிட்ட அவளின் சுட்டித்தனமும் கெட்டித்தனமும் அவருக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டது.

''பலே கெட்டிக்காரி! ... குழந்தை ரொம்ப சமர்த்தாயிருக்கிறாள், அவளை நல்லாகப் படிக்க வையுங்க ...... எங்கள் ஜாதிப் பையன்கள் மட்டுமல்ல, பெண்பிள்ளைகளும் படித்து முன்னுக்கு வரவேணும். பெண் குழந்தைகளுக்கு பிறகு சீதனம் கொடுக்க எனச் சேமிக்கிற பணத்தைப் படிப்புக்குச் செலவிட வேண்டும். அவர்கள் சொந்தக்காலில் நிற்பதற்கு, படிப்பு உதவியாயிருக்கும். இளவயசில கல்யாணத்திலும் பார்க்க, நம்ம ஜாதிப் பெண்களுக்கு படிப்புத்தான் முக்கியம்.''

லக்ஷ்மி பரிமாறிய பூப்போன்ற இட்லிகளைப் பிய்த்து, சட்னி மிளகாய்ப் பொடிகளிற் தொட்டுக் கொண்டு சடாட்சரக் குருக்கள் சொல்லிக்கொண்டிருந்தார்.

தகப்பனும் மக்களிருவரும் தலை நிமிராமல் மௌனமாகச் சாப்பிட்டுக்கொண்டிருந்தனர்.

காவேரியம்மாவுக்கு இரவில் கண்பார்வை மங்கல். சுவரோடு சாய்ந்திருந்து வாயால் உபசரித்தாள்.

தேவகி சூடான இட்லிகளை ஆவிபறக்கப்பறக்க இறக்கிக் கொண்டிருந்தாள்.

இராமச்சந்திரன் சாப்பாட்டைச் சுருக்கிக்கொண்டு எழுந்து விட்டான். அவனைத் தொடர்ந்து சரவணனும் கை கழுவச் சென்றான்.

லக்ஷ்மி மற்ற மூவரின் இலைகளிலும் மேலும் இரு இட்லிகளை வைத்துச் சாம்பார் விட்டாள்.

சடாட்சரக்குருக்கள் மீண்டும் கதைக்கத் துவங்கி விட்டார். ''சாப்பாடு ரொம்ப ஜாஸ்தி ...... ஆனாலும் உன் பெண் அவிக்கிற - இட்லி அருமையான பதமாயிருக்கு ............ பார்த்தால் புத்திசாலியாகத் தெரியுது ...... படிக்க வைச்சிருக்கிறியா? ...... என்ன படிக்கிறாள்?''

எட்டாம் வகுப்போடு நிறுத்தி விட்டதை லக்ஷ்மி சொன்னாள். ''அவளுக்கு வயசாகி விட்டதே ...... அப்போ கல்யாணம், காட்சி என்ற யோசினையில்லையா?'' - சடாட்சரக் குருக்களின் மனசுக்குள் ஏதோ ஒரு திட்டமிருப்பது அந்தக் கேள்வியில் தொனித்தது.

காவேரியம்மா காதைத் தீட்டிக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

''ஜானகி போனதோடு இந்தக் குடும்பம் பெண் துணையில்லாமல் அந்தரிக்கக் கூடாது ...... தாய் மாமன் மகன் ...... ஒன்றுக்கை ஒன்று ...... உறவும் கெடக் கூடாது'' - புது மலர்ச்சி முகத்திலும் குரலிலும் படர காவேரியம்மா சொன்னாள்.

''சரியாகச் சொன்னீங்க பெரியம்மா ...... நானும் அப்படித் தான் யோசித்தேன்'' - தனது யோசனைக்கு காவேரியம்மா கட்டியஞ் சொல்லிவிட்ட மகிழ்ச்சியில் சடாட்சரக் குருக் கள் சொன்னார்.

''விசர்க்கதை ...... உது நடக்காது. அவளுக்கு உத்தியோக மாப்பிளை பார்க்கிறம், அத்தான் ஒரு நாளும் உதுக்குச் சம்மதிக்க மாட்டார்.'' லக்ஷ்மி பட்டென்று சொல்லி விட்டாள்.

அவர்கள் கைகழுவ எழுந்து சென்று விட்டனர்.

அடுத்தநாள், உறவினர்களும் ஊரவர்களும் வந்து அந்த அன்னதானத்தில் பந்தி வைத்துச் சாப்பிட்டனர்,

அதற்கடுத்த நாள் லக்ஷ்மியும் பிள்ளைகளும் களுத்துறைக்குப் பயணஞ் செல்ல ஆயத்தமாகி விட்டனர்.

காவேரியம்மா, மகளைத் தனியாக வீட்டுக்குள் கூட்டிக் கொண்டு போய் நீண்ட நேரம் புத்திமதிகள் சொன்னாள். தேவகி சூட்கேசுக்குள் துணி மணிகளை அடுக்கினாள்.

உமா காலையிலிருந்தே இரட்டைப் பின்னலும், நீலக்கரை வைத்த சிவப்புக் கட்டைச்சட்டையுமாக தயாராகி நின்று, வேலி வரிச்சு மட்டைகளில் தும்பி பிடித்து விளை யாடினாள்.

கொடிகாமம் வரை அவர்களுடன் காரில் போய் பக்குவ மாக ரெயிலேற்றிவிட்டு வருமாறு, வைத்தீஸ்வரக் குருக்கள் சரவணனிடம் சொன்னார்.

## 14

''அன்றிரவு காவேரியம்மாவுக்குத் தூக்கம் வரவில்லை. படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தாள். மகனும் பேரர் களும் துக்கத்தையும் களைப்பையும் மறந்து தூக்கத்தில் ஆழ்ந்து கிடந்தனர்.

அன்று மாலை லக்ஷ்மியும் பிள்ளைகளும் புறப்பட்டுப் போன பின் வீடே வெறிச்சிட்டு விட்டது போலக் காவேரியம்மா வுக்கு இருந்தது.

நடுச்சாமத்தைக் கடந்துவிட்ட போதும் உறக்கம் வர மறுத் தது, தூரத்தில் நாயொன்று குளிர் நடுக்கத்தில் முனகி ஊளையிட்டுக் கொண்டிருந்தது.

தனது இரு விழிகளாக விளங்கும் மக்களின் வாழ்க்கையில் விதி புகுந்து விளையாடி விட்டதை எண்ணி எண்ணி அந் தத் தாயுள்ளம் கனன்று கொண்டிருந்தது. விவாக வாழ்க் கையில் இருபது வருடத்தோடு தாரமிழந்துவிட்ட தன் தனயனுக்காக இரக்கப்பட்டாள், அவரின் எதிர்காலத்தை எண்ணி அதற்கு விடைகாண முடியாமல் தடுமாறுகிற போது ........

மகள் லக்ஷ்மி பற்றிய சிந்தனை காவேரியம்மாவுக்கு பரி தாபமாகவும் சிக்கலாகவுமிருந்தது.

ஜானகியைக் கைப்பிடித்து நாலு வருடத்துக்குள்ளேயே, தன்னிலும் பார்க்க எட்டு வயசு இளையவளான தங்கை லக்ஷ்மிக்கும் அழகு குணமுமுள்ள மாப்பிள்ளையைத் தேடி நிச்சயதார்த்தத்தையும் நிகழ்த்திவிட, வைத்தீஸ்வரரின் பொறுப்புணர்ச்சியைப் பார்த்து தாய் காவேரியம்மா மட்டு மல்ல அந்த அக்கிரகாரமே வியந்தது.

மோகனமான கவரும் விழிகள், நீண்ட கூரிய நாசி, பரந்த நெற்றி, சிரிக்கும் போது குழியும் கன்னம், மோவாயில் சிறிய பள்ளம், சுருள் சுருளாக நெழிந்து, கழுத்து வரை மட்டும் பரம்பி நிற்கும் கரிய கேசம், மாதுளம்பழ நிறத் தில் நாராயணய்யர் பார்க்க மிக லட்சணமாக இருந்தார்.

இளஞ் சோடிக்கு நிச்சயதார்த்ததன்றே ஒருவரை மற்றவ ருக்குப் பிடித்துவிட்டது.

கலியாண மேடையில், தகப்பனின் ஸ்தானத்திலிருந்து, தங்

கை லக்ஷ்மியை தனது மடியிலிருத்தி, மனைவி ஜானகி கையில் நீரூற்ற, தத்தஞ் செய்து கொடுத்தபோது, வைத்தீஸ்வரர் மந்திரங்களைச் சொல்ல முடியாமல் தொண்டை கனக்க, கண்ணீர் முத்துக்கள் சுரக்க......... காவேரியம்மாவும் கலங்கி விட்டாள்.

'அத்தான்' என நாராயணய்யர் வைத்தீஸ்வரரை குழையக் குழைய அழைக்கும் போது, அதில் அன்பும் மதிப்பும் கலந்த பக்தியிருந்தது.

உதவிப் பூசகராக உறவினர்களுடன், முகத்துவாரத்திலிருந்த நாராயணய்யர், திருமணத்துக்குப் பிறகு களுத்துறைக் கோயிலை ஏற்று, லக்ஷ்மியுடன் தனிக் குடித்தனம் போய் விட்டார். அந்த இரு வருடத்தில் தங்கையையும் மைத்துனரையும் பார்க்கும் தவிப்பில் வைத்தீஸ்வரர் எத்தனை தடவை ரயில் ஏறிவிட்டார்!

இரு வயசுக் குழந்தையாக இராமச்சந்திரன் மழலை பேசிக்கொண்டிருந்தபோது, ஏழுமாசக் கர்ப்பிணியாக லக்ஷ்மியைப் பிறந்தவீட்டுக்குக் கூட்டிக்கொண்டு மைத்துனர் வந்தபோது, வைத்தீஸ்வரர் கொண்ட குதூகலம்தான் எவ்வளவு?

''எல்லா அன்பையும் மறந்துவிட்ட கெட்ட மனுஷன்'' -

குழந்தை பிறந்த செய்திகேட்டு, கூடை கூடையாகப் பழமும் இனிப்புங் கொண்டு வந்த நாராயணய்யர், புண்ணியாகவாசனத்தன்று உறவினர்களை யெல்லாம் அழைத்து விருந்தளித்து குழந்தைக்குத் தேவகி என நாமகரணஞ் செய்து விட்டுப் போய் விட்டார்.

பச்சைக்குழந்தை வளர்ந்து உடம்பு பிரட்டித்தவழத் தொடங்கும் வரை, தாயும் தமையனும் லக்ஷ்மியையும் குழந்தையையும் களுத்துறைக்கு விடவில்லை.

தங்கையையும் குழந்தையையுங் கூட்டிக்கொண்டு வைத்தீஸ்வரர் களுத்துறைக்குப் போனபோது .........

அந்த அதிகாலை வேளையில் அவர்களை வரவேற்க ரயிலடிக்கு கார் கொண்டு நாராயணய்யர் வரவில்லை. கோயிலுடன் சேர்ந்த அவர்களின் குடியிருப்பின் வீட்டு வாசலில் அவர்கள் கால் வைத்தபோது, ராமசாமிப் பண்டாரத்தின் பருவ மகள் கலைந்த கேசமும் அவசரத்தில் அள்ளிச் செருகிய சேலையுமாக, தாழ்த்திய தலையோடு படியிறங்கிப் பதற்றமாக நழுவிக் கொண்டிருந்தாள்.

''கொஞ்சநாட் கூடப் பொறுத்திருக்க மாட்டாத கூத்திக் கள்ளன்!''

நாராயணய்யரைத் தனியே கூட்டிச்சென்று அன்று முழுவதும் அன்பாகப் புத்திமதிகள் சொல்லிவிட்டு, அவர் கூறிய மன்னிப்பை ஏற்றுக் கொண்டு வைத்தீஸ்வரக் குருக்கள் அன்றிரவே ஊர் புறப்பட்டுவிட்டார்.

தங்கையின் கடிதங்கள் ........

தமையனின் பயணங்கள் ........

நாராயணய்யரின் நொண்டிச் சமாதானங்கள் ........

நான்கு வருடங்கள் உருண்டுவிட்ட போதிலும், நாராயணய்யர் அந்தப் புதிய உறவை விடவேயில்லை.

வேறொரு சிறிய வீட்டை எடுத்து அங்கே பண்டாரத்தையும் மகளையும் குடியிருத்தி வைத்துக்கொண்டார்.

''இரண்டு பெண்டாட்டிக்கார ஐயர்'' என்று சொன்னால் இனங்காணப்படுமளவுக்கு அங்கே அவர் பிரபல்லியம் பெற்று விட்டார்!

பண்டாரத்தின் மகள் ஒரு குழந்தைக்குத் தாயாகிவிட்டாள் எனத் தங்கையிடமிருந்து வந்த கடிதத்தைக் கண்டு குருக்களின் உடல் கோபத்தால் பதறியது.

அம்மாள் வருத்தத்தால் அல்லாடிக் கொண்டிருந்த சிறுவன்

இராமச்சந்திரனையும் இருவயசுக்குழந்தை சரவணனையும் கவனித்துக் கொள்ளும்படி மனைவி ஜானகியிடம் கூறிவிட்டு குருக்கள் புறப்பட்டுவிட்டார்.

ஏடாகூடமாக எதுவும் நடந்துவிடக் கூடாதே என்ற அச்சத்தில், அக்கிரகாரத்தை விட்டு முதற்தடவையாக, அவரின் தாயார் காவேரியம்மாவும் அவருடன் களுத்துறைக்கு ரயிலேறினாள்.

இவர்களைக் கண்டதும் நாராயணய்யர் முகத்தைத் திருப்பிக் கொண்டிருந்து விட்டார்.

''மானக்கேடான், நம்பிக்கைத் துரோகமான இச்செயலைத் தொடர்ந்து செய்து கொண்டேயிருப்பதற்கு உமது மனச் சாட்சி சிறிதளவாவது உறுத்தவில்லையா?'' பல்லைக் கடித்துக் கொண்டு வைத்தீஸ்வரர் கேட்டு முடிப்பதற்கிடையிலேயே, நாராயணர் நரசிம்மாவதாரமெடுத்து விட்டார்.

''உலகத்தில் நடவாதது ஏதும் நடந்துவிட்டதோ ......... இதில் என்ன மானக்கேடு ஏற்பட்டிருக்கு? ......... நாங்கள் பூசை செய்கிற முருகன் கூட தெய்வானையோடு வள்ளியையும் வைத்திருக்கிறார்தானே? ...... நான் என்ன உமது சகோதரியை நடுத்தெருவில் தவிக்க விட்டு விட்டேனா.. ... நல்ல சேலை... நேரத்துக்குச் சாப்பாடு எல்லாங் கொடுக்கிறேன்தானே?''- அந்த முட்டாள் கூற்றைக் கேட்டதும் குருக்களின் கோபம் கொழுந்துவிட்டெழுந்தது,

''நாராயணர்! .. ... உமது அரை குறைப்படிப்பை வெளியில் சொல்லாதீர் ...... கேட்பவர்கள் சிரிப்பார்கள். ......... வெட்கக்கேடு... லக்ஷ்மியோடு ஒழுங்காக உமக்கு வாழப் பிடிக்காவிட்டால் அதைச் சொல்லிவிடும். அவளை நாங்கள் கூட்டிக்கொண்டு போய் விடுகிறோம்.'' முடிவாகச் சொல்லிவிட்டார்.

''ஓம் ...... அவளைக் கூட்டிக் கொண்டுபோம் ......... போடி,

போ! உன் அண்ணரோடை போ ........ குழந்தையையும் கூட்டிக்கொண்டு போ.'' - கையை ஓங்கி ஓங்கி லக்ஷ்மியை விரட்ட ஆரம்பித்துவிட்டார் நாராயணர்.

நாலு வயசுத் தேவகி வீரிட்டு அலறி நடுங்கிக் கொண்டு சுவர் மூலைக்குள் நின்றாள்.

''வேண்டாம். அவளைப் புருஷனிடமிருந்து பிரிக்க வேண்டாம் மகனே. கல்லானாலுங் கணவன் புல்லானாலும் புருஷன் என்று வாழும் எங்களின் வம்ச பரம்பரைக்கு வசைச்சொல் ஏற்பட வேண்டாம். இந்தப் பாவமான காரியத்தை நீ செய்ய வேண்டாம். அவளுடைய தலையெழுத்துப்படி நடக்கிறது நடக்கட்டும்.''- காவேரியம்மா மகனைக் கெஞ்சித்தணித்தாள்,

''மாப்பிள்ளை ... உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன் ... லக்ஷ்மியை இனியாவது கண் கலங்காமல் வைத்துக்காப்பாற்றுங்கள்.''- காவேரியம்மா மருமகனிடம் கையிரந்து நின்றாள்.

வைத்தீஸ்வரக் குருக்கள் பிறகு களுத்துறைக்குப் போகவேயில்லை. பல்லைக்கடித்துக் கொண்டு ஊரோடு உட்கார்ந்து விட்டார்.

லக்ஷ்மியின் அடுத்த பிரசவத்துக்குக்கூட, அவளைப் பிறந்த வீட்டுக்கு நாராயணய்யர் அனுப்பவில்லை. காவேரியம்மா மட்டும் ஏறி இறங்க முடிந்த காலம்வரை களுத்துறைக்குப் போய் வந்து கொண்டிருந்தாள். பின்னர் அதுவும் நின்று விட்டது.

''வளர்ந்த பெண் பிள்ளைகளையும் வைத்துக் கொண்டு செத்த வீட்டிற்குக்கூட வராமல் உறவை அறுத்துப் போட்டானே ......''- காவேரியம்மாவின் நெஞ்சம் கனன்று கொண்டிருந்தது.

வயலின் வற்றுத் தண்ணீரில் தவளைகள் மாரடித்துக் கதறிக் கொண்டிருந்தன.

# 15

"இந்த வயசில் எனக்கு இன்னொரு கலியாணமோ?...... .. அவளிருந்த இடத்தில வேறொருத்தியை உடகார்த்தி வைத்துப்பார்க்க எப்படி அம்மா உங்களுக்கு மனசு வந்தது? ....... அவளுக்குப்பிறகு எனக்கு எவளுமே வேண்டாம்''- மோரை விட்டு சாதத்தைக்கையால் நசித்துக் குழைத்துக் கொண்டு முடிவாகக் குருக்கள் கூறிவிட்டார்.

அவர்கள் சாதியில் பொங்கிப்போடவும், குழந்தைகளைப் பராமரிக்கவும் மட்டுமல்ல, சிவாசாரியாராக இருந்து கோவில், விசேஷங்களையும் சுப காரியங்களையும் நடத்துவதற்கு தர்மபத்தினியுள்ளவராக விளங்க வேண்டியது அவசிய மென்றும் இக்கிரியைகளில் தர்மபத்தினி வகிக்க வேண்டியபங்கு இருப்பதையும் சாஸ்திரங்கள் வகுத்திருந்தன.

உள்வளைந்த உடம்பு, ஊதிப் பருத்த வயிறு, வழுக்கை விழுந்த உச்சந்தலையில் எஞ்சி நரைத்த முடிகளை இழுத்துச் செருகிய கூர்ச்சக்குடுமி, பார்வை மங்கி விட்ட கண்களைக் கூர்மைப் படுத்த ஒடிந்து விட்ட மெல்லிய கம்பி பிரேமுக்குப் பதிலாக நூலால் இழுத்துக்கட்டிய மூக்குக் கண்ணாடி. மேல் வரிசை நடுப்பற்களும் கொடுப்புப்பற்களும் கழன்று விட்ட வாய், இருந்து எழும்பவே மூச்சிரைக்கிற வயசில் ... இரண்டாந்தாரமாக மட்டுமல்ல, மூன்று நாலாந்தாரமாகக் கூட, தாரமிழந்த கையோடு தொடர்ந்தும் சிவாசாரியராக உற்சவங்களை நடத்த வேண்டுமென்று கூறிக்கொண்டு இந்தியாவுக்குப் போய் பெற்றோருக்கு இருநூறும் முன்னூறும் கொடுத்து, தமது புதல்வருக்கு முடித்து வைப்பதற்கெனப் பொய் சொல்லி 17, 18 வயசுப் பிராமணப் பெட்டைகளைக் கூட்டிக் கொண்டு வந்து மறு தாரம் முடித்துக் கொண்டு அசிங்க வாழ்க்கைநடத்துகிற தனது ஜாதியைச் சேர்ந்த பலரைப் பற்றி காவேரியம்மா கேள்விப்பட்டிருக்கிறாள்.

ஆனால் தனது மகனுக்கு இன்னும் நாற்பத்தேழு கூட முடியவில்லை. அவனின் எதிர் கால வாழ்க்கை எப்படி

அமையப் போகிறது? அந்தக் குடும்பத்தை, ஒரு பெண் துணையின்றி, தனியாகத் தானே எப்படி இழுத்துக் கரை சேர்ப்பது எனக் காவேரியம்மா அல்லும் பகலும் கவலைப் பட்டாள்.

அன்று மதிய உணவை மகன் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது, எதிரே குந்தியிருந்து பரிவாகப் பரிமாறிக் கொண் டே, தனது மனச் சஞ்சலத்தைத் தீர்த்துக் கொள்கிற தவிப்பில் பயந்து பயந்து சொன்னாள்:

''எனக்கும் கண்பார்வை குறைந்து கொண்டு வருகிறது. ஜாஸ்தியா வேலை செய்ய முடியாமலிருக்கு........ எட்டு மாசமா ஒரு நேர விரதமும் ஆளுமாக மெலிந்து போய் விட் டாய்......சாப்பிட வேண்டிய வயசில பிள்ளைகளும் ஒழுங் கான உணவின்றி......எத்தனை நாளைக்கு ஒரு பெண் துணையில்லாமல் இந்தக் குடும்பம் இப்படியே கஷ்டப்படு கிறது......உனக்கென்ன பெரிய வயசே......யோசித்து ஒரு முடிவைச் செய்......போனவள் இனியென்ன திரும்பி வரப் போறாளே?'' - தனக்குத் தெரிந்த யதார்த்தமான ஒரு முடிவுக்கு மகனைக் கொண்டு வருவதற்கு காவேரியம்மா முயற்சித்தபோது குருக்கள் பிடிவாதமாக மறுத்து விட்டார்.

குழைத்துச் சாப்பிட்டு விட்டு இலையைத் தூக்கிக் கொண் டு, தண்ணீர்ச் செம்புங் கையுமாக அவர் எழுந்து போய் விட்டார்.

காவேரியம்மாவுக்கு எரிச்சலும் ஏமாற்றமுமாயிருந்தது.

''மூன்று நேரமும் இந்த அடுப்புப்புகையில் என்னை இருத்தி எழுப்பி, கருக்கிப் போட்டு, கெதியாகச்சுடலைக்கு அனுப்பி விடுங்கோ.'' அவளின் ஆத்திரப்புறுபுறுப்பு குருக்களின் காதில் விழவில்லை.

வைத்தீஸ்வரக்குருக்கள் அவரின் நாற்பத்தெட்டாவது வய சிலேயே திடீரென்று இருபது வருஷங்கள் கூடி விட்டது

போலத்தோற்றமளித்தார். நெற்றியிலும் கன்னத்திலும் சுருக்கங்கள் விழத் துவங்கி விட்டன. தலை மயிர்கூட நரை தட்டத் தொடங்கி விட்டது. ஒழுங்காக அடிக்கடி சவரஞ் செய்யப்படாத முகம். உடல் மெலிந்து, உள்ளம் தளர்ந்து.........அவரின் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் ஜானகி தன் கூடவே கொண்டு போய் விட்டாள். கைவிட முடியாத கடமை என்ற ரீதியில் கோயிற் பூசையைச் செய்து கொண்டிருந்தார். முன்பு போல உபயகாரர்களைத் தேடிப் பிடித்து, கலகலப்பாகச் செய்ய வேண்டுமென்ற உற்சாகமில்லை.

இராமச்சந்திர சர்மா வேளையோடு காலைப் பூசையை செய்து கொடுத்து விட்டு வெளியூர்க் கோயில் உற்சவங்களுக்கு அடிக்கடி போய் வந்து கொண்டிருந்தான்.

சரவணனுக்குப் படிப்பும் பாடசாலைப் புற வேலைகளும் தலை நிறையக் குவிந்து போயிருந்தன. கல்லூரியில் கரப் பந்தாட்டக் குழுவின் கப்டனாகவும், மாணவர் மன்றத் தலைவனாகவும் தெரிவு செய்யப்பட்டிருந்தான். இடையிடையே கதையும் கவிதைகளும் எழுதி ஈழகேசரிக்கும் சுதந்திரனுக்கும் அனுப்பிக் கொண்டிருந்தான். அந்தக் குடும்பத்துக்கு சாதமும் ஒரு சாம்பாரும் மட்டுமே காவேரியம்மாவால் பொங்கிக் கொடுக்க இயலக் கூடியதாயிருந்தது.

மத்தியானச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு, கோயில் வெளி மண்டபத்தில் குருக்கள் நீட்டி நிமிர்ந்து படுத்து விட்டார்.

கோடை வெயிலின் அகோரத்துக்கு, வயல் வெளியிலிருந்த வரசித்தி விநாயகர் கோயில் வெளி மண்டபத்தில் குளிர்மையும் இதமான காற்றும் நிலவியது.

கோயில் எசமான் கணபதிப்பிள்ளையும் மற்றும் அவரின் இரண்டு மூன்று சகபாடிகளும் இப்போது அங்கு வந்து சில மணி நேரத்துக்கு அரட்டைக்கச்சேரி நடத்துவது வழக்க

மாகிவிட்டது. கோடு கீறி நாயும் புலியும் நாலு ஆட்டம் விளையாடாமல் அவர்கள் எழுந்து போவதேயில்லை.

அவர்கள் வருவதைக் கண்டதும் குருக்கள் நிமிர்ந்து தூணுடன் சாய்ந்து உட்கார்ந்தார். எதிரே அவர்கள் துவாயால் நிலத்தைத்தட்டிவிட்டு அமர்ந்தனர்.

''கொளுத்துகிற வெய்யிலில் பயிர் பச்சைகளெல்லாம் பொசுங்கிப் போச்சு,''

''எங்கடை பகுதியுக்கை இரண்டு மூன்று தவிர, எல்லாக் கிணறுகளும் உவராகப்போச்சு. குடிக்கிற தண்ணீர்கொண்டு வர எங்கடை பெண்டுகள் குடமுங் கையுமாக நாள் முழுவதும் அலையவேண்டியிருக்கு. எங்கடை பக்கத்துக்கும் வரக் கூடியதாக அத்துளுத் தண்ணிப்பைப்பைப் போட்டுத் தரக் கூடியவரைத்தான் வாற தேர்தல்ல எம்.பி. ஆக்கவேணும்.''

''எங்கடை பள்ளிக் கூடத்துக்குப் புதுக் கட்டிடம் கட்டி பெரிய வகுப்புகளை வைக்கச் சொல்லி அவரைக் கேக்க வேணும். கால் வலிக்க எங்கடை பிள்ளையள் தூரத்துப் பள்ளிக் கூடங்களுக்குப் போகவேண்டி இருக்கெல்லே ......''

கிழக்குப்பகுதியாரின் கஷ்ட நிவர்த்திக்கான திட்டங்கள் மட்டுமே அங்கு உருவாகிக் கொண்டிருந்தன.

படிப்பதற்குப் பொருளாதார வசதியோ, பாடசாலை அனுமதி வாய்ப்போ இன்றி சிறுவயசிலேயே கூலி வேலைக்கும் மாடு மேய்க்கவும் போய்க் கொண்டிருக்கிற வடக்குப் பகுதிச்சிறார்களைப் பற்றி, காலையிலும் மாலையிலும் வயல் வெளியிலுள்ள ஒரே நல்ல தண்ணீர்க் கிணற்றிலிருந்து, வருசம் முழுவதும் நீர் சுமந்து கொண்டேயிருக்கிற அந்தப் பனங்கூடல் வாழ் பெண் ஜென்மங்களின் சிரமத்தைப்பற்றி அவர்களின் பேச்சில் ஒரு சொல்லுக்கூட வரவில்லை.

குருக்கள் கொடுப்புக்குள் சிரித்துக்கொண்டே எழுந்துவிட்டார்.

''கொஞ்சம் இருங்கோ குருக்களையா ..... கோயிலைப்

பற்றி உங்களோடை கதைக்க வேணும் ...... முந்தியைப் போல அக்கறையைக் காணேல்லை ...... அம்மா போன பிறகு பிள்ளையாருக்கு மோதகமுமில்லாமப் போச்சு ...... விசேசத்துக்குக் கூட வெறும் சக்கரைப்புக்கையோடு சமாளிச்சுக் கொண்டு வாறியள் ...... படிக்க அனுப்பி சின்னவரையுங் கெடுத்துப் போட்டியள். எளிய சாதிப் பெடியளோடை அவர் பந்தடிச்சுக் கொண்டு திரியிறார் ...... நாங்கள் சொன்னமாதிரி படிப்பை நிறுத்தியிருந்தால் இப்ப மடப்பள்ளி வேலைக்கு நல்ல உதவியாயிருக்கும் ...... நீங்களும் தனிமரமாய் கயிட்டப்பட வேண்டாம் ...... கொடியேத்தம் வருகுதெல்லே ...... அதுக்கு முந்தி, அப்பிடியொண்டும் யோசினையில்லையே குருக்கள்? ........ உங்கடை சாதிக்கை வடிவான குமருகள் கனபேர் கரைசேராமலிருக்கினம்தானே ஆக்கும்?'' - அவர்களின் குத்தலும் கிண்டலும் குருக்களுக்கு எரிச்சலாக இருந்தது.

''கொடியேத்தம் நடக்கும்........ நீங்கள் பயப்பட வேண்டாம்'' - வெட்டிச் சொல்லிவிட்டு அவர் எழுந்து மேற்கு வீதியைநோக்கி நடந்து விட்டார்.

வெளிமண்டபத்தில் சிரிப்பொலி அடங்க நீண்ட நேரம் எடுத்தது.

வியர்த்த உடம்போடு வீடு திரும்பிய சரவணன், துவாயும் கையுமாக குளிப்பதற்கு தாமரைக் குளத்துக்குப் போய்க் கொண்டிருப்பதைப் பார்த்து குருக்களின் உள்ளம் குளிர்ச்சியடைந்தது.

## 16

**பொது**த் தேர்தல் அமர்க்களம் ஆரம்பமாவதற்கு முன்பே, கல்லூரிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்தி முடித்து விடும் நோக்கத்தில் வடமராட்சி ஆசிரியர் சங்கம், கரப்பந்து, கால்பந்து, கிரிக்கட் போட்டிகளை அறிவித்து விட்டது.

ஹாட்லி, வடசென்றல், சேக்கிறட்ஹார்ட், ஞானாசாரியா, விக்நேஸ்வரா, சிதம்பரா, மெதடிஸ்ட் மிசன் கல்லூரிகள் வரிந்து கட்டிக்கொண்டு களத்தில் இறங்கிவிட்டன. இக் கல்லூரிகளின் மாணவரின் உற்சாகம் கரைபுரண்டுவிட்டது.

சரவணன் தனது கல்லூரிக்குழுவின் மற்றைய ஐந்து வீரர் களுக்கும், விளையாட்டுத்திடலில் அவர்கள் வகிக்க வேண் டிய இடங்களை ...... ஆட்ட நுட்பங்களை அழுத்திச் சொல்லிவிட்டு கூர்மையாக, நுட்பமாக, கம்பீரமாக விளை யாடினான்.

பூணூலை மறைத்த அரைக்கைபனியன், வெள்ளை அரைக் காற்சட்டை, படியாமற் பறக்கிற குறொப் ... மாலைவெயி லில் துள்ளி, சரிந்து, குனிந்து, உயர்ந்து...... குதி நிலத்தில் பதியாமல் எம்பி எழுந்து, வேகமாகப் பறந்துவரும் பந்தை குவித்த கைகளால் தடுத்து திருப்பி அடிக்க ...... அந்த வீச்சுக்குமுன் எதிர்க்குழு ஆட்டக்காரர்கள் ஈடு கொடுக்க மாட்டாமல் கைநழுவி நின்றனர்.

''ஜே ஜே மெதடிஸ்ட்!''

''ஜே ஜே சரவணன்!''

அந்த ஆண்டின் கரப்பந்தாட்டத்துக்கான வெள்ளிக் கேட யத்தை, தனது கல்லூரிக்கு சரவணன் சுவீகரித்துக் கொடுத்தான்.

பாடசாலைக்குப் பெருமை சேர்த்த விளையாட்டு வீரர் களைப் பாராட்டி நடந்த விருந்தில், சரவணன் விசுக் கோத்தை மென்று, வெறும் சோடாவை உறிஞ்சினான்.

விருந்து முடிவில் அக்கல்லூரியின் பெரிய பாதிரியார் எழுந்து பரிசுத்த வேதாகமத்திலிருந்து பின்வரும் பந்தியை வாசித்தார்.

''கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவனாகிய யான் உங்களுக்

குச் சொல்கிற புத்திமதி என்னவெனில், நீங்கள் அழைக் கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனத்தாழ்மையும், சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய் அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி சமாதானக் கட்டினால் ஒருமையைக் காத்துக் கொள்வ தற்கு ஜாக்கிரதையாயிருங்கள்.''

அந்தத் தடித்த புத்தகத்தை வாசித்து மூடிவிட்டு, மாண வர்களுக்கு வாழ்த்தையும் பாராட்டையும் கூறி, வெற்றிக் கேடயத்தையும் பளபளக்கும் பெரிய வெள்ளிக் கோப்பை யையும் சரவணனிடம் கொடுத்து, கைகுலுக்கி ஆசீர்வதித் தார்.

அந்தப் பரிசுப் பொருட்களைப் பாட்டிக்கும் அப்பாவுக்கும் காட்டி மகிழ்வதற்காக அந்த ஒழுங்கை ஊடாக அவன் வீட்டிற்கு வந்த போது சொறி நாய்கள் அவனைக் கண்டு மிரண்டு உறுமிக் குரைத்தன.

வீட்டிற்கு அவன் வந்த போது, அங்கே கனகசபை வாத் தியாரும் மற்றும் மூன்று இளைஞர்களும் வைத்தீஸ்வரக் குருக்களுடன் உற்சாகமாகக் கதைத்துக் கொண்டிருந்தனர். இளைஞர்களிலிருவர் கிழக்குப் பகுதியைச் சேர்ந்தவர்கள். அவனுடன் சரஸ்வதி வித்தியாலயத்தில் ஒன்றாகப் படித்த வர்கள். இப்போது அவர்களில் ஒருவன் ஹாட்லியிலும், மற்றவன் யாழ். இந்துவில் விடுதியிலிருந்தும் படிப்பவர்கள். மூன்றாமவன் ஆசாரி பக்கத்துப் பையன். படிப்பைத் தொடராமல் குலத் தொழிலில் ஈடுபட்டிருந்தான். முழங் கைக்கு மேல் புஜத்துக்கு கீழேயுள்ள தசை நார்கள் இறு கிப்புடைத்திருந்தன. தேகாப்பியாசமில்லாமலே உடல் அழ காகவும் உறுதியாயுமிருந்தது.

சரவணன் ஈட்டிய புகழைக் கண்டு அந்த நால்வரும் மிக வும் மகிழ்ச்சியுற்றனர். உதட்டாலன்றி அவர்கள் அவனை உளமாரப் பாராட்டிய போது குருக்களுக்குத் தெம்பும் பெருமிதமுமாயிருந்தது.

''அறிவும் புகழும் ஈட்டிவரும் மாணவர்கள் தமது கிராமத்தின் பிற்பட்ட நிலையை உயர்த்தும் பணியிலும் ஈடுபட வேண்டும், இந்தக்கிராமத்துக்கென ஒரு வாசிகசாலை நிறுவ யோசித்திருக்கிறோம், குருக்களின் சம்மதத்தோடு சரவணனையும் இந்த முயற்சியில் ஈடுபடுத்த விரும்புகிறோம்.'' சுற்றி வளைக்காமல் கனகசபை உபாத்தியார் சொன்னார்.

''விதானையார், வி. சி. சேர்மன், கடைத் தாமோதரம், கொந்திறாத்தர் முருகேசர், சின்னத்தம்பிச் சட்டம்பியார், கோயில் மணியகாரன் என எல்லாரையும் சந்தித்து விட்டோம். அவர்கள் வாசிகசாலை அமைக்கச் சம்மதம் சொல்லிவிட்டார்கள். நாளை பின்னேரம் 6 மணிக்கு பள்ளிக் கூடத்தில் ஆலோசனைக் கூட்டம். குருக்களும் மகனும் வரவேணும்.''

''சந்தோஷம் வாத்தியார் ...... வடக்குப் பக்கத்தாருக்கும் சொன்னீர்களா? ...... அவர்களிலும் இரண்டொரு பையன்கள் படிக்கத் துவங்கியிருக்கிறார்களாம். நாலைந்து பேர் காலி, குருநாகல் என்று வெளியூர்களில் சப்பாத்துக்கடையும் நடத்தத்துவங்கி விட்டார்களெனக் கேள்விப் பட்டேன், பாவம், அவர்களும் மனிதர்களாக முன்னேறத்தானே வேணும்?''- குருக்களின் மனிதநேய ஆதங்கம் கனகசபை உபாத்தியாயருக்கு மிகவும் பிடித்து விட்டது.

''ஓம் குருக்களையா ...... அவர்களைச் சந்தித்துச் சொல்லியிருக்கிறோம். கூட்டத்துக்கு வருவார்கள் ........ சரவணன் ...... அப்பாவையுங் கூட்டிக் கொண்டு நேரத்துக்கு வந்து விடுங்கள்.''

அழைப்பு விடுத்துவிட்டு அவர்கள் புறப்பட்டுச் சென்று விட்டார்கள்.

## 17

கனகசபை வாத்தியார் தமது இனிய குரலில் இராகத்துடன் தேவாரத்தைச் சொல்லிய பின், கூட்ட நோக்கத்தை விளக்கிச் சொன்னார்.

ஆன்மீகத்தை வளர்க்க ஆலயம், கல்வியையும் ஒழுக்கத்தை யும் போதிக்கப் பள்ளிக்கூடம் என்பன கிராமத்துக்கு அத்தியாவசியமாக இருப்பதைப் போல அறிவை வளர்க்கவும் சமூக முன்னேற்றத்துக்கும் ஒரு வாசிக சாலை அமைய வேண்டும் என அவர் வலியுறுத்தினார். மக்களிடம் புரிந்துணர்வை ஊட்டிடவும், உலகப் புதினங்களை அறிந்திட வைக்கவும் சனசமூகநிலைய வாசிகசாலை பெரிதும் உதவ முடியும் என எடுத்துச் சொன்னபோது, அந்தக் கூட்டம், அவரின் ஆலோசனையை ஒரே தலையசைப்பில் ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

அக் கூட்டத்துக்கு எல்லாப் பகுதி ஆண்களும் வந்திருந்தனர். மாலைப் பூசை நேரமென்றதால் குருக்கள் போக முடியவில்லை. சரவணனை அனுப்பியிருந்தார். முன் வரிசை வாங்கில் அவன் உட்கார்ந்திருந்தான். அந்த வாங்கில், அவன் அருகில் வேறெருவரும் உட்காரவில்லை.

வடக்குப் பகுதி ஆட்கள் மண்டபத் தொங்கலின் குந்துச் சுவர்களில் மண்ணைத்துடைத்துவிட்டு ஏறியிருந்தனர்.

கோயில் மணியம் கணபதிப்பிள்ளை எழுந்து, கோயில் கிழக்கு வீதி அரச மரத்துக்கு எதிரே மூன்று பரப்பு நிலத்தை வாசிக சாலை கட்டுவதற்காக உபகரிப்பதாக அறிவித்தபோது பெரிய கரகோஷம் எழுந்தது.

கோயில் மணியத்தையும், விதானையார் கதிரித்தம்பியை யும், வி. சி. சேர்மன் வீரகத்திப் பிள்ளையையும் போஷகர்களாகப் பிரேரித்தபோது மீண்டும் கரவொலி.

அந்த மகிழ்ச்சியில் விதானையார் எழுந்து, கனகசபை உபாத்தியாரை நிர்வாக சபைத் தலைவராகவும், சின்னப்பு ஆசாரியை உப தலைவராயும் பிரேரிக்க, கோயில் மணியம் திருப்தியோடு ஆமோதித்தார்.

ஒரு இளைஞரையே செயலாளராகத் தெரிவு செய்ய வேண் டும் என்ற கோரிக்கை இளைஞர் பகுதியிலிருந்து வலுத்

தெழ, தலைவர் அதனை ஏற்க, சரவணனின் பெயரை அந்த இளைஞர்கள் முன் மொழிந்துவிட்டனர். சின்னப்பு ஆசாரியார் மகிழ்ச்சியோடு வழி மொழிந்தார். ஏகமனதாக அவன் தெரிவு செய்யப்பட்டுவிட, எட்டுப்பத்துச் சோடிக் கண்களின் புருவங்கள் எழுந்துயர்ந்து விரிந்து இறங்கின.

கடைத் தாமோதரம்பிள்ளை பொருளாளராகத் தெரிவு செய்யப்பட்டதும், வாசிகசாலை அமைப்புக்கான சூத்திரக் கயிறு தங்கள் கைக்குள் அடங்கி விட்டதென கிழக்குப் பகுதியார் திருப்திப்பட்டனர்.

திக்குக்கு ஒருவராக குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப் பெற்றதும், சரவணன் நன்றியுரை கூற எழுந்து நின்ற போது --

நிறைகலையோடு அந்தக் கூட்டத்துக்கு மார்க்கண்டர் அப்போதுதான் வந்தார்.

பெற்றோமாக்ஸ் வெளிச்சத்தில், சரவணன் பேசிக் கொண்டு நின்ற போது, மேடையை நோக்கிச் சென்ற அவர் உரத்த குரலில் உறுமத் தொடங்கினார்.

''வேதப் பள்ளிக்கூடத்தின் எளிய சாதிப் பாதிரியின் காலில நீர் விழுந்து கிடக்கிறது போதாதெண்டு, வாசிகசாலை வைச்சு ஊரில எல்லாரையும் இருத்திச் சம போசனஞ் செய்யப் போறீரோ --- அது நடக்க நான் விட மாட்டன். இந்த மார்க்கண்டனுக்கு ரோசமிருக்கு --- மானமிருக்கு .........'' - தள்ளாடிக் குலைத்துக்கொண்டிருந்த மார்க்கண்டர் திடீரெனப் பெற்றோமாக்ஸ்சைத் தூக்கி நிலத்திலறைந்து கொண்டு கத்தினார். ''கூட்டமும் மண்ணாங்கட்டியும் ......... போங்காணும் பேய் ஐயர்.'' -- சரவணனை நோக்கி அவர் பாய, இளைஞர்களின் வலுவான பல கரங்கள் சங்கிலிக் கோவையாக அவனைச் சூழ்ந்து வியூகமமைத்தன.

இருட்டில் குந்துச் சுவர்களிலிருந்து இறங்கி ஓடி வந்தவர் களின் கைகளின் வீச்சுக்கு ஈடுகொடுக்கமாட்டாமல் மார்க் கண்டர் விழுந்து சுருண்டு கிடந்தார்.

வாசிகசாலை அங்குரார்ப் பணக் கூட்டம் சிதறிக் கலைந்து விட்டது!

# 8l

சிரவணனுக்கு ஆறு பாடங்களில் 'டிஸ்ரிங்சன்' - இரு பாடங் களில் 'கிறெடிற்'. - எஸ். எஸ். சி. முடிவுகளை அவன் வீட்டில் வந்து சொன்னபோது ''நீ ரொம்பக் கெட்டிக் காரத்தங்கமடா'' எனப்பாராட்டிய காவேரியம்மாள், மிள காய்ச் செத்தலும் உப்புங் கொண்டு பேரனின் தலையைச் சுற்றி நாலூறு கழித்ததைப் பார்த்துக் குருக்கள் பெருமிதப் பட்டார்.

வெகு காலத்துக்குப் பிறகு, வரசித்தி விநாயகர் கோயிலில் அன்று விசேஷ மோதக பூசை நடந்தது.

இராமச்சந்திரன் தனது தம்பிக்கு ஒரு கைக்கடிகாரம் வாங் கிப் பரிசளித்தான்.

கனகசபை வாத்தியாரும் பல இளைஞர்களும் வந்து பாராட் டினார்கள்.

சடாட்சரக் குருக்கள் சரஸ்வதி சிலையும், 'பார்க்கர்' ஊற் றுப் பேனாவும் வழங்கி வாழ்த்திவிட்டுப் அன்றிரவு அங்கு தங்கிவிட்டார்.

அன்றிரவு அவருடைய மகளின் சாதகத்தையும், இராமச் சந்திர சர்மாவின் சாதகத்தையும் சடாட்சரக்குருக்கள் ஒப்பிட்டுப் பார்த்து திருப்திகண்ட மகிழ்ச்சியில், இரு சாதகங்களையும் தமது நண்பரிடம் கொடுத்துச் சம்ம தம் கேட்ட போது, அவர் தமது கருத்தை வெளியிடுவதற்கு முன், காவேரியம்மாவிடமும் இராமச்சந்திரனிடமும் விருப் பத்தை வினவினார்.

காவேரியம்மாவுக்கு எல்லையற்ற மகிழ்ச்சி.

இராமச்சந்திரனும் திருப்தி தெரிவித்துவிட்டான்.

அந்தச் சம்பந்தத்துக்குப் பரிபூரண சம்மதத்தை வைத்தீஸ்வரக் குருக்கள் தெரிவித்து விட்டார் - அவருக்குத் தெரியும், தமது நண்பர் சடாட்சரக் குருக்கள் சரியானதைத்தான் நினைப்பார், நினைத்ததை முடித்தும் விடுவாரென்பது!

அடுத்த நாட் தொடக்கம், சின்னப்பு ஆசாரி புது உற்சாகத்தோடு, கலியாண : தயாரிப்பு வேலைகளிலிறங்கி விட்டார்.

மாப்பிள்ளை - பெண் வீடுகளிரண்டுக்கும் அடிக்கடி பறந்து ஓடிப் போய் ஆகவேண்டிய உதவி ஒத்தாசைகளிலீடுபட்டுக் கொண்டிருந்தார்.

மாவிட்டபுரம் கந்த சுவாமி கோவிலில் அடக்கமாக அந்தத் திருமணம் விரைவில் நடைபெற்றது.

மருத்துவமா? விஞ்ஞானமா? பொறியியலா? கலைத்துறையா - எத்துறையில் சரவணனின் படிப்பைத் தொடர வைப்பது என மற்றவர்கள் மண்டையைக் குடைந்து கொண்டிருந்த போது, வீரகேசரியில் வெளி வந்த விளம்பரத்தின்படி, சரவணன் இலங்கை வங்கிக்கு இலிகிதராகச் சேர்வதற்கு விண்ணப்பித்து விட்டான்.

அவ்வூர் வாசிக சாலைக்கென காணி உபகரிப்பதாக வாக்களித்த கணபதிப்பிள்ளை, பிறகு பார்ப்பம் எனப் பின்னடித்துக் கொண்டேயிருந்தார்.

## 19

அந்தக் கிராமத்தின் வடக்குப்புறப் பனங்கூடலின் குடிசைகளில் நட்சத்திரச் சின்னம் பொறித்த சிவப்புக் கொடிகள் உயரப் பறந்துகொண்டிருந்தன,

பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்கு, அத்தொகுதிக்கான நியமனப் பத்திரங்கள் ஏற்கப்பட்டு தேர்தல் தினமும் அறிவிக்கப்பட்டு விட்டது.

சைக்கிள் - வீடு - நட்சத்திரம் ஆகிய சின்னங்களைத் தனித்தனியாகத் தாங்கிய போஸ்டர்களில், மக்கள் தொண்டராகிய தம்மையே ஆதரித்து அச்சின்னத்துக்கு வாக்களிக்கும் படி, ஒவ்வொரு அபேட்சகரும் பெரிய புகைப்படத்தில் கைகூப்பிய வண்ணம் வாக்காளப் பெருமக்களுக்கு அன்போடு விண்ணப்பித்துக் கொண்டிருந்தனர்.

அந்த ஊரின் மேற்குப்பகுதி இனங் காட்டிக் கொள்ளாமல் மௌனமாயிருந்தது.

கிழக்குப் பகுதியார் இரண்டு பட்டு நின்றனர்.

''இந்தத் தேர்தல்லை எங்கடை பெடியனை எப்படியும் வெல்லச் செய்யவேணும்'' என்ற அங்கலாய்ப்பு ஒரு புறம்

''சாய்...... அவர் நல்ல மனுசன்தான். ஆனால் கொம்யூனிஸ்ட் கட்சியாகக்கிடக்கே. சாதி சமயத்தை யெல்லாம் அழிச்சு, எளியதுகளை எல்லாரோடும் சமமாக்கிப் போடுவினம்...... பிறகு இந்த எளியதுகள் ஊருக்குள் எங்களைத் தூசாயும் மதிக்காதுகள்'' என்ற அருக்குளிப்பு மறுபுறம்.

முகம் முறிக்க முடியாத நெருங்கிய உறவினர்களின் வீடுகளில் மட்டும் கிழக்குப்பகுதியில் இங்கொன்றும் அங்கொன்றுமாக நட்சத்திரக்கொடிகள் முளைத்திருந்தன.

வி. சி. சேர்மனும் விதானையாரும் எதிர்க்கட்சி அபேட்சகரிடம், வாய் நனைத்து, கை நீட்டிப் பெருந் தொகையை வாங்கிக் கொண்டு விட்டதால், அத்தொகைக்கு முழுத் துரோகமும் செய்யாமலிருப்பதற்காக, தமக்கும் நட்சத்திர அபேட்சகருக்குமுள்ள் உறவு முறையையும் உதறி விட்டு, உட்கார நேரமில்லாமல் தமது ஆதரவு அபேட்சகருக்காக இரவு பகலாக வாக்கு வேட்டையாடினர்.

இப்படிக் கிராமத்தின் கிழக்குப்பகுதி தடுமாறிக் கொண்டிருந்தது. கோயில் மணியகாரன் கணபதிப்பிள்ளை, நட்சத்திர அபேட்சகரின் உறவு முறையை முறிக்கவும் முடியாமல் விதானையார் - வி . சி . சேர் ம னின் நட்பைப்பகைக்கவும் முடியாமல் அடுப்படிப் பூனையாக அடைந்து கிடந்தார்,

''இந்த ஊரில் நாங்கள் தனிக் குடும்பம் ..... எங்களுக்கு எது நடந்தாலும் கேட்பதற்கு எவருமில்லை. ..... தங்களுடைய பதவிப் போட்டிக்கு பகடைக் காயாகப் பயன்படுத்திவிட்டு பிறகு தூக்கி எறிந்து விட்டு அவர்கள் போய் விடுவார்கள்.......... இந்தச் சகதிக்குள் நீ சிக்கிக் கொள்ள வேண்டாம்........ உன்னைப் படிக்க வைத்ததைப் பார்த்து அவர்கள் குமைந்து கொண்டிருக்கிறார்கள் ......... பிறகு இதையே பெரிய பிரச்னையாக்கி விடுவார்கள். ஒதுங்கியிருப்பது தான் எனக்கு நீ செய்கிற உதவி'' வைத்தீஸ்வரக் குருக்கள் முதற் தடவையாகத் தமது மகனைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்.

குருக்களின் மனச் சஞ்சலத்துக்கு மருந்தாக, தேர்தல் நெருங்குகிற நாட்களில், வங்கி நேர்முகப் பரீட்சைக்கு சரவணனைக் கொழும்புக்கு வருமாறு அழைப்பு வந்தது.

பாட்டி கட்டிக் கொடுத்த புளிச் சாதமும் பொரிவிளாங்காய் உருண்டைகளும் கொண்டு அவன் புறப்பட்டுப் போய் விட்டான்.

தேர்தல் தினம் நெருங்க நெருங்க வி . சி . சேர்மன் பகுதியும் பனங்கூடற் பகுதியும் முறுகிக் கொண்டிருந்தனர்.

தமது ஆதரவு அபேட்சகர் மறுநாள் அக்கிராமத்துக்கு வருகிற போது இத்தனை செங் கொடிகளையும் பார்த்து வி . சி . சேர்மனதும் விதானையாரினதும் செல்வாக்கு அந்த ஊரில் செல்லாக் காசாகி வருவதை நேரில் கண்டு விடக்கூடாது என்ற அச்சத்தில், இருவரும் அன்றிரவு தமது

எடுபிடிகளை ஏவி விட ........ வடக்கே போய் கொடிகளை அறுத்தெறிந்த அவர்கள், செம்மையாக வாங்கிக் கட்டிக் கொண்டு திரும்பினார்கள்.

''எங்கடை பெடியளுக்கு கை நீட்டியடிக்க எளியதுகளுக்கு என்ன துணிச்சல்?''

ஆத்திரங் கொண்ட கிழக்குப் பகுதியார், தம்து அரசியல் வேறுபாடுகளை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு, கச்சை கட்டிக் கொண்டு கிளர்ந்தெழுந்து விட்டனர்.

தேர்தல் சமயத்தில் அக்கிராமத்தில் சாதிச் சச்சரவு ஏற்பட்டால் அதன் தாக்கம் அடுத்த கிராமங்களுக்கும் பரவி, தமது ஆதரவு அபேட்சகரை மண் கவ்வ வைத்து விடும் என்ற வி. சி. சேர்மனின் அனுபவ உபதேசத்தையும் மீறிக் கொண்டு விதானையார் வீறு கொண்டு நின்றார்.

சண்டியர் மார்க்கண்டர் தலைமையில், தோட்ட வெளியைக் கிழித்துக் கொண்டு, பனங்கூடலை நோக்கி படை புறப்பட்டு விட்டது. கைகளில் கத்தி, பொல்லு, இரும்புச் சலாகை, பெற்றோல் ரின்........

ஆண்களும் பெண்களும் கூலித் தொழில்களுக்குப் போய் விட்ட பகல் வேளையில், வீடுகளில் எஞ்சியிருந்த குஞ்சுங் குமர்களும், கூனல் கிழவிகளும், கிங்கிரக் கூட்டத்தைக் கண்டு பயந்து கூச்சலிட -

'அடியுங்கடா ........ உதையுங்கடா ........

உடையுங்கடா'' - தளபதி மார்க்கண்டர் அட்டகாசக் குர,லில் கட்டளை பிறப்பித்துக் கொண்டிருந்தார்.

பானை சட்டிகள், முட்டிகள், முடாக்கள் நொருங்கிச் சிதற ........

தவழும் குழந்தைகளையும், படுக்கையோடு கிடந்த வயோதிபர்களையும் அந்த வீரர்கள் அடித்து உதைத்து ........ ஈனஸ்வர ஒலியில் முனகல்கள்.

சிறுவர் சிறுமிகள் பாய்ந்தோடிய வண்ணம் கூச்சலிட்டனர். குமர்ப் பெண்கள், பற்றை மறைவுகளில் அஞ்சிப் பதுங்க... மார்க்கண்டரின் விடலைப் பெடியன் அவர்களைத் தேடித் தேடி, இழுத்து அமர்த்தி, மேற் சட்டைகளைக் கிழித்து... அவனுக்கு துச்சாதன வெறி பிடித்து விட்டது!

வீரர்களுக்கு இன்னும் வெறி தணியவில்லை.

''கொழுத்துங்கோடா''

- வெறி நாய்கள் சீறிக் குரைத்தன.

பெற்றோல் குளித்த அந்தக்குடிசைகள், நொடியிற் சுவாலை விட்டு ..... சுவாலைகள் உயர்ந்து எழுந்து பனையோலைகளைக் கருக்கிக் கொண்டு ...... பரந்து ...... உயரே ஆகாயத்தில் அரக்கன் சுருட்டுக் குடித்து புகையைக்கக்கிக் கொண்டிருந்தான்.

காலையில் கஞ்சி குடித்துவிட்டுக் கூலிக்குப் போன அந்தப் பஞ்சைகள், மாலையில் சகலதையும் இழந்த அகதிகளாக போக்கிடமற்று, அந்தப்பனங் கூடலைச் சுற்றிச் சுற்றிக் கண்ணீருங் கம்பலையுமாக ........

''இராட்சச ஜென்மங்கள் .... குஞ்சு குருமானை அடித்து, குமர்களைத் தொட்டு, சட்டையைக் கிழித்து ...... குடிமனையைக் கொளுத்தி ...... சிவ, சிவா.!'' - நம்ப முடியாமல் காவேரியம்மா நடுங்கிப்போனாள்.

கனகசபை வாத்தியாரும் சின்னப்பு ஆசாரியும் மற்றும் சில இளைஞர்களும் அந்தப் பகுதிக்குப் போய், ஆறுதல் கூறி, அந்தக் குடும்பங்களை கோவில் அரசமரத்தடி நிழலில் தங்க வைத்தனர்.

மேற்குப் பகுதிப் பெண்கள் கற்களை எடுத்து வந்து,, கோவிற் குருக்கள் வீட்டு முற்றத்தில் அடுப்பு மூட்டினர். ஊர்த் தோட்டத்தில் அகப்பட்ட மரக்கறிகளை அரிவாளில் அவசர அவசரமாக அரிந்தனர்.

குருக்கள் கோவிற் களஞ்சியத்தைத் திறந்து பெரிய அண்டா மற்றும் பாத்திரங்களையும், பச்சரிசி மூட்டையையும் வெளியே எடுத்துப் போட, சின்னப்புவும் சில இளைஞர் களும் அவற்றைத் தூக்கிச் சுமந்து சென்றனர்.

முற்றத்தில் சாம்பாரும் சாதமும் வெந்து கொண்டிருந்தன. வீட்டுக்குள் சென்ற குருக்கள், அலுமாரியைத் திறந்து, ஜானகியின் சேமிப்பிலிருந்து இப்போது எவருமே பாவிக்காமலிருந்த புடவைகளையும் சட்டைகளையும் வாரி எடுத்தார்.

சிரார்த்தங்களில் கிடைத்த நான்கு முழத் துண்டுகள், செட்டைக் கரைத் துவாய்கள், உற்சவங்களில் தெட்சணையோடு கிடைத்த சோமன் வேட்டிகள் எல்லாவற்றையும் அள்ளிக் கொண்டு வந்து, அவர்களுக்கு ஆளுக்கொன்றாகக் கொடுத்து விட்டு, குளித்துச் சாப்பிடத் தயாராக வருமாறு சொன்ன போது, ஏக்க வெப்பிசார வேளையிலும், குருக்களின் பரிவையும் அன்பையும் பார்த்து அவர்கள் வியந்து, கையுயர்த்திக் குவித்து நின்றனர்.

கனகசபை உபாத்தியார் கொண்டு வந்த கதிர்ப்பாய்களை அரசமர நிழலில் பரப்பி விரித்து, பெண்களும் குழந்தைகளும் வயோதிபர்களும் படுத்துக் கொள்ள, அவர்களைச் சுற்றி ஆண்கள், பாழை சீவுங் கத்திகளுடன் விழித்திருந்தனர்.

அன்றிரவு கிழக்குப் பகுதியில் நேரத்தோடு விளக்குகள் நூர்க்கப்பட்டு விட்டன.

கோவில் வாசலில், குருக்கள், கனகசபை வாத்தியார், சின்னப்பு ஆசாரி, இளைஞர்கள் சிலர் நெடு நேரமாக விழித்திருந்து மறுநாள் செய்ய வேண்டிய வேலைகளைப் பற்றி ஆலோசித்துக் கொண்டிருந்த போது -

பகல் 2 மணி யாழ் தேவியில் கொழும்பு கோட்டையி

லிருந்து புறப்பட்டு, கொடிகாமத்தில் இறங்கி, பஸ் பிடித்து, நெல்லியடிச் சந்தியில் இறங்கி, நில வொளியில் வீட்டுக்கு நடந்து வந்துசேர்ந்த சரவணன் -

இந்தக் கோலத்தைப் பார்த்துத் திகைத்துப் போய்விட்டான்.

அவனைக் கண்டதும் கனகசபை வாத்தியாருக்கும் சின்னப்பு ஆசாரிக்கும் அந்த இளைஞர்களுக்கும் உற்சாகமாயிருந்தது. அகதிகளாகிவிட்ட அந்த மக்களை அவர்களினிடங்களிலேயே குடியமர்த்த அவர்கள் வகுத்த திட்டப்படி, மறுநாள் பலபல எனப் பொழுது விடியும் போதே அவர்கள் செயலில் இறங்கி விட்டனர்.

சின்னப்பு பகுதியின் மரக்காலைகளிலிருந்து காட்டு மரங்களை ஏற்றிக் கொண்டு வண்டிகள் பனங்கூடலை நோக்கிப் புறப் பட்டன.

கந்தன், கணவதி, கறுவல், சிலம்பன், சின்னான் விறு விறெனப் பனைகளில் ஏறி ஓலைகளை வெட்டி வீழ்த்தினர். கனகசபை வாத்தியார் சட்டி பானை சாமான்கள் வாங்கிக் கொண்டு வருவதற்காக வண்டி கட்டிக் கொண்டு சந்தைக் குப் போய் விட்டார்.

கிழக்குப் பகுதி இளைஞர்களிற் சிலர், கிடுகு வண்டிகளும், சீனி தேயிலைப் பார்சல்களுமாக தோட்டத்து ஒழுங்கையால் பனங்கூடற் பக்கம் வந்து சேர்ந்தனர்.

அன்றும் குருக்கள் வீட்டு முற்றத்தில், பெரிய அண்டாவில் பாற் கஞ்சி பொங்கிக் கொண்டிருந்தது.

## 20

பொதுத்தேர்தல் முடிந்து விட்டது.

பொன். கந்தையாவைத் தேர்ந்தெடுத்து, வட இலங்கை

யிலிருந்து முதலாவது இடதுசாரிப் பிரதிநிதியைப் பாராளு மன்றத்துக்கு அனுப்பி வைத்ததென்ற சரித்திரப் பெரு மையை வடமராட்சி ஈட்டிக் கொண்டது.

அக்கிராமத்தின் கிழக்குப் பகுதியாரின் நெஞ்சில் மூண்ட நெருப்பு, தேர்தல் அமளி முடியு மட்டும் நீறு பூத்துக் கிடந்து விட்டு, சாம்பரை உதறிக் கொண்டு சுயரூபத்தைக் காட்டத் துவங்கிவிட்டது.

தங்கள் கோபத்தையும் வெறுப்பையுங்காட்ட, பிள்ளையார் கோயில் பிராமணர்தான் அவர்களுக்குக் கிடைத்தார்.

திவசம் திதிக்குத் தங்கள் வீடுகளுக்கு அவரை அழைக் காமல் பகிஷ்கரித்ததுடன், அந்த ஆலயப் பூசையிலிருந்தும் அவரை மாற்றவேண்டும் - மாற்றப்படும் வரை கோவிலுக்கு வரமாட்டோம் என தங்களின் சொந்தக்காரராகிய கோவில் மணியகாரன் கணபதிப்பிள்ளையரையும் எச்சரித்தனர். ஆனால் ...... லாப - நட்டக் கணக்கு எடுப்பதில் கெட்டிக் காரரான கோவில் மணியம் மசிந்து கொடுக்கவில்லை - இந்த ஐயரை விட்டு விட்டால்? ......

அருக்காமல் செருக்காமல் கோவிலுக்கென விசுவாசத்தோடு பணத்தை தாராளமாக அள்ளிப் போடுகிற மேற்காரும் வடக்காரும் கோவிலுக்கே வரமாட்டார்கள். அவர்களுக்கு குருக்கள் மீதுள்ள பக்தியும் செல்வாக்கும் பிரசித்தமானது. எடுப்பாக வெள்ளை வேட்டியும் விபூதிப் பூச்சுமாக கோவி லுக்கு வந்த போதிலும் தனது கிழக்குப் பகுதி ஆட்கள் சில்லறைச் சதமாக எண்ணித்தான் உண்டியலிற் போடுகிற கஞ்சர்கள்.

தனது உறவினர்களின் கோரிக்கைக்கு மசிந்து கொடுக் காமல், பிறகு பார்ப்பம் என நசிந்து கொண்டிருந்தார்.

புதிய ஐயரொருவரைத் தூர இடத்திலிருந்து கூட்டி வந் தால் அவருக்கு அதிக. வருமானங் கொடுப்பதற்காக வசதி

யாக தான் வாழ்ந்து கொண்டிருப்பதற்கு, உதவியாகத் திகழுகின்ற உண்டியலை விட்டுக் கொடுக்க நேரிடும்,-

சம்பளமாகக் கொடுக்க, வருடா வருடம் தன் குடும்பச் சேமிப்பில் சேருகிற கோயில் வயல் வருமானத்திலும் கை வைக்க வேண்டி ஏற்பட்டு விடும்-

தனது உறவினர்களின் சொல்லைக் கேட்டு, தனக்கு பொன் முட்டையிட்டுத் தருகிற வாத்தை கோவில் எசமான் விரட்டிக் கலைக்க விரும்பவில்லை.

வழமை போல வர சித்திவிநாயகருக்கு குருக்கள் பூசை செய்து கொண்டிருந்தார்.

மணியகாரன் அவ்வப்போது வந்து உண்டியலைக் குலுக்கிப் பார்த்துக் கொண்டு போனார். அவர் பகுதி ஆட்கள் வராத போதிலும் அதன் பாரம் குறையவில்லை.

வங்கியில் வேலை யேற்க கொழும்புக்குச் சரவணன் புறப் பட்ட போது, அங்கு ஆசாரமாயிருக்கும்படி பாட்டி புத்திமதி சொன்னாள். அது சம்பந்தமாக ஏற்கனவே அவனுக்கு ஆலோசனைகள் சொல்லியிருந்த குருக்கள், விநாயகரைப் பிரார்த்தித்து, விபூதியை அவன் நெற்றியிலிட்டு பயணம் அனுப்பி வைத்தார்.

## 21

டக்... டக்... டடடக்... டடக்... டக்

டடக்... டக்... டடட்... டக்

ரைப்றைட்டரில் வெகு வேகமாக அவள் அடித்துக் கொண் டிருந்தாள் - நிர்ச்சலனமான பரந்த முகம்: கண்ணாடி. ஊடாக எட்டிப் பார்க்கும் விழிகள்: தலை மயிரை மேலுக்கு வாரி கழுத்தளவில் கத்தரித்திருந்தாள். லிப்ஸ்டிக் அப் பிய சிவப்பு உதடுகள். சதைப்பிடிப்பான மேற்தொடை யைத் தொட்டுக் கொண்டு நிற்கும் கட்டைச் சட்டை.

ஆழமான V வெட்டுக்குள்ளால் வெளியே வரத்துடிக்கும் விம்மிய மார்புகள்.......... அவளை மொய்க்கும் கண்களைப் பொருட்படுத்தாமல் அவள் கைகள் அத் தட்டச்சுப் பொறியில் விளையாடிக் கொண்டிருந்தன. டக்... டடக்... டடடக்......

முக்கியமானது எது முக்கியமற்றவை எவை என்ற வித்தியாசம் தெரியாமல் மேசையில் கிடந்த எல்லாக் கடிதங்களையும் சரவணன் புரட்டுவதும், இடையில் நிறுத்திவிட்டு அங்குள்ளவர்களின் முகங்களைக் கணிப்பெடுப்பதுமாக கதிரையில் உட்கார்ந்திருந்தான்.

சரளமான ஆங்கிலத்தில் சம்பாஷித்து, அடிக்கொரு தரம் வெடிச்சிரிப்பை உதிர்த்தி, இடையில் சிகரெட் புகையை ஊதி, வெகு சுறு சுறுப்பாக ஒரு இயந்திரம் போல அங்குள்ளவர்கள் இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

பகல் சாப்பாட்டுக்கு அவன் ஐயரிடம் அன்று போகவில்லை. மேட்டின் மீதிலிருந்த அந்தக் கோவிலுக்கு கோட்டையிலிருந்து தனியாகப் போய்வர அவனுக்குச் சரியாக பஸ் பாதை இன்னும் பிடிபட வில்லை. 45 நிமிட இடை வேளையில் வெயிலில் நடந்து போய்வர நேரமும் போதவில்லை. பட்டினியாக இருந்து விட்டான். அப்படி இருப்பது அவனுக்குப் பாடசாலை நாட்களிலேயே பழக்கமாகியிருந்தது. மாணவ நாட்களில் மாரிகாலத்தில் மத்தியானச் சாப்பாட்டுக்கு அவன் வீட்டுக்குச் செல்வதில்லை.

''போகிற இடத்திலும் நம்ம ஜாதி ஆசாரத்தை ஜாக்கிரதையாக அனுஷ்டிக்க வேணும் சரவணா.'' - ஊரில் புறப்படும் போது தனது சுருக்கம் விழுந்த கண்களை உயர்த்தி அக்கறையாகப் பாட்டி எச்சரித்து அனுப்பியிருந்தாள்.

''உன்னால் எந்த விதக் கெட்ட பெயரும் எனக்கு ஏற்படக் கூடாது'' - மிக நம்பிக்கையோடு அப்பா வழியனுப்பியிருந்தார்.

கன்ரீனில் சோடா குடித்து விட்டு வந்து கடிதங்களைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

டக்......டக்......டடக்..... டடடக்......டக்

லிப்ஸ்டிக் அப்பிய செவ்வதரங்கள், சதைப்பிடிப்பான மேற் தொடையைத் தொட்டுக் கொண்டு நிற்கும் கட்டைச் சட்டை, ஆழமான V வெட்டுக்குள்ளால் வெளியே வரத் துடிக்கும் விம்மிய மார்புகள்........

''மிஸ்டர் சரவணன்!'' - அந்தத் தடித்த குரல் அவனைத் திடுக்கிடச் செய்தது.

பதறி எழுந்து நின்ற போது, மூன்றாவது வரிசை மேசையிலிருக்கும் சந்திரன் சிரித்துக் கொண்டு முன்னால் நின்றான். ''சிற் மிஸ்டர்'' - சரவணனை உட்காரச் சொல்லி விட்டு எதிரே சந்திரன் உட்கார்ந்து விட்டான்.

''புதிதாக கொழும்புக்கு வந்த பையன் ...... நீர் மனதை உப்படி அலைய விட்டால், வளைத்தும் பிடித்துப் போடுவாள்கள்.'' - குறும்புச் சிரிப்போடு கண்களை, வெட்டிக் கொண்டு அவன் கூறினான்.

''இல்லை சேர்.........'' - சரவணனுக்கு வியர்த்து விட்டது.

''இந்தக் கடிதம் சம்பந்தமான பைல் உமது மேசையிலிருக்கிறதா?'' - இருவரும் தேடிப் பார்த்தார்கள். அதுகிடைத்து விட்டது.

''பயப்படக் கூடாது ....... உசாராயிருக்க வேணும். பணிந்து பதுங்கினீர் என்றால், புதிதாக வேலையிற் சேர்ந்த பையன் என்பதைப் பயன்படுத்தி எல்லாரும் உமது தலையில் வேலையைச் சுமத்திப் போடுவார்கள்.'' - சரவணனின் தோளில் அன்பாகத் தட்டி சந்திரன் சொன்ன போது, அவனின் சிரிப்பும் மெல்லிய மீசையும், இனிய சுபாவமும் சரவணனுக்கு முதற் சந்திப்பிலேயே பிடித்து விட்டது.

சிங்களம் மட்டுமே சட்டத்திணிப்பு........

இருபகுதி அரசியல் வாதிகளினதும் அட்டகாசக் குரைப்பு...

ஈற்றில், தமிழர் தலைவர்கள் காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகம் இருக்க, வெறி நாய்கள் அவர்களை விரட்டிக் கடித்து......... தமிழர்களின் இரத்தத்தை முதற் தடவையாக ருசித்து...... அந்தச் சுவையில் சப்புக் கொட்டிக் கொண்ட பேரினவாதம், வாலைச் சுருட்டி வைத்துக் கொண்டு பதுங்கியிருந்த வேளையில் தான், சரவணனுக்கு கொழும்பில் உத்தியோகம் கிடைத்தது.

முன் பின் அனுபவமில்லாத அந்த நகரில், அப்பாவின் கடிதமூலம் அறிமுகமாகியிருந்த ஒரே ஆள் கப்பித்தாவத்தை ஐயர் தான். விடிகாலையில் சூட்கேசும் கையுமாகப் போய்ச் சேர்ந்த அவனை வரவேற்று, கோயில் முன் வீதியிலிருந்த பூக்கடையின் பிற்புறக் களஞ்சியத்தை இருபது ரூபா வாடகையில் அவனுக்கு ஏற்பாடு செய்து கொடுத்து விட்டார். காற்றும் வெளிச்சமும் வராத இருட்டறை என்றபோதிலும், அதில் ஒரு சாக்குக்கட்டில் போட்டுக் கொள்ளப் போது மானதாயிருந்தது. ஆசாரமாகச் சாப்பாடு தருவதற்கும் அவர் ஒப்புக் சொண்டு விட்ட போது, தனக்கு இலகுவில் எல்லாமே கைகூடி விட்டதென்று சரவணன் சந்தோஷப் பட்டான். ஆனால்........

மாலையில் பசிக்களையும் பயண அலுப்புமாக சோர்வாகத் திரும்பிய போது அங்கு அவனுக்கு ஒரு தேநீர் கூடக் குடிக்கக் கிடைக்கவில்லை.

இரவுப் பூசை முடிந்து, புக்கைச் சட்டியோடு மடைப்பள்ளிக்குள் சென்ற ஐயர், அங்கு அவனைக் கூப்பிட்டு, சுவாமிக்கு நிவேதித்த நொறுக்கரிசிச் சோற்றை எடுத்து வைத்து ஒரு கிண்ணத்தில் சாம்பாரையும் ஊற்றி விட்ட போது, ''நீங்கள் சாப்பிட வில்லையா?'' என அவர் முகத்தைப் பார்த்து அவன் கேட்டான்.

''நீ இங்கை சாப்பிடு . . . நான் வீட்டில் சாப்பிடுவேன். எனக்காக அவள் காத்துக் கொண்டிருப்பாள்.'' - கடமை முடிந்தது என ஐயர் அகன்று விட்டார்.

களைப்பில் அவன் கண்ணயரத் தொடங்குகிற வேளை, பக்கத்து அறையில் . . . . . . ''டும் . . . . . டும் . . . . . தண்டக்க . . . தண்டக்க . . . டும் . . . . டும் . . . .'' - நட்டுவனார் தமது இளவயசில் தவற விட்டு விட்ட தாளத்தைச் சொல்லி, அந்த நேரத்தில் மேளம் பழகிக் கொண்டிருந்தார்.

அவரின் அட்டகாசத் தவில் சமா ஓய,

- ரெயில் எஞ்சின்கள் அந்தப் பிரதேசத்தில் பிசாசு மாதிரி கூக்குரலிட்டவண்ணம் நடுச் சாமத்தில் குறுக்கும் நெடுக்குமாக ஓடிக் கொண்டிருந்தன.

நித்திரைக் கிறக்கத்தில் அவனுக்கு கண்கள் எரிந்தன. இமைகளை இறுக்கி மூடிக் கொண்டு சில மணி நேரம் உறங்குவதற்குள் . . . . . . ,

உஷத் காலப் பூசை மணி . . . . . மேளம் . . . . . விக்கல் குரலில் நாதஸ்வர ஆலாபனை . . . . . சரவணனுக்கு எரிச்சலாக இருந்தது.

பொழுது புலர்வதற்கு முன் அந்தப் பொதுப் பைப்பில் அள்ளி ஊற்றிக் குளிப்பை முடித்து விட்ட பின், உதறும் குளிருக்கு ஒரு வாய் தேனீர் கூடக் குடிக்கக் கிடைக்கவில்லை. வீட்டில் பாட்டி அல்லது அப்பா எவர் முதலில் எழும்புகிறாரோ அவர் அவனுக்குச் சுடச்சுடக் கோப்பி கொடுப்பது வழக்கம். பழக்கத்துக்கு அடிமையாகி விட்ட அவன் வாய் மட்டுமல்ல, அந்தப் பாசத்தை எண்ணி சரவணனின் மனமும் ஏங்கியது.

உத்தியோகம் பார்க்க வந்த சரவணனுக்கு அந்த கோயில் வாழ்க்கை பத்து நாட்களில் கசந்து விட்டது. ஊருக்குத்

திரும்பி ஓடி விடலாமா என எண்ணத் துவங்கிவிட்டான். ''பேய்ப் பெடியா! உப்படி நினைக்காதே..... ஓர் உத்தியோகம் எடுப்பது எவ்வளவு கஷ்டமானது? ...... நீ யோசிக்காதே. வசதியான ஓர் இருப்பிடத்தை தேடுவம். எனக்குத் தெரிந்த ஐயர் ஒருத்தர் இருக்கிறார். அவரிடம் பின்னேரம் போவோம்.'' தனது சங்கடங்களைச் சந்திரனிடம் சரவணன் சொன்ன போது, அவன் ஆறுதல் கூறி உற்சாகப்படுத்தினான்.

சந்திரனுக்குத் தெரிந்த ஜெகதீஸ்வர சர்மாவைத் தேடி அன்று பின்னேரம் பொரளைக்குப் போனார்கள்.

சர்மா சாப்பிட்டுக் கொண்டிருந்ததால், வெளி விராந்தையின் பிரம்புக் கதிரைகளில் அவர்கள் உட்கார்ந்திருந்தனர்.

சரவணனின் கந்தோர் தட்டெழுத்துப் பெண் இப்போது பூப்போட்ட டிறெஸிங் கவுணில் மிகப் பொலிவாக இருந்தாள். சாப்பாட்டு மேசையில் அவளுக்கெதிரே இடுப்பில் கோடுபோட்ட லுங்கி, அதே துணியிலான முழுக்கைச் சட்டை, தங்கபிறேம் மூக்குக் கண்ணாடி; சுருண்ட குறொப் மயிர், சிவந்தமேனி, - மேசையில் பரிமாறப்பட்டிருந்த சிங்கள உணவை அந்த அழகிய இளம் ஆணும் பெண்ணும், ஒருவரின் கால் மற்றவரின் காலைத் தொட்டுத்தாளம் போட, ருசித்து ரசித்து, புசித்துக் கொண்டிருப்பது சரவணனின் பார்வைக்குவெகு தெளிவாகத் தெரிந்தது.

மேசையில் சாப்பிட்டுக் கொண்டிருந்த, லுங்கி கட்டிய தங்க பிறேம் மூக்குக்கண்ணாடி அணிந்த அந்த அழகு இளைஞர், சாப்பாட்டை முடித்துவிட்டு, வாயில் சிகரட் புகைத்துக் கொண்டு வெளியே வந்தபோது, அவரை ஜெகதீஸ்வர சர்மா எனச் சரவணனுக்குச் சந்திரன் அறிமுகப் படுத்திய போது, அவனால் நம்ப முடியவில்லை.

சரவணனையும் அந்த போடிங்கில் சேர்த்து விடுவதற்கு ஒழுங்கு செய்து தருமாறு சந்திரன் கேட்டபோது, சரவ

ணனை ஒருதடவை ஏற இறங்கப் பார்த்து விட்டு, அந்த வீட்டுக்காரர்கள் அதற்குச் சம்மதிக்க மாட்டார்களென ஜெகதீஸ்வர சர்மா பதில் சொல்லி அனுப்பிவிட்டார்.

''டார்லிங் வற் இஸ் த மாற்றர்?'' - என்ன விஷயத்துக்காக அவர்கள் வந்தவர்களென உள்ளேயிருந்து அவள் கேட்டதற்கு -

''தே ஆர் சம் விலேஜ் பெலோஸ் புறம் யாப்னா'' - யாரையோ தேடிவந்த யாழ்ப்பாணத்துக் கிராமப்புறப் பையன்கள் என ஜெகதீஸ்வர சர்மா சொல்லிச் சமாளித்தது வீதியில் இறங்கி நடக்கத்துவங்கிய அவர்களின் காதுகளில் தெளிவாகக் கேட்டது.

அடுத்த நாள் சனிக்கிழமை அவர்களிருவரும் வெள்ளவத்தைக்குப் போய் சாமிநாத சர்மாவைச் சந்தித்தனர். அவரின் வெற்றிலை வாயில் ஆங்கிலம் கொட்டுப்பட்டது. சிரித்த முகமும், அறிவும் அனுபவமுமுள்ள செந்தளிப்பான மனுசன் கோப்பி கொடுத்து உபசரித்து விட்டுச் சொன்னார்.

''உத்தியோகம் பார்க்க வாறவர்களுக்கு கோயிலோடு கொழும்பில் இருக்க வசதிப்படாது என்பதை அனுபவத்தில் அறிவேன். இங்கு ஆறு பேர் இருக்கிறோம். எல்லாரும் எங்க பையன்கள் தான். நீரும் வரலாம். ஆசாரம் மட்டும் தான் வேணுமென்றால் கோயிலில் இரும்... உத்தியோகமும் பார்க்க ஆசையிருந்தால் இப்படி சம்மறிக்கு வந்து விடும் ...... இங்கே சைவம் தான் சமையற்காரர்...... மடைப்பள்ளி ஐயர்மாரை வைத்துப் பெரிய சம்பளம் கொடுக்க நாங்கள் எடுக்கிற சம்பளங்காணாது.'' - அவர் வார்த்தைகளில் உண்மையும் தெளிவும் நிறைந்திருந்தன.

சரவணனுக்கு வேறு மார்க்கமிருக்கவில்லை.

மறுநாள் ஒரு கட்டிலும், மேசை கதிரையும் வாங்கிக்

கொண்டு சூட்கேசுடன் அங்கு வந்து சேர்ந்து விட்டான். இரு கட்டில்கள் மட்டும் போட்டிருந்த அந்தக் காற்றோட்டமுள்ள விசாலமான அறையில், கதவருகில் மேசை கதிரையை வைத்து, மூன்று சுவர்களின் ஓரமாகக் கட்டில்களை ஒழுங்கு படுத்துவதற்கு, ஏற்கனவே அந்த அறையிலிருந்த சபாபதியும் சுப்பிரமணியனும் சரவணனுக்கு உதவி புரிந்தனர்.

சுவரில் அடித்திருந்த ஆணியில் சுப்பிரமணியனின் பூணூல் தொங்கிக் கொண்டிருந்தது.

சபாபதி லுங்கிக்கு மேலே அதனைக் கட்டியிருந்தான்.

வியர்வை போக நன்கு குளித்து விட்டு வந்த சரவணன், விபூதியைக் கிள்ளிப் பூசி விட்டு, சாப்பாட்டு மேசையிலிருந்த கோப்பியை எடுத்துக் குடித்த பின் வீட்டிற்கு ஒரு கடிதம் எழுதினான்.

## 22

அங்கொன்றும் இங்கொன்றுமாக செடியாகத் தலையை நீட்டிக் கொண்டிருந்த நுணாக்கள், சுற்றுமதிலில் பெரிய வெடிப்புகளை ஏற்படுத்தி, அதனைப் புரட்டி நிலத்தில் சரித்துவிட்டு, பீரிட்டெழுந்து சடைத்த மரங்களாக வளர்ந்து விட்டன.

பொதுத் தேர்தற் சச்சரவோடு நிறுத்தப்பட்ட வரசித்தி விநாயகர் கோயில் மஹோற்சவம் இந்த ஆண்டும் கொடியேற்றம் நடைபெறாமலிருந்தது.

கோயில் ஐயரை மாற்ற வேண்டும் என்ற தனது சொந்தங்களின் கோரிக்கையை கோயில் மணியம் வெறும் வீறாப்புப் பேச்சு என்று தான் முதலில் நினைத்தார். ஆனால் அவர்கள் பிடிவாதமாகக் கோயில் உற்சவங்களைப் பகிஷ்கரிப்பதாக எச்சரித்த போது, ஏனைய திருவிழாக்களை நடத்த உபயகாரர்கள் முன்வந்த போதிலும், தனது இரத்த உரித்

துக்களின். சங்கதையைச் சந்தி சிரிக்கவைக்கக் கூடாதென்ற பற்றுணர்வோடு மஹோற்சவத்தையே நிறுத்திவிட்டார்.

வருடாந்தத் தேர் வருமானத்தை ஈடு செய்ய, கோயில் உண்டியலை அடிக்கடி குலுக்கிப் பார்த்துத் தனதாக்கிக் கொண்டார்.

அக்கோயிலின் உற்சவங்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு குருக்கள் எத்தனையோ தடவைகள் தெண்டித்தும் தோற்றுப் போய்விட்டார். பாலஸ்தாபனஞ் செய்து திருத்த வேலைகளை ஆரம்பிக்க வேண்டும் என கோயில் மணியம் இரண்டு ஆண்டுகளாகச் சொல்லிக் கொண்டேயிருக்கிறார்.........

சிறு சிறு நிகழ்ச்சிகளாக எத்தனை நடந்து விட்டன!

சரவணன் நான்கு தடவை ஊர் வந்து போய்விட்டான். முதன் முறை வந்தபோது, பாட்டியை பெரிய டாக்டரிடம் கூட்டிச் சென்று கண்ணைப் பரிசோதித்து, தனது செலவில் கண்ணாடியும் வாங்கிக் கொடுத்து விட்டான்.

பணத்தை அவனையே சேமித்து வைத்துக் கொள்ளும்படி குருக்கள் கூறியதையும் கேட்காமல், அவருக்கு மாசாமாசம் நூறு ரூபா அனுப்பிக் கொண்டிருந்தான்.

இராமேஸ்வரம் முதல் காசி வரை திருத்தல யாத்திரை செய்து வரப் போவதாக சடாட்சரக் குருக்கள் புறப்பட்டுப் போய்விட்டார்.

கனகசபை உபாத்தியாயர், அக்கிராமத்துப் பாடசாலையின் தலைமையாசிரியராயிருந்தவர் இளைப்பாறிவிட, அந்தஇடத்துக்கு நியமிக்கப்பட்டார். அதனை விரும்பாத கிழக்குப் பகுதி தடிப்புப் பிடித்த சிலர் தங்கள் பிள்ளைகளை பக்கத்துப் பள்ளிக் கூடத்துக்கு மாற்றிக் கொண்டனர்.

சின்னப்புவின் இளைய மகள் சீதேவிப் பெட்டை பெரிய மனுஷியாகி விட்டாள். வீட்டை விட்டு வெளியேவருவதில்லை.

விதானையார் விசர் நாய் கடித்துக் குரைத்துக் குரைத்துச் செத்துப் போனார்.

கிழக்குப் பகுதியைச் சேர்ந்த, ஹாட்லியில் படித்த பையன் மெடிக்கல் கல்லூரிக்கும், யாழ் இந்துவில் படித்தவன் பேராதனை பல்கலைக் கழகத்துக்கும் தெரிவாகியிருந்தனர்.

வடக்குப் பக்கத்துப் பனங்கூடலில், மூன்று நான்கு சிறிய கல் வீடுகள் முளைத்து விட்டன. அங்கிருந்து ஐந்தாறு பிள்ளைகள் அரைக் காற்சட்டை போட்டுக் கொண்டு கிராமத்துக்கு வெளியே படிக்கப் போய்க் கொண்டிருந்தார்கள். கோயில் உற்சவங்களும் நின்று...... கிழக்குப் பகுதியாரின் வீட்டுப் புரோகிதங்களைச் செய்வதற்கு பக்கத்து ஊர் பாலகிருஷ்ண ஐயர் வந்து போய்க்கொண்டிருந்ததால், வைத்தீஸ்வரக் குருக்களுக்கு இப்போது நல்ல ஓய்வு......

நினைவுகளில் சஞ்சரித்து அசை போட்டுக் கொண்டிருந்த குருக்களின் சிந்தனையை, தபாற்காரன் கலைத்து விட்டான் அது லக்ஷ்மியிடமிருந்து வந்த கடிதம். குருக்கள் வாசிக்க காவேரியம்மா கூர்மையாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்

அன்புள்ள அண்ணாவுக்கும் அம்மாவுக்கும்,

லக்ஷ்மியின் நமஸ்காரம்.

முன்பே சில கடிதங்கள் எழுதியும் நீங்கள் பதில் போடவில்லை. ஒரு சந்தோஷமான சமாசாரத்தைத் தெரிவிப்பதற்காக இதை எழுதுகின்றேன்.

எனது கணவர் இப்போது முற்றாக மாறி விட்டார். எங்கள் மீது மிக அன்பாக இருக்கிறார். பண்டாரக் கிழவன் செத்துப் போனதும், அவளையும் மகளையும் அவளின் தம்பி தன்னுடன் கூட்டிக் கொண்டு போய் விட்டான். இவர் எத்தனையோ தடுத்தும் கேளாமல் அவள் போய் விட்டது இவருக்கு மிகவும் கோபம்.

அவளின் செய்கையினால் ஏமாற்ற மடைந்த இவர் எம் மீது அன்பை அள்ளிச் சொரிந்து கொண்டேயிருக்கிறார்.

தேவகி பெண்களின் சட்டைகளும், குழந்தைகளின் உடுப்புகளும் தைப்பதற்குப் பயிற்சி பெறுவதற்காக அந்த வகுப்புகளுக்குப் போய் வருகிறாள். அவளுக்குப் பொருத்தமான வரனைத் தேடிக்கொண்டிருக்கிறோம். வருகிற ஆவணியோடு 26 வயசு முடிகிறது. எங்களையுங் கூட்டிக்கொண்டு அத்தான் விரைவில் உங்கே வந்து, அண்ணாவுடன் கதைத்து பொருத்தமான வரனைத் தேடும் முயற்சியிலிறங்குவதற்காக தான் உங்கே வர இருப்பதாக எழுதும் படி சொன்னார்.

சின்னவள் உமா எட்டாம் வகுப்புப் படிக்கிறாள். உங்கள் யாவரின் சுகத்துக்கும் எழுதவும்.

அன்புள்ள,
நா. லக்ஷ்மி.

''பகவானே ஈஸ்வரா! அவளைப் பிடித்த பெரிய கிரகணமும் விலகிப் போச்சு......'' - காவேரியம்மாவின் முகமும் மனமும் மலர்வதைக் கண்டு மகன் மகிழ்ச்சியடைந்தார்.

## 23

தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டிருந்த குள்ளநரி, சாத்வீகம் என்ற உருத்திராட்ச மாலையைக் கழுத்தில் கொழுவிக் கொண்டு, பதுங்கிப் பதுங்கி பாத யாத்திரை புறப்பட்டு விட்டது!

பௌத்த பிட்சுகள் பல்லாயிரக் கணக்கில் படையெடுத்து வந்து அவர் வீட்டு முற்றத்தில் சம்மணங்கட்டி முற்றுகையிட்டிருந்ததைக் கண்டு பயந்து போன பண்டாரநாயக்கா, செல்வநாயகத்துடன் செய்த ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்து விட்டார்!

தமிழரசுக் கட்சியின் திருமலை மாநாடு...... சிங்கள, ஆங்கில நாளேடுகள் செய்திகளைத் திரித்து, பழுப்புத் தாள்களைக் கறுப்பாக்கி......... புகைந்து கொண்டிருந்த வகுப்பு வாதத்

தீயைக் கொழுந்து விட்டெரியச் செய்ய, கற்பூரப் பொடியை கைக்கொள்ளும் அளவு அள்ளித் தூவின.

தமிழர்கள் பயணஞ் செய்த மட்டக்களப்பு ரெயில் கவிழ்ந்தது...... மன்னம்பிட்டியில் படுகொலைகள்...... அனுராதபுரத்தில் அடி உதை...... பொலநறுவையில் கற்பழிப்பு......

1985 மே மாசம் கடைசி வாரம் - அந்தப் புதன் கிழமை கொழும்பு நகரிலும் வகுப்பு வாதப் பேய் கோர நர்த்தனமிடத்துவங்கி விட்டது......கந்தோர் விட்டு வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தவர்களின் கால் கைகளை ஒடித்தனர் - காதுகளைக் கடித்து எடுத்தனர் - மண்டைகளை உடைத்தனர் - உடுப்புக்களை உரிந்து கிழித்தனர் - வியாபாரிகளை இழுத்துப்போட்டுத் தாக்கிவிட்டு தமிழர்களின் பலசரக்கு கடைகள், வாழைப்பழக் கடைகளை எரியூட்டினர் -தமிழ் அதிகாரிகளின் கார்களை நடு வீதியில் தகனஞ் செய்தனர் - தமிழ் பேசிய காரணத்துக்காக, அன்றாடங் காய்ச்சிகளான அப்பாவி கீரை விற்கும் பெண்களின் சட்டையைக் கிழித்து.........

இரத்தக் குளத்தைத் தாண்டி, நல்லெண்ணெய் மணமோப்பத்தைத் தேடி அந்த விசர் நாய்கள் வீதியெங்கும் ஓடிக் கொண்டிருந்தன.

வெளியே வேலைக்குச் சென்றவர்கள் திரும்பி வீட்டுக்குச் செல்ல முடியவில்லை. வீடுகளிலிருந்தவர்கள் பாதுகாப்புக்காக சிங்கள வீடுகளின் கக்கூசுகளிலும், பற்றை மறைவுகளிலும் பதுங்கிக் கொண்டனர்.

துப்பாக்கியில்லாத பொலிசார், கையிலிருந்த கட்டைப் பொல்லைக் கூட இடுப்பில் செருகி வைத்து விட்டு, கை கட்டி நின்று வீதியில் வேடிக்கை பார்த்தனர்.

ஐந்தாறு பொலிஸ் ட்றக்குகள் காயம் பட்ட தமிழர்களைப் பொறுக்கி அள்ளிக் குவித்துக் கொண்டு ஓடிப்போய்ச் சரஸ்வதி மண்டபத்தில் கொட்டிக் கொண்டேயிருந்தன.

சரித்திரத்தில் முதற் தடவையாக இலங்கைத் தமிழர்களுக்கென இரு அகதி முகாம்கள் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும், கொழும்பு றோயல் கல்லூரியிலும் திறக்கப்பட்டன,

அச்சம் - பீதி - அழுகை - காயம் - களைப்பு - பசி முதலியவற்றால் றோயல் கல்லூரி முகாம் துடித்துக் கொண்டிருந்த போது. சரவணனும் அவனுடன் வேலை பார்க்கும் தமிழ் உத்தியோகத்தர்களும் கோட்டை இலங்கை வங்கியிலிருந்து பாதுகாப்பாக அங்கே கூட்டி வந்து சேர்க்கப்பட்டனர்.

மேலதிக வேலை செய்ய வேண்டியிருந்ததால், சரவணனும் மற்றும் சிலரும் வழமையான வேலை நேரம் முடிந்தவுடன் அன்று வெளியே போகவில்லை. ஆபத்தை உணர்ந்த காவற்காரன் இரும்புக் கதவை இறுக்கிப்பூட்டி, விளக்குகளை நூர்த்து, மூன்றாம் மாடியில் அவர்களைத் தங்கச் செய்து விட்டான். விடிந்தவுடன் வந்த நிர்வாகி, பொலிஸ் பாதுகாப்புடன் அவர்களை முகாமில் சேர்த்து விட்டார்.

பெரிய பெரிய இராணுவ ட்றக்குகள் தமிழர்களைக் கொண்டு வந்து அந்த முகாமில் கொட்டிய வண்ணமேயிருந்தன. காயம்பட்ட ஆண்கள் நொண்டி நொண்டி.... அழுத கண்களுடன் மேற்சட்டை கிழிந்த பெண்கள்... அவர்களில் சிலர் தமது வெறுங் கழுத்தைத் தடவிப் பார்த்துக் கதறினார்கள்...... எல்லோர் முகத்திலும் அச்சமும் ஏக்கமும் அப்பிக் கிடந்தது.

பச்சைத் தண்ணீரை மட்டும் குடித்து, பசியில் குடல் இரைய, களைத்துச் சோர்ந்து போய் மரநிழலின் தரையில் சரவணன் சுருண்டு கிடந்த போது, மேனியில் சட்டையில்லாமல், இடுப்பில் லுங்கி மட்டுமே அணிந்து கொண்டு ஜெகதீஸ்வரசர்மா நொண்டி நொண்டி வந்து, அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்தார். அவரின் முகம் அடிகாயத்தில். பருத்து வீங்கிப் போயிருந்தது. அவனைப் பற்றுக் கோடாக அடிக்கடி அவர் சுற்றிக் கொண்டிருந்தார்,

''வீட்டுக் காரனின் மகன் பறத்தெமிளு எனச் சொல்லி அடித்துக் கலைத்துப் போட்டான்... சிங்களவனின் பக்கம் இனித் தலை வைத்துப் படுக்க மாட்டன்...... முரட்டுச்சாதி ...... வேலை போனால் போகட்டும். இனித் திரும்பி வர மாட்டன். ஒபிசல் லாங் வேஜ் சட்டத்தின் கீழ் றிடயர் பண்ணப் போறன், நான் ஓல்ட் என்றன்ற் தானே... பென் சனோட ஊரில் இனி வேறு தொழிலைப் பார்ப்பம்.'' - அடி வாங்கிய கொடுமையை ஆற்ற முடியாமல் அவர் சொல்லிக் கொண்டேயிருந்தார்.

சரவணனுக்கு அப்போது மிகவும் பசியாக இருந்தது.

சிவப்புச் சிலுவை பொறித்த இரண்டொரு வாகனங்கள் அங்கு வந்து காயப்பட்டவர்களுக்கு மருந்து கட்டி விட்டுப் போயின.

இரவு ஏழு மணி போல நாலு லொறிகள் பாணை நிரப் பிக் கொண்டு அங்கு வந்த போது, அவர்கள் அந்தஸ்தை மறந்து, ஆசாரத்தை மறந்து, ஆண் - பெண் - என்ற வேறு பாட்டை மறந்து, தத்தமது பசியை அடக்க ஒரு துண்டு பாணுக்காக, அந்த வாகனங்களை மொய்த்து நின்றனர்.

இரண்டு நாட்களிலேயே அந்த முகாம் நிறைந்து வழிந்தது.

சரவணனுக்குப் பழக்கமான சில முகங்கள் - ஆனால் யாருக்கு யார் அங்கே ஆறுதல் சொல்வது?

மத்தியான வேளைகளில் சோற்றுப் பார்சல்களை விநியோ கிக்க லொறிகள் வந்தன.

இரவில், அளவாக நறுக்கப்பட்ட அரை றாத்தல் பாண்.

சிவப்புச் சிலுவை பொறிக்கப்பட்ட வான் அடிக்கடி வந்து மருந்து கட்டிக் குளிசைகளைக் கொடுத்துவிட்டுப் போனது. இடையில், அவர்களின் அரசியல் தலைவர் இரண்டொருவர் இராணுவக் காவலுடன் வந்து, வாசலில் நின்று எட்டிப்

பார்த்துவிட்டுத் தமது கார்களில் ஏறிப் பறந்து விட்டனர்.

அந்த அகதிகள் மாற்றிக் கொள்ள உடுப்பின்றி, நாட்கணக்காகக் குளிப்பின்றி எரியும் உள்ளமும் உடம்புமாக - வெளியே தமது வீடுகளுக்குத் திரும்புவதற்கு அச்சமும், ஊருக்குச் செல்வதற்கு பஸ் - புகையிரத மார்க்கமுமின்றி, வெளியுலகச் செய்திகளே தெரியாமல் தவித்துப் புழுங்கிக் கொண்டிருந்தனர்.

சகித்துக் கொள்ள முடியாத மூத்திர வெடுக்கில், மூச்சுவிட முடியாமல் அருவருத்துத் திணறிக் கொண்டிருந்த அந்தச் செவ்வாய்க் கிழமை இரவு வந்த அறிவிப்பு அவர்களுக்கு விடுதலை கிடைத்து விட்டது போன்ற மகிழ்ச்சியை ஊட்டியது .........

''தரைமார்க்கப் பயணம் பாதுகாப்பற்றதால், யாழ்ப்பாணத்துக்கு கப்பல் புறப்படுகிறது ...... பயணஞ் செய்ய விரும்புபவர்கள் ஒரு மணித்தியாலத்தில் தயாராகவும்''

விழுந்தடித்துக் கொண்டு விரைந்து வரிசையாக நிற்கத் தொடங்கி விட்டார்கள்.

*

கார்கோ போட் டிஸ்பாச் கம்பெனி டிறக்டர் கனம் ஏ.எல். தம்பியையா அவர்களின் உபயமாகக் கொழும்பிலிருந்து, தமிழ் அகதிகளை ஏற்றிக் கொண்டு புறப்பட்ட சரக்குக் கப்பல், 60 மணித்தியாலம் மாங்கொட்டை வடிவமான இலங்கைத் தீவை அப்பிரதட்சணமாகச் சுற்றிக் கொண்டு வந்து பருத்தித்துறைக் கடற்கரையில் நங்கூரமிட்டது.

கனகசபை உபாத்தியாயரும் சின்னப்பு ஆசாரியாரும் கார் கொண்டு வந்து வைத்துக் கொண்டு கனநேரமாகக் காத்து நின்றனர்.

வாடிவதங்கிச் சுருண்டு போன அந்த மனிதக் குவியலில் சரவணனைத் தேடிப் பொறுக்கி, கூட்டி வந்து காரிலேற்றிப் புறப்படுகிற போது...... காலியில் சப்பாத்துக் கடை நடத்துகிற கந்தனின் மகனும் களைத்துச் சுருண்டு தள்ளாடி வருவதைப் பார்த்து, காரை மறித்து அதில் அவனையும் ஏற்றிக் கொண்டனர்.

சரவணனின் வீட்டு வாசலில் கார் நின்ற போது, சரவணன் திக்கிட்டு விட்டான்.

உள்ளே ஊர்ப் பெண்கள் ஒப்பாரி வைத்து அழுதுகொண்டிருந்தனர். அப்பா கவலையோடு வாசற் திண்ணைத் தூணில் சாய்ந்து கொண்டிருந்தார்.

சரவணனைக் கண்டதும், திடீரென அவர் எழுந்து வந்து அவன் கரங்களைப் பிடித்து இறுக்கிக் கொண்டு அவனைப் பார்த்தபடி நின்றார்.

''பகவானே!'' எனச் சொல்லிக் கொண்டு, பாட்டி புடவைத் தலைப்பு நழுவி விழுந்ததையும் கவனிக்காமல் ஓடி வந்து கட்டிப்பிடித்தாள்.

ஒப்பாரி வைத்த பெண்கள் உடனே நிறுத்தி விட்டனர். அவர்களின் நடுவில் மாமி லக்ஷ்மி, அவளின் பிள்ளைகள் தேவகியும் உமாவும் விம்மி விம்மி அழுது கொண்டிருப்பதைச் சரவணன் கண்டான்.

''பாணந்துறைக்கு அபிஷேகத்துக்குப் போன இடத்தில் கோயிலோடு சேர்த்து அவரைக் கொளுத்திப் போட்டான்களாம்!'' - அப்பா சொல்லி விட்டு, மீண்டும் அதே தூணருகில் உட்கார்ந்து சாய்ந்து கொண்டார்.

## 24

கோட்டைக்கும் காங்கேசந்துறைக்குமான பகல் புகை வண்டி மீண்டும் பிதுங்கி வழிந்து கொண்டு ஓடத் துவங்கி விட்டது.

நாடெங்கும் நிலைமை சகஜமாகி விட்டதாகவும், ஊழியர் களை உடனே வேலைக்குத் திரும்புமாறும், இலங்கை வானொலி அரசு அறிவித்தலை அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தது.

கொள்ளையடிக்கப் பெற்றவை போக எஞ்சியவற்றை இழுத்துப் பூட்டி விட்டுவந்த கடைக்காரர்கள். வீட்டுச் சாமான்களைப் போட்டது போட்டபடி விட்டு விட்டு வெளியேறிய வீட்டுக்காரர்கள், வேலைத்தலங்களை விட்டு ஓடி வந்த சிப்பந்திகள் எனக் குடா நாட்டு மக்களின் ஜீவனத்தின் முதுகெலும்பான மணி ஓடர் பொருளாதாரத்தை ஈட்டிக் கொடுக்கும் மத்தியதர வர்க்க ஆண்கள், அகதி முகாமில் நிகழ்த்திய ஆவேச சபதங்களை, முட்டையிடும் பேட்டுக் கோழி அந்தநேர எரிவில் கொக்கரித்ததை விரைவாக மறந்து விடுவது போல, மறந்து விட்டு கூட்டங் கூட்டமாக ரெயிலேறத்துவங்கி விட்டனர்.

அவர்களில் ஒருவனாகிய சரவணனும் ஊருக்கு வந்து ஒரு மாசத்துக்கு மேலாகி விட்டது.

ஊரில் கனகசபை வாத்தியார் மற்றும் நண்பர்களை அடிக்கடி சந்தித்தான்.

மாவிட்டபுரத்துக்குச் சென்ற போது, தமையன் இராமச்சந்திர சர்மா இவனைக் கட்டிப் பிடித்து உச்சியைத் தடவி விட்ட போது, அச்சகோதர பாசத்தில் மெய் சிலிர்த்துப் போனான்.

''உனக்கு ஆபத்து எதுவும் நேரக்கூடாது என நேர்த்தி வைத்து உபவாசமிருக்கிறேன் தம்பி'' எனச்சொல்லி, அவனை இரு நாட்கள் தன்னுடன் தங்க வைத்து, இராமச்சந்திர சர்மா முருகனுக்கு விசேஷ அபிசேகஞ் செய்து, விபூதிப் பிரசாதத்தை சரவணனின் நெற்றியிலிட்டு விட்ட போது, அண்ணனின் பற்றையும் பாசத்தையும் பார்த்து உருகிப் போனான்.

''அப்பா அடுத்த வாரம் காசியிலிருந்து திரும்புவதாக கடிதம் வந்திருக்கு''என அண்ணி சொன்னாள்.

கொழும்பில் தன்னுடன் வசித்த, தொழிலாற்றிய கூட்டாளிகளின் ஊர்களுக்கும் போய் விசாரித்து வந்தான்.

வங்கியின் யாழ்ப்பாணக் கிளைக்கு அடிக்கடி போய், தலைமையலுவலகத்தின் நிலைவரம் பற்றித் தெரிந்து கொண்டு வந்தான்.

கவலையும் கண்ணீருமாக கட்டிலிற்கிடந்து ஏக்கப்பெருமூச்சுக்களை உதிர்த்திக் கொண்டிருந்த மாமி லக்ஷ்மி இலேசாக எழுந்து ஊசாடத் தொடங்கிவிட்டாள்.

வாரிப் படிந்த தலைப் பின்னலும், கறுப்புப் பொட்டும், சிறு சிறு பருக்கள் தோன்றி அமுங்கிவிட்ட ஒட்டிய கன்னமும் உலர்ந்துவிட்ட உதடுகளுமாக, பாவாடை தாவணிக்கட்டோடு இருபத்தேழு வயசுவரை வாழ்ந்து பழகிவிட்ட தேவகி, ஏங்கும் கண்களைத் துடைத்து விட்டு, அந்த வீட்டின் சமையற் பொறுப்பை ஏற்றுக் கொண்டாள்.

காவேரிப்பாட்டிக்கு கண்ணாடி போட்டும் கண் புகைச்சல் மாறவில்லை. சரவணனையே சில நேரங்களில் ''உதார் தேவகியோ?'' எனத் தட்டுத் தடுமாறத் தொடங்கி விட்டாள்.

தனது நெஞ்சிலே தவழ்ந்த இரு தளிர்களும், வளர்ந்து காலூன்றிவிட்ட திருப்தி குருக்களுக்கு இருந்த போதிலும் அதனையும் மீறிக் கொண்டு, விதவையாகி விட்ட தங்கையின் குடும்பச் சுமை தன் தோள் மீது திடீரென விழுந்து விட்டதை அவரால் உணராமலிருக்க முடியவில்லை. அவர்களின் எதிர்காலத்தை எப்படி அமைப்பது என அவர் யோசிக்கத் துவங்கி விட்டார்.

கனகசபை வாத்தியாரும் சரவணனும் கூறிய யோசனை சரியாகப் பட்டது.

கதைப் புத்தகமும் கையுமாகத் திரிந்த உமாவை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் சேர்த்து விட்டனர். அங்கு படிக்கும் கனகசபை வாத்தியாரின் தங்கையுடன் சேர்ந்து போய் வர உமாவுக்கு வசதியாக இருந்தது.

வேலைக்குத் திரும்புமாறு வங்கியிலிருந்து சரவணனுக்குக் கடிதம் வந்து விட்டது.

இன்னும் நாலு நாட்கள் நின்று போகும்படி அப்பா பின்னடித்தார்.

காசியிலிருந்து திரும்பிய கையோடு சடாட்சரக் குருக்கள் சரவணனைப் பார்க்க வந்து விட்டார்.

''உத்தியோகத்தை விடப்படாது...... பிறகு இரண்டுங் கெட்டானாகப் போய் விடும். சரவணா! நிலைமையை அனுசரித்துப் பக்குவமாக நடந்து கொள்ள வேண்டும்.'' எனப் புத்திமதி சொல்லி விட்டுப் போய் விட்டார்.

கொழும்புக்குச் சரவணன் சென்ற போது, அவர்களிருந்த வீடு எரிந்து...... வெறும் சாம்பர் மேடு மட்டுமிருந்தது. அதனால் அந்தக் கூட்டில் அது வரை காலமும் வசித்த பறவைகள், திசைமாறித் திக்குக்கு ஒவ்வொன்றாகப் பறக்கத் துவங்கின.

## 25

கூராஜுகளுக்கும் காற்றுப் புகாத களஞ்சிய அறைகளுக்கும் கூட பெரிய கிராக்கியாக இருந்தது. தென் கொழும்பிலும் புறநகர்ப் பகுதிகளிலும் இடம் பெயர்ந்த தமிழர்கள் கொட்டாஞ்சேனைப் பகுதி கூடுதல் பாதுகாப்பானது என உணர்ந்து கொண்டு, அப்பகுதியில் வாடகை அறையெடுக்க தேடுதல் நடத்தினர்.

அந்தச் சனிக்கிழமை, சரவணனுடன் கூடப் பணியாற்றும் கொட்டாஞ்சேனை நிரந்தர வாசியான மொறயாஸ், ஏற்

கனவே மோப்பம் பிடித்து வைத்திருந்த வீட்டுக்கு இவனைக் கூட்டிச் சென்ற போது......

அந்த ஒழுங்கையில் வெள்ளை வெளேர் எனப் பளிச் சென்றிருந்த இரண்டடுக்கு வீடு, தெருவோரமாக மூன்றடி உயரக் குரோட்டன் வேலியோடு அழகாகத் தோற்றமளித்தது. வாசலின் வலப்புறம் இரு அடி கூட வட்டு வளராத தென்னம் பிள்ளையில் பருத்த செவ்விளநீர்க் குலைகள் நிலத்தைத் தொட்டுக் கொண்டிருந்தன. முற்றத்தில் மூன்று நான்கு சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்களை விலத்திக் கொண்டு முற்றத்தின் இடப்புறமிருந்த மாடிப்படிகளில் சரவணனை மொறாயஸ் கூட்டிச் சென்றான்.

மாடியின் வாசலில் நான்கடி அகலச் சீமந்துத் தளத்தில் வண்ண வண்ண ரோஜாச் செடிகள், பனையோலை - ஈஞ்சோலைவடிவங் கொண்ட பாம் செடிகள் - சீமேந்துச் சாடிகளில் செழித்திருந்தன. நடுவில் ஒரு சாடியில் சடைத்த செந்துளசி, கதவு வாசலில் போடப்பட்டிருந்த மாக் கோலம், அது ஒரு சைவத்தமிழ் வீடு என்பதைச் சரவணனுக்கு இலகுவில் உணர்த்தியது. 'மிசிஸ். காஞ்சனா' என்ற பிளாஸ்டிக் பெயரின் கீழிருந்த அழைப்பு மணியை அழுத்திய அவர்களைச்சிறிது நேரங் காத்து நிற்கச் செய்துவிட்டே கதவு திறந்தது. அழகிய நூல் வேலைப்பாடுடன் கூடிய, அகன்ற கொலர் வைத்த, பெரிய பொத்தான்கள் தைத்த, பச்சைப் பூப் போட்ட நீண்ட டிறெசிங் கவுண் அணிந்திருந்த இளம் பெண் கதவைத் திறந்து விட்டாள். மோகனமான கண்களில் ஒரு மருட்சி, பவுடர் பூசாத கதுகதுப்பான கன்னங்கள், பொது நிறம், அவிழ்ந்து கலைந்திருந்த நீண்ட கேசத்தின் நுனியிலிருந்த ஈரஞ் சொட்டிக் கொண்டிருந்தது. அவள் காஞ்சனா அல்ல என்பதை அவர்கள் கணிப்பெடுப்பதற்கிடையிலே, அவர்களை உட்காரச் சொல்லி விட்டு, அவள் உள்ளே சென்று விட்டாள். அவளின் ஈரப்பாதங்களின் சுவடுகள் அச்சிவப்புத் தரையில் பதிந்திருந்தன.

வெளி வரவேற்பறையில் நான்கு பிரம்புக் கதிரைகள்,

நடுவில் கட்டையான நீள் சதுர மேசை. அதன் மீது வெளிர் நீலத் துணி விரித்து மேலே பூங்கொத்து நிரம்பிய கண்ணாடிப் பூஞ்சாடி உட்கார்ந்திருந்தது. அந்த வரவேற் பறையை எதிர்த்தாற் போல ஆபிஸ் அறை, இரண்டுக்கு மிடையில் உள் வீட்டுக்குச் செல்லும் கதவு.

வரவேற்பறைச் சுவரில், மத்திம வயசை எட்டாத ஓர் ஆண் கம்பீரமான மீசையும் புன் சிரிப்புமாக பெரிய சட் டம் போட்ட புகைப்படத்திலிருந்தார். அதனைச் சுற்றிச் சரிகை மாலை தொங்கிக் கொண்டிருந்தது.

சிறிது நேரங் கழித்து, பருத்த சரீரங் கொண்ட ஓர் அம் மாள் வெளியே வந்து உட்கார்ந்தாள்.

''நீங்க யாரு........ என்ன வேணும்?'' - வீட்டுச் சொந்தக் காரி அவள் தான் என்பது அந்தக் குரலில் தொனித்தது.

அவளின் கன்னங்கள் புடைத்து வெளிறி இருந்தன. முற் பக்க மயிர் நெற்றியடியில் நரைத்திருந்தது. கண்களில் ஆழமான சோகம், வரிசையான பற்கள். நகையென்ற பெயர் சொல்ல காதுகளில் சிறு தோடுகள், வெறுங் கழுத்தை, கட்டியிருந்த நூற் சேலையின் தலைப்பால் மூடி யிருந்தாள். மொறாயசுக்கு தமிழ் சரளமாக வராது. அதனால் சரவணன் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டு, வந்ததன் நோக்கத்தைச் சொன்னான்.

''அம்மா இங்கே வாங்கோ.'' அவள் பதில் சொல்ல வாய் திறப்பதற்கிடையில், உள்ளேயிருந்து அவளுக்கு அழைப்பு வந்தது.

சிறிது நேரங் கழித்து அவள் இருமிக் கொண்டு திரும்பி வந்து உட்கார்ந்தாள்.

''மது மச்ச மாமிசம் பாவிக்கக் கூடாது...... ஆட்கள் அடிக் கடி தேடிக் கொண்டு வரக் கூடாது...... இரவு எட்டுமணிக்கு கதவு பூட்டிப் போடுவோம். ஆபீஸ் அறையைத் தரலாம்

...... மாச வாடகை அறுபது ரூபா. அட்வான்ஸ் வேண்டாம்... ஆனால் கரைச்சலான ஆள் என்றால் ஒருகிழமை நோட்டீசில் எழும்பிப் போய் விட வேணும்.'' நிபந்தனைகளை ஒரே மூச்சில் சொல்லி முடித்தாள். மூச்சு இளைத்தது. இருமிச் சமன் செய்தாள்.

சுற்றி வளைக்காத அவளின் பேச்சும், அந்த வீடும் சரவணனுக்குப் பிடித்து விட்டது.

அடுத்த நாளே குடிவந்து விட்டான்.

பெட்டி படுக்கைகளை மாடிக்குத் தூக்கிச் செல்லும் போது, எதிர் வீட்டு மதில் சுவரின் மேலால் மூன்று நான்கு பெண் தலைகள் அவனை எட்டிப் பார்த்து விட்டு உள்ளே இழுத்துக் கொண்டன.

மத்தியானம் வெளியில் சாப்பிட்டு விட்டு அவன் அறைக்குத் திரும்பிய போது, வரவேற்பறையில் காஞ்சனா அம்மா உட்காந்து ஓலை விசிறியால் ஆறுதலாக விசுக்கிக் கொண்டிருந்தாள். மற்றொரு நாற்காலியில் அந்த இளம் பெண், தனது இரட்டைப் பின்னல் நிலத்தைத் தொடுவதையும் கவனிக்காமல் சாய்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்தாள்.

''தம்பி நீங்களும் இப்படி வந்து உட்காருங்கோ.'' - காஞ்சனா அம்மா அவனைக் கூப்பிட்டு உட்கார வைத்தாள்.

''சாப்பிட்டாச்சா?''

''ஓம் செட்டித் தெரு சரஸ்வதியில் சாப்பிட்டு விட்டு வருகிறேன்.''

''எனது தம்பியின் கடையும் அந்தத் தெருவில் தான் இருந்தது......'' நீண்ட நெடு மூசசு ஒன்றை விட்டு விட்டு தொடர்ந்து சொன்னாள்.

''போன கலவரத்தில கடையைக் கொள்ளையடிச்சு...

அவனையும் வெட்டிக் கொன்று போட்டான்கள்......... எல்லாம் கனவாய்ப் போச்சு...... அவன் கட்டின இந்த...வீடு தான் இப்போ மிஞ்சியிருக்கு...... இவளின் தகப்பன் செத்துப் போக நானும் எனது மகளும் அநாதையாகப் போகாமல் எங்களைக் காப்பாற்றிக் கொண்டிருந்த எனது தம்பியும் ஒரு சுகத்தையும் அனுபவிக்காமல் போட்டான்... .. இந்தச் சுவரிலிருக்கிற படம் அவனுடையது தான்.'' - சரிகை மாலை போட்ட புகைப் படத்தைப் பார்த்துப் பெருமூச்சு விட்டாள். கண்கள் கலங்கி விட்டன.

பத்திரிகையிலிருந்து அந்தப் பெண் கண்களை எடுக்கவில்லை. அது 'தினகரன்' ஞாயிறு மஞ்சரி. ஈழத்து இலக்கியத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமென்ற இலட்சிய தாகத்தோடு கைலாசபதி புதிய புதிய எழுத்தாளர்களை இனங் கண்டு அவர்களைத் தட்டிக்கொடுத்து, ஈழத்து மண்வாசனை கொண்ட சிறுகதை, கவிதை, நாவல், இலக்கியத் திறனாய்வுக் கட்டுரைகள் என ஆக்கங்களை வெளியிட்டு பக்கத்துக்குப் பக்கம் இலக்கிய மணமூட்டியிருந்தார்.

அந்தச் சிறுகதைப் பக்கத்தில் அந்த அழகிய இளம் பெண் மூழ்கியிருப்பதைக் கண்ட சரவணனுக்குப் பெருமகிழ்ச்சியாயிருந்தது. அது, புனை பெயரில் புகுந்து கொண்டு அவன் எழுதிய சிறுகதை தான்!

''நான் ஏதோ சொல்ல வந்து என்னவோ சொல்லிக்கொண்டிருக்கிறேன். இவள் கௌரி. எனது மகள். சிறுமியாயிருக்கிற போதே அவளின் அப்பா செத்துப் போனார். எனது தம்பி முடிக்காமலிருந்தது நல்லதாகப் போச்சு. எங்களைக் கஷ்டமில்லாமல் பார்த்து இவளை வளர்த்துப் படிக்க வைத்து, வேலையாக்கி விட்டு, வீட்டையும் எங்களுக்கு எழுதித் தந்து விட்டு ...... அவன் இந்தியாவுக்கு எங்களின் ஊருக்குப் போய் கலியாணம் முடிக்கப் புறப்படுகிற வேளையில் இப்படி நடந்து போச்சு தம்பி...'' -

அந்த அம்மாவின் கண்களில் நீர் தழும்பி விட்டது. குரல் தழதழத்து இரைச்சலாக மூச்சு விட்டாள்.

அந்தப் பெண் பத்திரிகையை போட்டு விட்டு, விசிறியை எடுத்து வேகமாக வீசினாள்.

''நீங்கள் அதிகம் கதைக்கக் கூடாது, உணர்ச்சி வசப்படக் கூடாது என்று டொக்டர் சொன்னவரெல்லோ அம்மா, எங்கள் துயரக் கதைகளெல்லாம் அவருக்கு ஏன் அம்மா ...... வாருங்கோ. ஆறுதலாகப்படுங்கோ.........'' தாயை அணைத்து உள்ளே கூட்டிக் கொண்டு போனாள்.

அந்தப் பத்திரிகையைச் சரவணன் எடுத்து, அதில் அவனின் கதைக்கு மூர்த்தி வரைந்துள்ள பெரிய சித்திரத்தை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

இருட்டைக் கிழித்துக் கொண்டு இரு இளம் பெண்கள் புத்தகக் கட்டை நெஞ்சுடன் அணைத்தவாறு, தலை நிமிர்ந்து நடக்கும் காட்சியை அழகாக ஓவியர் வரைந்திருந்தார்.

''உங்களுக்கும் கதை படிக்கிறது பிடிக்குமோ?'' - ஒரு குறுஞ்சிரிப்பில் கன்னத்தில் சிறு குழிவிழ, எதிரே வந்து உட்காந்த படி கௌரி கேட்டாள்.

ஒரு புன்னகையை மறுமொழியாக்கி விட்டு பத்திரிகையை அவளிடங் கொடுத்தான்.

''ஒரு பெண் தலை நிமிர்ந்து நிற்பதற்கு, கல்யாணத்திலும் பார்க்க, படிப்பும் தொழில் செய்யும் ஆற்றலும் பெற்றிருக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ள இந்தக் கதை எனக்கு மிகவும் பிடித்திருக்கு......... நீங்களும் படித்துப்பாருங்கோ.'' - பத்திரிகையை அவனிடங் கொடுத்து விட்டு அவள் எழுந்து உள்ளே போய் விட்டாள்.

அவன் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

மறுநாள் - இரு நாட்கள் ஓய்வுக்குப் பின் தொழிலுக்குச்

செல்வோருக்கு உண்டாகிற திங்கள் காலைப் பரபரப்பு. கௌரி வெள்ளென எழுந்து சமையல் வேலையை முடித்து விட்டு, குளித்துப் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்த போது சரவணன் குளிப்பதற்குச் சென்றான்.

வாரிப், பின்னிய கேசத்தை வளைத்து முறுக்கிக் கொண்டையாக்கி' பச்சை வோயில் சேலையும், அதற்குப்பொருத்தமான சட்டையும், இடது தோளில் தொங்கும் சிறிய தோல் பையும், அகன்ற விழிகளில் உற்சாகமுமாக - அவள் வேலைக்குப் புறப்பட்டு நின்ற போது, அவ்வாரம் வெளி வந்த தனது சிறு கதையின் கதாநாயகியின் மிடுக்கும் கம்பீரமும் அவளில் படிந்திருப்பது போன்ற ஒரு பிரமை சரவணனுக்கு ஏற்பட்டது.

சரவணனுக்காக சாப்பாட்டு மேசையில் ஒரு வெள்ளித் தம்ளரில் கோப்பி ஆவி பறந்து கொண்டிருந்தது.

## 26

ஆறுகிழமைகளுக்கு முன்பு திடீரென ஸ்தம்பித்து, இலேசாக நகர்ந்து ஊரத் துவங்கியிருந்த வங்கிகள், அரச அலுவலகங்கள், வெகு வேகமாக இயங்கிக் கொண்டிருந்தன.

சரவணனுக்கு வங்கியில் கை கொள்ளாத வேலை. எட்டு மணித்தியால வேலை நேரத்தோடு, மேலும் நான்கு மணித்தியால கட்டாய 'ஓவர்டைம்' செய்ய வேண்டியேற்பட்டது. ஆனாலும் இரவு எட்டு மணி அடிப்பதற்கிடையில், சாப்பாட்டைக் கட்டி எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்து விடத் தவறுவதில்லை. சனிக்கிழமைகளிலும் 'ஓவர்டைம்'. படிக்கவோ, எழுதவோ, நண்பர்களைக் கண்டு கதைக்கவோ நேரமின்றி வேலைச் சுமை அவனை நெரித்தது.

நான்கு மாசத்திலேயே அவன் மிகவும் களைத்து மெலிந்து போனான். ''கொஞ்சம் ஒய்வெடுங்கோ தம்பி'' எனக் காஞ்சனா அம்மா சொன்னதையும், ''கண்கள் உள்ளே தாழ்ந்து, கன்னம் வற்றி உடம்பு மெலிந்து விட்டீர்கள்''

எனக் கௌரி கூறியதையும் ஒரு புன்முறுவலைக் காட்டிச் சமாளித்து விட்டு, சரவணன் வேலைக்கு ஓடிக் கொண்டேயிருந்தான்.

ஆயிரத்தைக் கையில் வைத்துக் கொண்டு, மூவாயிரத்தை தகப்பனுக்கு அனுப்பி விட்டு அறைக்கு வந்து படுத்த சரவணனால், அடுத்த நாட்காலை எழுந்து கொள்ளவே முடியவில்லை.

உதறலும் அனுங்கலுமாக படுக்கையில் கிடந்தவனைப் பார்த்து காஞ்சனா அம்மாவும் கௌரியும் பதறிப் போய் விட்டனர். அருகில் சென்று அவனின் நெற்றியைத் தொட்டுப் பார்த்து விட்டு காஞ்சனா அம்மா கையை உதறினாள்.

வேலைக்குப் புறப்பட்ட கௌரி, உடனே ஓடிப்போய் டாக்டரைக் கூட்டி வந்தாள்.

ஊசி போட்ட இடத்தின் வலியைப் போக்க உரைஞ்சித் தேய்த்து காஞ்சனா அம்மா வெந்நீர் ஒத்தடம் கொடுத்தாள்.

மாத்திரைகளை அவனின் வாயில் போட்டு கௌரி பதமான வெந்நீர் ஊற்றி விட்டாள்.

அவனின் நெற்றி வியர்வையைத் துவாயினால் ஒற்றியெடுத்து, பக்கத்திலிருந்து காஞ்சனா அம்மா விசிறிக் கொண்டிருந்தாள்.

வேளா வேளைக்கு மருந்து பருக்கவும், பழரசம், ஹார்லிக்ஸ், கஞ்சி தயாரிக்கவும் அந்த வீட்டில் உதவிக்கு வேறு ஆளில்லாததால், மூன்று நாள் லீவுக்கு விண்ணப்பித்திருந்த கௌரி, சரவணனுக்குப் பத்தியங் கொடுத்துப் பராமரிப்பதற்காக, அதனைப் பத்து நாளாக நீடிக்குமாறு மின்தறி நெசவாலை நிர்வாக அதிகாரிக்கு கடிதமனுப்பினாள்.

புதுப்புது மோஸ்தர் புடவைகளின் வடிவமைக்கும் ஆற்ற

லும், அநாவசியமாக ஒரு நாள் கூட லீவு எடுக்காத அவளின் ஒழுங்கும் மிகவும் பிடித்துப் போயிருந்த நிர்வாகி ஆட்சேபணையின்றி அந்த லீவை அங்கீகரித்து விட்டார்.

காய்ச்சல் விட்டு விட்ட போதும், சரவணனால் எழுந்து உட்கார முடியவில்லை. மிகப் பெலவீனமாயிருந்தது. கழிவறைக்குப் பிடித்துக் கூட்டிக் கொண்டு போய் திரும்பிக் கூட்டி வரவும், வெந்நீரால் உடம்பைக் கழுவித் துடைக்கவும் பருத்த சரீரம் கொண்ட இருதய நோய்க்காரியான காஞ்சனா அம்மாவால் இயலாததால், கௌரியே அவற்றைக் கவனிக்க வேண்டியிருந்தது.

வேர்வை நெடிவீசிக் கொண்டு அறையில் குவிந்து கிடந்த அவனின் உடுப்புகளையும் போர்வைகளையும் சோப்பு நீரில் போட்டுத் துவைப்பதற்காக அவள் அள்ளிக் கொண்டு போனதைக் கண்ட சரவணனின் கண்களில் நீர் கோத்து விட்டது.

## 27

உடுப்பிட்டிக் கல்லூரியில் சேர்ந்து ஓராண்டு முடிவதற்கிடையிலேயே உமா படிப்பில் நல்ல பேரெடுத்து விட்டாள்.

கழுத்தளவு வெட்டிய சுருண்ட கேசம், வட்ட முகம், கூரிய நீண்ட மூக்கு, இழுத்துக் கவருகிற பிரகாசமான மோகனம் வீசும் அகன்ற விழிகள், பொலிவான கன்னம், அதில் அடிக்கடி குழியும் சிரிப்பு, மோவாயில் ஒரு சிறு பள்ளம்...... புத்தகங்களைச் சைக்கிளின் பின் பக்கம் அடுக்கிக் கட்டிவிட்டு, ஓட்டுவதற்குத் தயாராக ஏறி உட்காருகிற போது, ஒரு குதிரை வீரனின் கம்பீரமும் மிடுக்கும் அவளிலிருப்பதைப் பார்த்து குருக்கள் வியந்து போய் நிற்பதுண்டு.

கல்லூரி நிகழ்ச்சிகளில் பாரதியாரின் பாடல்களையும், மெல்லிசைப் பாடல்களையும் இனிய குரலில் உரிய மெட்டமைப்பில் அவள் இசைக்கின்ற போது, உணர்ச்சிக் கொந்தளிப்பில் கல்லூரிச் சபை மெய்ம்மறந்து கிடக்கும்.

தேவகிக்கு வரன் தேடி குருக்கள் குடா நாட்டையே பவனி வந்து விட்டார்.

உத்தியோக மாப்பிள்ளையைத்தான் அவளுக்குச் செய்து வைக்கப் போவதாக வெறும் வாய் சப்பிக்கொண்டு காலத்தைக் கழித்து விட்டு, கடைசியில் நாராயணய்யர் தலையையும் போட்டு விட்டு, கோயிற் பூசகரான மாப்பிள்ளையென்றாலும் பரவாயில்லை, என்ற நிலைக்கு லக்ஷ்மியம்மா இறங்கி விட, குருக்கள் பஸ் ஏறி இறங்கி அலைந்து சலித்துப் போனார்.

தேவகியின் வயசுக்குப் பொருத்தமான மாப்பிள்ளை கிடைக்கவில்லை. அவரின் தேடும் முயற்சியில் இரண்டொருவர் தட்டுப் பட்ட போதிலும்............

''உருப்படியாக ஒரு ஸ்லோகத்தையே சொல்லத் தெரியாமல், கொண்டையை வளர்த்து, ஒரு கத்தை பூணூலை தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு, அர்த்தம் தெரியாமல் நாலு மந்திரத்தை தமிழில் எழுதிப் பாடமாக்கி, பூச்சுங் குறியுமாக குருக்கள் எனக் கூறிக் கொண்டு அலைகிற இள வயசுப் பையன்களுக்கே சீதனமாக இருபத்தையாயிரமும் வீடு வளவும் கேட்கிற போது.........'' - அந்த இரண்டொரு இடங்களில் அவர்கள் கேட்ட சீதனத் தொகையைக் கற்பனையில் கூட அவரால் எட்டிப் பிடிக்க முடியவில்லை.

''அவளுக்கென ஒருத்தனைப் பிரம்மா எழுதியிருப்பான் தானே......... இன்னும் முயற்சித்துப் பார் மகனே'' - காவேரியம்மா மகனைச் சோர்வடைய விடாமல் ஊக்கப் படுத்திக் கொண்டிருந்தாள்.

## 28

**யா**ருமே சற்றும் எதிர் பார்க்காமல் அது நடந்து விட்டது. காலையில் சரவணன் கந்தோருக்குப் புறப்பட்ட போது,

நீறும் நெற்றியுமாக நாற்காலியிலிருந்து உற்சாகமாக துளசி மணி மாலை உருட்டிக் கொண்டிருந்த காஞ்சனையம்மா, அவன் வேலை முடிந்து வீடு திரும்பிய போது மூச்சு முட்டித் திணறிக் கொண்டு கட்டிலிற் கிடந்தாள். கீழ் வீட்டுக் காரர்களும் அயல் வீட்டுக் காரர்களும் அங்கலாய்ப் போடு அங்கு கூடி மௌனமாக நின்றனர். கௌரி பதற்றமுங் கவலையுமாக பக்கத்தில் நின்று தாயின் நெஞ்சை பக்குவமாகத் தடவிக் கொண்டிருந்தாள்.

சரவணனைக் கண்டதும் காஞ்சனையம்மாவின் வியர்த்து நனைந்த முகத்தில் சிறு பிரகாசம். கையசைத்து கிட்டக் கூப்பிட்டு, அவன் கரத்தை இறுகப் பற்றி, பார்வையால் அவனை இரந்து... ...நீர் நிறைந்த விழிகள் கௌரியை நோக்கி புரண்ட போது...........

சரவணன் சற்றுமே எதிர்பார்க்கவில்லை!

காஞ்சனையம்மா மறைந்து இரு வாரங்களாகியும், கௌரியின் கவலை போகவில்லை. விம்மி விம்மி அழுதபடி இருந்தாள். தாயின் இறுதி யாத்திரைக்குப் பிறகு அவளைத் தேற்றுவதற்கு அந்த வீட்டுக்கு எவரும் வரவில்லை. சரவணன் அவள் முதுகைத் தடவி ஆதரவோடு தேறுதல் சொன்னான். கேவிக்கொண்டே அவன் காலடியில் வீழ்ந்த அவளை அணைத்துத் தூக்கி நிற்க வைத்தான்.

அந்த வீட்டில் அவர்களிருவரும் தனித்து வாழ்வதை அயலவர்கள் சந்தேகத்தோடு நோக்கினர். அயலவர்களின் ஐயுறவை நிஜமாக்கிக் கொண்டு தாலி கட்டாத கணவனும் மனைவியுமாக அவர்கள் வாழத் துவங்கி விட்டனர்.

அந்த வீட்டு வாசலில் மீண்டும் மாக்கோலம்.

கௌரியின் நெற்றியில் பளிச்சென்ற குங்குமம்.

பூஜை அறையிலிருந்து சுகந்த ஊதுபத்தி மணமும், இனிய குரலில் கந்தரனுபூதியும் பரவிக் கொண்டிருந்தன.

# 29

கனகசபை வாத்தியார் மீண்டும் காலடி எடுத்து வைத்து விட்டார்.

பக்கத்துக் கிராமத்து வாசிகசாலையின் ஆண்டு விழா விளையாட்டுப் போட்டிக்குப் போய் வந்த இளைஞர்கள், தமது கிராமத்தில் ஒரு வாசிகசாலையை அமைத்தே தீருவது என்ற உறுதியோடு, அவரை அணுகி ஊக்கப்படுத்தி விட, அந்தப் பணிக்கான திட்டங்களை வகுத்துக் கொண்டு, அவர்களுடன் உற்சாகமாக ஊரைச் சுற்றி வந்தார். வாசிகசாலைக்கான கட்டடத்தை அமைக்க காணி வாங்குவதற்கு நிதி சேகரிப்பதற்காக ஒரு கதம்ப விழா·வை நடத்தும் முயற்சியில் மும்முரமாக அவர்கள் மூழ்கியிருந்தனர்.

கிழக்குப் பகுதி இளைஞர்களின் 'சோக்கிரட்டீஸ்' நாடகம், மேற்குப் பகுதியாரின் 'வள்ளிதிருமணம்' கதாகாலட்சேபம், பனங்கூடற் பகுதியாரின் 'காத்தவராயன்' கூத்திலிருந்து சில காட்சிகள் என நிகழ்ச்சிகளுக்கு இசைவு பெற்றுக் கொண்டு குருக்கள் வீட்டுக்கு அவர்கள் வந்தனர்.

உமாவின் எழுச்சியூட்டும் இசைத் திறமையைப் பற்றிக் கேள்விப் பட்டிருந்த கனகசபை வாத்தியார், கதம்ப விழாவில் ஆரம்ப நிகழ்ச்சியாகச் சில பாடல்களை உமா பாட வேண்டுமெனக் கேட்ட போது, குருக்களால் மறுப்புச் சொல்ல முடியவில்லை.

குருக்களின் ஒப்புதலைப் பெற்றுக் கொண்டு அவர்கள் புறப்பட்டுப் போன பின்னர்தான், தபால்காரன் வந்தான்.

சரவணனிடமிருந்து வந்த அந்தக் கடிதத்தைப் படித்த போது, அவருக்கு கோபம் கொந்தளித்து எழுந்தது. உடம்பு பதற........ கண்கள் இருள்வது போல........ விறாந்தைத் தூணில் சாய்ந்து உட்கார்ந்து விட்டார்.

''என்ன........ சரவணனுக்கு என்ன நடந்தது?........ கடுதாசியில் என்ன எழுதியிருக்கிறான்?'' - காவேரியம்மா குடு குடுவென ஓடி வந்து பக்கத்தில் உட்கார்ந்து பதறிக் கொண்டு கேட்டாள்.

தேவகி தண்ணீர்ச் செம்பு கொண்டு ஓடி வந்தாள்.

குளிர்ந்த நீரைக் குடித்த தெளிவில் குருக்கள் எழுந்து நின்று இடுப்புச் சால்வையை அவிழ்த்து உதறித் தோளிற் போட்டுக் கொண்டு ''தேவகி! பாட்டிக்குப் படிச்சுச் சொல்லு'' எனக் கடிதத்தை வீசியெறிந்து விட்டு, கோயில் வாசலிற் போய் உட்கார்ந்து விட்டார்.

உரத்துப் படித்தால்தான் இப்போது காவேரியம்மாவுக்குக் காது கேட்கும். தேவகி சத்தம் போட்டு வாசித்தாள்.

''பச்சைக் குழந்தையைப் பாவி எவளோ மயக்கிப் போட்டாளே!'' - பாட்டிக்கு அழுகை வந்து விடும் போலிருந்தது.

கடிதம் முழுவதையும் தெளிவாகக் கேட்டுக் கொண்டிருந்த, மரக்கறி விற்க வந்த பாறுவதி, உடனே அங்கிருந்து எழுந்து ஊர்க் குருவியாகப் பறந்து விட்டாள்.

மாலைப் பூசை முடிவதற்கிடையில் அந்தச் செய்தி ஊரெங்கும் பரவி விட்டது.

''கோயில் ஐயற்றை மேன் கொழும்பிலை சாதி கெட்டவளைக் கிளப்பிப் போட்டாராம்!''

இரத்த உரித்துக்கள் நெருக்கித் தள்ளி விட, தோளிற் சால்வை நிலத்தில் இழுபட, கோவில் எசமான் கணபதிப் பிள்ளை குருக்களைத் தேடி வந்து விட்டார். அவர் கூட கொக்கரிக்கும் மார்க்கண்டரும் மற்றுஞ் சிலரும் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு நின்றனர்.

''நாங்கள் கேள்விப் பட்டது உண்மையென்டால், நாளை

யிலிருந்து நீர் பூசை பண்ணக் கூடாது.'' - கணபதிப்பிள்ளை யரின் தடித்த வார்த்தைகளில் மரியாதை பல படிகள் கீழே இறங்கி விட்டது.

திக்கிட்டு நின்ற குருக்கள் ஒரு சொல்லுக் கூடப் பேச முடியவில்லை. திறப்பைக் கொடுத்து விட்டு வீட்டுக்குத் திரும்பி விட்டார்.

செய்தி கேள்விப் பட்டு வந்த மூத்த மகன் இராமச்சந்திர சர்மா சரவணனின் செய்கை தனது எதிர் காலத்தைப் பாதித்து விட்டதென்றும், அவனுக்குச் செல்லங் கொடுத்துக் கெடுத்தது அப்பாதான் என அவர் மீது குற்றஞ் சாட்டி விட்டுக் கோபித்துக் கொண்டு போய் விட்டான்.

தாலி கட்டியவள் செத்து மூன்று மாசங் கூட முடிவதற்கிடையில், கொடியேற்றம் செய்து பார்த்து விட ஆசைப்பட்டுக் கொண்டு, அதற்காக தேவகியை இரண்டாந் தாரமாக்கி விடுவதற்கு, கெஞ்சிக் கொண்டு ஒற்றைக் காலில் நின்ற சதாசிவக் குருக்கள், இனி அந்த வீட்டுச் சம்பந்தம் வேண்டாமென ஆள் மூலம் செய்தி அனுப்பியிருந்தார்.

விடுப்புக் கேட்டறியவும், அனுதாபஞ் சொல்லவுமென அந்த வீட்டுக்கு ஆட்கள் வந்து போய்க் கொண்டிருந்தனர். ஆனால்... வைத்தீஸ்வரக் குருக்கள் எவருடனுமே பேச வில்லை. வழக்கம் போலச் சாப்பிட்டு விட்டு விறாந்தைத் தூணோடு சாய்ந்து உட்கார்ந்து கொண்டார்.

கனகசபை வாத்தியார் அந்தப் பக்கம் வரவேயில்லை. பம்பரமாகச் சுழன்று கதம்ப நிகழ்ச்சிக்காக ரிக்கட் விற்றுக் கொண்டிருந்தார்.

சில நாட்களுக்குப் பிறகு வந்த சின்னப்பு ஆசாரியார், குருக் களுக்கு எதிரே கைகட்டிக் கொண்டு மௌனமாக இருந்தார். காவேரிஅம்மாவும் மகனுக்கு அருகில் வந்து குந்தியிருந்து, கைகளினால் முழங்கால்களை கட்டிப் பிடித்துக் கொண்டு,

கூசிப் பார்த்து விட்டு தொண்டையைக் கனைத்துக் கொண்டான்.

''நீ நெடுக யோசித்து யோசித்து மூளையைக் குழப்பாதை ........ நாளைக்கு இந்தக் குமர்களைக் கரை சேர்க்கிற பொறுப்பு மிகுக்கு......... சரவணன் சின்னப்பிள்ளை......... இளமை மயக்கத்தில் மனசு தழம்பிப் போட்டான். நல்ல புத்திமதி சொல்லி எச்சரிக்கையாக நீ எழுதினால் அவன் திருந்திப் போடுவான். நீ யோசிக்காமலிரு .........'' - மகனைக் கூர்ந்து பார்த்துக் கொண்டு தாய் சொன்னாள். பேரனில் அவளுக்கு இன்னும் நம்பிக்கையிருந்தது.

''குருக்கள்! கடினமாய் யோசிச்சு மூளையைக் கலக்கப் படாது. சின்ன ஐயா கெட்ட வழிக்குப் போக மாட்டாராக்கும்......... நாம் நேரில் போய் புத்தி சொல்லிப் பிள்ளையைக் கூட்டி வரவாக்கும். நேரில் போற மாதிரி காயிதம் வேலை செய்யாது. யோசிக்காமல் கொழும்புக்கு ஒரு நடை போட்டு வர.........'' - சின்னப்பு ஆசாரியார் கூன் விழத்துவங்கி விட்ட முதுகை நிமிர்த்திக் கொண்டு கெஞ்சினார்.

''ஓம் மாமா......... சரவணன் உங்கள் சொல்லுக்கு அடங்கி வளர்ந்த பிள்ளை. சரியான புத்தி சொன்னால் உங்கள் சொல்லை மீறமாட்டார்.'' - சரவணனை நேரில் போய் சந்தித்து வரும்படி தேவகியும் நெருக்கினாள்.

அவர் 'சரி' சொல்லி விட்டார்.

## 30

கொட்டாஞ்சேனை மாரியம்மன் வீதி, பிள்ளையார் கோயிலைக் கடந்து இடப்புறம் திரும்பும் ஒழுங்கை - அந்த முகவரியைக் கண்டு பிடிப்பதில் அதிகாலையென்ற போதிலும், குருக்களுக்குச் சிரமமிருக்கவில்லை.

கதவைத் திறந்த சரவணன் அப்பாவைக் கண்டதும் பதறிப் போனான்.

பெட்டியை வாங்கி ஓரமாக வைத்து விட்டு, நாற்காலியை இழுத்துப் போட்டான்.

தலையை நிமிர்த்திக் கூடப் பார்க்காமல், மௌனமாக அவர் அதில் உட்கார்ந்தார். அவரின் மௌனத்தின் தாக்கத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல், சரவணன்; குருவுக்கு முன்னால் கை கட்டி நிற்கும் சிஷ்யன் போல மூலையில் நின்றான்.

உள்ளே பூஜை அறையிலிருந்து பரவி வந்த சாம்பிராணிப் புகையைத் தொடர்ந்து, குளித்த தலையின் கேசத்தின் நுனியில் தொடுத்த சிறு முடிச்சும், பளிச் சென்ற நீற்றுக் குறியும் குங்குமப் பொட்டும், தலையில் சொருகிய பூச்சர முமாக ஆசாரக் கோலத்தில் வெளியே வந்த கௌரியிடம் 'எனது அப்பா வந்திருக்கிறார்' என அவன் சொன்ன போது, அந்தப் பெரியவரின் பாதங்களில் அவள் வீழ்ந்து நமஸ்கரித்தாள்.

வைத்தீஸ்வரக் குருக்கள் அவளை வாழ்த்தவும் முடியாமல் வைவதற்கும் இயலாமல் தடுமாறிக் கொண்டு மௌனித் திருந்தார்.

உள்ளே ஓடிப் போன கௌரி அவர் குளிப்பதற்கு அவசரம் அவசரமாக அடுப்பில் வெந்நீரைப் போட்டாள். வெளுத்த வேட்டியும் துவாயும் எடுத்து வைத்தாள்.

''பயணக் களைப்பு நீங்க ஸ்நானம் செய்து பூஜையை முடி யுங்கள் அப்பா...... நான் வெளியே போய் விட்டு விரைவாக வந்து விடுகிறேன்.' - ஆசர்ரமாக அப்பா சாப்பிடுவதற்கு மாரியம்மன் கோயில் ஐயரிடம் இட்லியும் பாலும் வாங்கி வருவதற்காக மூடி போட்ட வெள்ளிச் சட்டியையும் சுடு தண்ணீர்ப் போத்தலையும் எடுத்துக் கொண்டு சரவணன் புறப்பட்டுப் போனான்.

ஆபீஸ் அறையின் கட்டிலுக்குப் புதிய பெட்சீட் விரித்து,

அறையைச் சுத்தப்படுத்தி விட்டு, அவர் கொண்டு வந்த பெட்டியை உள்ளே கொண்டு போய் கௌரி வைத்து விட்டு வந்து பணிவாகச் சொன்னாள்.

''ஐயா, நீங்கள் குளிப்பதற்கு வெந்நீர் ஆயத்தம்.''

குளியலறைக்கு குருக்கள் எழுந்து போனார்.

அலுத்துக் களைத்த உடம்புக்கு அந்த வெந்நீர்க் குளிப்பு அவருக்கு வெகு இதமாக இருந்தது.

அணிந்திருந்த ஆடைகளை துவைத்து நீரில் அலம்பி எடுத்துக் கொண்டு வெளியே வந்த போது, கௌரி அந்த உடுப்புக்களை அவரிடமிருந்து கை நீட்டி வாங்கினாள்.

பூஜை அறையுள் நுழைந்த குருக்களுக்கு கண்ணாடிச் சட்டம் போட்ட பெரிய படங்களில் விநாயகர், திருச் செந்தூர் முருகன், வெங்கடாசலபதி - காட்சியளித்துக் கொண்டிருந்தனர். படங்களுக்கு முன்னால் இரு பெரிய வெள்ளிக் குத்து விளக்குகள் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. நடுவில் திருநீறு, குங்குமம், சந்தனப் பேழைகள், ஒரு வெள்ளித் தட்டு நிறைய பூஜைக்குத் தயாராக ரோஜாப் புஷ்பங்களும் துளசிப் பத்திரங்களுமிருந்ததைக் கண்டு அவர் மனம் திருப்திப் பட்டது. பூஜை அறையெங்கும் சுகந்த ஊதுபத்தியின் நறுமணம் பரவிக் கொண்டிருந்தது.

பூஜையை முடித்துக் கொண்டு ஆபிஸ் அறைக்குள் அவர் நுழைந்த போது, அங்கே சரவணன் வெள்ளித் தட்டுகளில் உணவைப் பரிமாறிக் கொண்டிருந்தான்.

அந்த உணவையும் அவனையும் அவர் மாறி மாறிப் பார்த்த போது, அந்தப் பார்வையின் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட அவன் ''உங்களுக்காக கோயில் ஐயரிடமிருந்து எடுத்து வந்த சாப்பாடு'' எனச் சொன்னான்.

தகப்பனும் மகனும் நீண்ட நேரமாக அந்த அறையுள் கதைத்துக் கொண்டிருந்தனர். கௌரி வெளியே வராமல் சமையற் கட்டிலேயே இருந்தாள்.

அவரைப் படுத்து ஓய்வெடுக்குமாறு சொல்லி விட்டு வெளியே வந்த சரவணன், ''பாவம் அப்பா'' எனச் சொன்ன போது அவன் கண்கள் பனித்திருப்பதைப் பார்த்த கௌரி பதைத்துப் போய் விட்டாள். ஆனாலும் அவனி டம் அவள் எதையுமே கேட்கவில்லை. அவசியமானவை களை அவளிடம் அவன் மறைப்பதில்லையென்பது நிச்சய மாக அவளுக்குத் தெரியும்.

சரவணன் அன்று கந்தோருக்குப் போகவில்லை. கௌரியும் லீவு.

அப்பா உறங்கி ஓய்வெடுத்துக் கொண்டிருந்தபோது, மற் றொரு நடை மாரியம்மன் கோயில் ஐயரிடம் ஓடிப் போய் வந்து விட்டான்.

மத்தியானச் சாப்பாடு முடிந்த பிறகு, வெளி விறாந்தையின் பிரம்பு நாற்காலியிலுட்கார்ந்திருந்த குருக்கள், சுவரோர மாக நின்ற மகனை அடுத்த கதிரையில் உட்காரச் சொன் னார்.

''காலையில் கதைத்த விஷயங்களை கவனமாக ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்து விட்டாயா?''

''ஓம் அப்பா. தனித்து உறுதியாக நிற்கக் கூடிய தன்னம் பிக்கை எனக்கு இருக்கிறது.''

''உனக்கு மட்டும் இருந்தால் போதாது. இருவருக்கும் அது இருக்க வேண்டும். நானே நேரில் கேட்க வேண்டும். அவளையுங் கூப்பிடு''

அவர் எதிரில் வந்து நின்ற கௌரியை உட்காரச் சொல்லி விட்டு தெளிவாக திட்டவட்டமாகக் கேட்டார்:

''பிள்ளை ... நீ சிறு பெண். இளமை மயக்கத்தில், செய் கிற செயல்களின் பின் விளைவுகளை உணராமல் பலர் அவசரப்பட்டுக் கொண்டு முடிவை எடுத்துவிட்டு, பிறகு

துக்கப்படுவது எனக்குத் தெரியும். உங்களிருவருக்கும் அப்படி ஏற்படக் கூடாது என்ற கவலைதான் எனக்கு. எனது மகன் என்றும் உம்மை வைத்துக் காப்பாற்றுவான் என்ற திடமான நம்பிக்கை உமக்கு உண்டா?''

''எனக்கு அதில் எள்ளளவேனும் சந்தேகம் இல்லை ஐயா.''

''உமக்கு உறவு சொல் எவருமில்லை. சரவணனையும் ஜாதியிலிருந்து கழித்து ஒதுக்கி விடுவார்கள். ஒதுக்கப்பட்ட ஒரு தனித்த வாழ்க்கையை இன்றல்ல, இனி எதிர்காலத்திலும் நடத்தலாம் என்ற துணிவும் நம்பிக்கையுமிருக்கிறதா?''

''விரிந்த அன்புள்ளமும் பரந்த நோக்கமும், விஸ்வாசமுமிருந்தால் இந்த உலகத்தையே உறவாக்கி விடலாம். என நினைக்கிறேன் ஐயா''

''உமது அம்மாவின் மரணத்தினாலேற் பட்ட நிர்ப்பந்தமான சூழ் நிலை காரணமாக மட்டும் அல்லாமல், நீங்கள் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் உண்மையாக நேசிப்பதாக உங்கள் உங்கள் மனச்சாட்சி கூறிக் கொள்ளுமேயானால், அந்த நேசத்தை எந்த சக்தியும் பிரிக்க முடியாது. நானும் தடுக்க வரவில்லை.'' - குருக்கள் முடிவாகச் சொல்லி விட்ட போது கௌரியின் கண்களில் நீர் துளிர்த்து விட்டது.

ஏதோ, நினைத்துக் கொண்ட குருக்கள், திடீரென எழுந்து ஆபிஸ் அறைக்குள் போய் உடுப்பை மாற்றிக் கொண்டு வெளியே புறப்பட்டு விட்டார்.

''இன்னும் யோசியுங்கள். வெளியே போய் விட்டு வருகிறேன்'' எனச் சொல்லிக் கொண்டு படியிறங்கிப் போன அவரைப் புரிந்து கொள்ள இயலாமல் இருவரும் சிந்தித்துக் கொண்டிருந்தனர்.

சாயந்தரம் அவர் வீடு திரும்பிய போது, அவர்களிருவரும் தாம் என்றும் ஒன்றாகச் சேர்ந்து வாழவே விரும்புவதாகப் பிடிவாதமாகக் கூறினர்.

அன்று மாலைப் பூஜைக்கான தீபத்தை நேர காலத்தோடு குருக்கள் ஏற்றினார். தாலிச் சரட்டையும் மஞ்சள் கயிற்றையும் சுவாமி முன்பு வைத்துப் பிரார்த்தித்து விட்டு, சரவணனைக் கூப்பிட்டு அதனை எடுத்துக் கௌரியின் கழுத்தில் கட்டுமாறு சொன்னபோது, அவர்கள் பேச முடியாமல் வியந்து போய் நின்றனர்.

அவரைத் தெய்வமாக எண்ணி அப்புதுத் தம்பதி அவரின் காலில் வீழ்ந்து நமஸ்கரித்த போது, இருவரினதும் தலைகளைத் தடவி மனங்குளிர ஆசீர்வதித்து, நெற்றியில் விபூதி தரித்து விட்டார்.

அன்றிரவு றெயிலை அவர் பிடிக்க வேண்டும். தூக்குச் சட்டியும் கையுமாக வெளியே புறப்பட்ட சரவணனை அவர் தடுத்து விட்டார்.

''உன் மனைவியின் கையால் கோப்பி போடச் சொல்லு... இப்போது அவள் என் மருமகள்.''

கௌரியினால் அவள் காதுகளை நம்ப முடியவில்லை.

சரவணன் தனது தகப்பனாரைப் பார்த்து பூரித்து நெகிழ்ந்து நின்றான்.

''பிறப்பினால் இழி குலத்தில் பிறந்தவரேனும், அப் பூர்வாசிரமத் தொடர்புகளிலிருந்து நீங்கி....... உயர்குல வாழ்க்கைக்குரிய ஆசாரங்களையும் ஒழுக்கத்தையும் எவனொருவன் உரித்தாக்கிக் கொள்கிறானோ அவன் உயர் குலத்துக்குச் சமமாகி விடுகிறான்'' என்ற சாஸ்திரங்களின் சாரம் வைத்தீஸ்ரக் குருக்களின் காதுகளில் எதிரொலித்துக் கொண்டேயிருந்தது.

அவர்களின் பிரிக்க முடியாத பரஸ்பர நேசம் அவருக்குப் பிடித்திருந்தது.

அவளின் கனிவும் பணிவும் அவருக்குப்பிடித்திருந்தது.

அவளின் ஆசாரமும் ஒழுக்கமும் மிகவும் பிடித்திருந்தது.

நிதானமின்றி ஆடிக் குலுங்கி ஊர்ந்து கொண்டிருந்த அந்த றெயில், புதிய வேகத்தில் சீராக ஓடத் துவங்கிவிட்டது.

## 31

வித விதமான காட்சிகளைக் கொண்ட திரைகள் ஒன்றன் மேல் ஒன்றாகத் தொங்கிக் கொண்டிருந்தன. முதற் காட்சியாகப் பெரிய சரஸ்வதி வீணை வாசித்துக் கொண்டிருந்தாள்.

கோயில் வீதியை யொட்டிய தோட்ட வெளியில், மூன்றடி உயரமான தென்னங் குற்றிகளை நட்டு அதன் மீது பலகை பரவி மேடை அமைத்து மேலே தட்டிக் கொட்டகையும் போட்டிருந்தனர். அதில் வித விதமான காட்சிகளைக் கொண்ட திரைகள் தொங்கிக் கொண்டிருந்தன.

லைற் எஞ்சின் இரைச்சலோடு ஒளி பரவிக் கொண்டிருந்தது. நீள் சதுர ஒலி பரப்பிப்பெட்டி ஊடாக மெல்லிய இசை தவழ்ந்து வந்து கொண்டிருந்தது.

கதம்ப விழாவைப் பார்த்து ரசிக்க இரவு ஏழு மணிக்கே ஊர் கொடி விட்டுத் திரண்டு வந்து கொண்டிருந்தது.

உமாவையும் தேவகியையுங் கூட்டிக் கொண்டு லக்ஷ்மியம்மா வேளையோடு அங்கு போய்விட்டாள்.

அவசரமாகச் சாப்பிடும் மகனுக்குப் பரிமாறிக் கொண்டே காவேரியம்மா கண்ணைக் கூசிக் கூசிக் கேட்டாள்.

''கொழும்பிலிருந்து வந்தும் நாலைந்து நாளாகிறது......... ஒன்றும் சொல்லுகிறாயில்லை ...... ஏன் சரவணனைச் சந்திக்கவில்லையே?.. ... என்ன சொல்லுகிறான்?''

கொழும்பில் நடந்தவை எதனையும் குருக்கள் எவருக்கும் சொல்லவில்லை. முகத்தில் முன்பு போல வாட்டமில்லை. உள்ளத்தில் திருப்தியிருந்தது. ஆனாலும் எவருக்கும் எதை

யுமே சொல்ல விரும்பவில்லை. தனது செய்கையை விளங்கிக் கொள்ளும் பக்குவம் அவர்களுக்கு இல்லையென அவர் எண்ணிக் கொண்டு மௌனஞ் சாதித்துக் கொண்டிருந்தார்.

காவேரியம்மா மீண்டுங் கேட்டபோது, சாப்பிட்டு முடிந்த பின் இலையைத் தூக்கிக் கொண்டு அவர் சொன்னார்.

''இனி அவர்களை யாரும் பிரிக்க முடியாது.''

தோட்ட வெளியில் கனகசபை வாத்தியார் கதம்பவிழா வரவேற்புரை கூறத் துவங்கிவிட்டார்.

வடக்கு வீதி மதிற் சுவரோரமாக வைத்தீஸ்வரக் குருக்கள் வசதியாகப் போய் நின்று பார்த்தார்.

''முதல் நிகழ்ச்சி இன்னிசைப் பாடல்கள் - வழங்க இருப்பவர் எங்களூர் இளம் பாடகி செல்வி உமா நாராயணய்யர்'' - கனகசபை வாத்தியார் அறிமுகப் படுத்த கரகோஷம் ஒலித் தோய்ந்தது.

மஞ்சள் பட்டில் பொன்னிறக்கரை ஜ்வலிக்கும் நீண்ட பாவாடையும், பச்சைத் தாவணியும், முறுவலிக்கும் முகமுமாக, கம்பீரமாக மேடைக்கு வந்த உமா ஒலிவாங்கிக் கருவியும் கையுமாக நின்றாள்.

''பிராமணக் குமரியின்ரை தழுக்கையும் மினுக்கையும் பார் ..பள்ளர் ஆடுகிற மேடையில பாடவந்திட்டாள்'' - அந்தத் தனிக்குரலுக்குப் பக்கவாத்தியமாக சில கூய்...... கூய் விசில்கள்.

அவனை நோக்கிப் பறந்து சென்ற இளைஞர்கள் ஆளை இனங்கண்டு இழுத்துக் கொண்டு இருளில் மறைய ..... ஒரு சொறி நாயின் அலறல் ....தொடர்ந்து அனுங்கி அனுங்கி... அக்குரல் தூரத்தில் காற்றில் கரைந்து விட்டது.

உமா தமிழ்மொழி வாழ்த்தைப் பாடி விட்டு, '' என்று தணி

யும் இந்தச் சுதந்திர தாகம்'' பாடலின் ஒவ்வொரு அடிக்கும் அழுத்தங் கொடுத்த போது சபையில் உணர்ச்சி கொந்தளித்தது.

''நடிப்புச் சுதேசிகள்'' கிளிக்கண்ணிகளை மெட்டோடு பாடி நையாண்டியாக அபிநயித்துக் காட்டிய போது, கரவொலி அடங்கக் கன நேரம் எடுத்தது.

வைத்தீஸ்வரக்குருக்களுக்கும் உடம்பு புல்லரித்தது. வீட்டில் காவேரியம்மா கண் பார்வைக் குறைச்சலுடன் தனியே இருந்ததால், உமாவின் நிகழ்ச்சி முடிந்தவுடன் அவர் வீட்டுக்குத் திரும்பி விட்டார்.

''முக்கால் வலமாய் வந்தோ காத்தலிங்கன் நானும் தாயாரை முடிவணங்கித் தெண்டனிட்டேன் காத்தலிங்கன் நானும் முக்கால் வலமாய் வந்தோ ஆரியப் பூ மா லை - மாமியை முடிவணங்கித் தெண்டனிட்டேன் ஆரியப்பூமாலை.''

கூத்து முடிவடைய விடியற் கோழி கூவத்துவங்கி விட்டது.

லக்ஷ்மியும் பிள்ளைகளும் அந்த மையிருட்டில் தோட்ட வரம்பில் நடந்து வந்து, ஒழுங்கை முகப்பில் கால் வைத்த போது, இருளில் பதுங்கியிருந்த ஒரு வெறிநாய் திடீரெனப் பாய்ந்து உமாவின் கை யைக் கவ்வி.........இழுத்து ......

வாய்திறக்க இயலாமல் அவர்கள் திகைத்து திக்கித்துநிற்க...

கிழிந்த சட்டையும் கீறல் மேனியுமாக விக்கி அழுதபடி வீட்டுக்கு வந்த உமாவைக் கண்ட போது, குருக்களின் கோபம் வெறியாக மூண்டு விட்டது.

இரும்புக்கம்பியைத் தூக்கிக்கொண்டு கிழக்கு நோக்கி அவர் இரைக்க இரைக்க ஓடினார்.

அந்த அதிகாலைப் பொழுதில், கோயில் அரசமரத்தடியில் வாயில் இரத்தம் நுரைக்க குருக்கள் குற்றுயிராகக் குப்புறக் கிடந்தார்.

# 32

கூடிகாரத்தின் பெரிய முள்ளும் சிறிய முள்ளும் கட்டியணைத்துக் கொண்டிருந்தன.

நடு நிசியில் அழைப்பு மணி அலறிய போது கௌரி துடித்தெழுந்து, களைத்துறங்கிக் கொண்டிருந்த சரவணனை தட்டி யெழுப்பிவிட்டு வெளிச்சத்தைப் போட்டாள்.

தந்திச் சேவகன் கொண்டு வந்த செய்தி சரவணனைத் திகைத்து திணற வைத்து விட்டது.

''மாமாவுக்கு கடுமை - உடனே வரவும் - தேவகி.''

அவனுக்கு நெஞ்சை அடைப்பது போலிருந்தது. உடம்பு நடுங்கியது. உள்ளங்கையும் தலையும் வியர்த் தொழுகியது.

சாய்மனைக் கதிரையில் உட்கார வைத்துவிட்டு, கௌரி தண்ணீரைக் கொடுத்தாள். கூரை விசிறியின் சுவிட்சை ஐந்தில் முறுக்கி விட்டாள்.

காய்ந்து விட்ட தொண்டையைச் சரிப்படுத்த எச்சில் கூட்டி விழுங்கி விட்டு, கதிரை யொன்றை அவனுக்குப் பக்கத்தில் இழுத்துப் போட்டுக் கொண்டு அவனின் தலையையும் பிடரியையும் இதமாகத் தடவிக் கொடுத்தாள்.

''பயப்படாதேங்கோ ராசா ...... அந்தத் தங்கமான மனிதருக்கு எதுவுமே நடக்க கடவுள் விடமாட்டார் ...... தைரியமாயிருங்கோ ராசா.'' - அவனின் நெற்றி வியர்வையை ஒற்றி எடுத்துவிட்டு, சுடுதண்ணீர்ப் போத்தலிலிருந்த கோப்பியை ஊற்றி, கௌரி குனிந்து நின்று அவன் வாயருகில் வைத்துப் பருக்கினாள்.

அவளின் நெற்கவுணுக்கு மேலால் அந்தத் திரிசூல வடிவிலமைந்த தாலிச்சரடு மின்னிக் கொண்டிருந்தது.

சரவணன் அவளை நிமிர்ந்து பார்த்த போது அவளின் கண்களும் பனித்துப் போயிருந்தன.

உடம்பு எரிவாக இருந்தது. எழுந்து யன்னலைத் திறந்து விட்டான். தூரத்தில் மின்தறி நெசவாலை யந்திரம் நைற் ஷிப்டில் துள்ளித் துள்ளி இரைச்சலோடு ஓடி, அவன் நெஞ் சத் துடிப்போடு போட்டியிட்டது.

''என்னால் இதை நம்ப முடியவில்லை. இங்கிருந்து போன போது நல்ல சுகமாக இருந்தவர்தானே ......... உண்மை யாகச் சுகமில்லையென்றால் உங்கள் அண்ணாதானே தந்தி கொடுத்திருப்பார்?...... என்னிடமிருந்து அங்கே உங் களைக் கூப்பிடுவதற்காக, எல்லோருமாகச் சேர்ந்து தேவ கியை ஏவி விட அவள் இப்படிச் செய்திருப்பாளோ?''

''தேவகி பொறுப்புத் தெரியாத சிறுபிள்ளையல்ல கௌரி ...... அண்ணரின் பிடிவாதம் உமக்குத் தெரியாது...... அங்கு ஏதோ நடந்திருக்கு...... நான் புறப்பட்டுப் போகத் தான் வேணும்''

அவன் உறுதியான முடிவுக்கு வந்து விட்டான்.

அவனைத் தனியாக அனுப்ப அவளுக்கு இஷ்டமேயில்லை.

''உங்களோடு கூட நானும் வரட்டோ ராசா?''

சரவணன் என்ற பெயரைச் சுருக்கி அவனது நண்பர்கள் சரா என்றழைப்பது வழக்கம். தன் இதயத்தில் குடியேறி விட்ட அவனை அப்படிக் கூப்பிடக் கூச்சப்பட்டு, ஒரு படி உயர்த்தி அவனை உரிமையோடு ராசாவாக்கிக் கொண் டாள்.

''நீர் என்னோடு ஊருக்கு வருவதால் ஏற்படக் கூடிய விளை வுகளைச் சிந்தித்துப் பார்த்தீரா கௌரி?''

''அவர்கள் என்னை வீட்டுக்குள் சேர்க்காமல் அவமானப் படுத்துவார்கள் ... என் ராசாவுக்காக நான் எந்த அவமா னத்தையும் தாங்கிக் கொள்வேன்...... ஊரும் உறவும் ஒதுக் கினாலும் கூட, எங்கள் தொடர்பை அங்கீகரித்து ஆசீர்வ

இந்த அந்தத் தெய்வத்தை நான் தரிசிக்கா விட்டால் எனக் கேற்படக் கூடிய அவமானத்தைக் காட்டிலும், அந்தக் குற் றம் என் மனச் சாட்சியை என்றுமே உறுத்திக் கொண் டிருக்குமென்பதை ஏன் ராசா நீங்கள் யோசிக்கவில்லை?'' அவள் குரல் தழுதழுத்துக் கண்ணீர் ததும்பக் கேட்டாள். அவன் கண்கள் மீண்டும் கலங்கி விட்டன.

''கௌரி. காலை ஐந்து மணி 'இன்ரர்சிற்றி' யில் இருவரும் செல்வதற்கு ஆயத்தப்படுத்துங்கோ.''

## 33

பெரிய குலைகளோடு கூடிய இரண்டு மொந்தன் வாழை கள் வாசலில் கட்டப்பட்டிருந்தன. வீட்டுக்கும் தெருவுக்கு முள்ள முற்றத்தை நிறைத்துக் கொண்டு அவசரத் தட்டிப் பந்தல். வெளியே ஒழுங்கையில் கண் போன தூரம் வரை தென்னங் குருத்துத் தோரணங்கள்.

கிழக்குப் பகுதியிலிருந்து வந்த பத்துப் பன்னிரண்டு நரைத்த தலை ஆட்களுடன், இடுப்பில் சால்வையைக் கட்டிக் கொண்டு கணபதிப்பிள்ளையரும் தெரு வாசலில் கை கட்டிக் கொண்டு நின்றார். அவர்களை இடித்து முந்திக் கொண்டு முற்றத்தில் சனத்திரள் கூடியிருந்தது.

வடக்குப் பகுதியாரில் சிலர் கோடரி கொண்டு பெரிய பூவ ரச மரங்களைத் தறித்து வண்டியிலேற்றிக் கொண்டிருந் தார்கள்.

மேற்குப் பகுதிப் பெண்கள் குடமும் தலையுமாக அந்தப் பொதுக் கிணற்றிலிருந்து நீரைச் சுமந்து வந்து பெரிய அண் டாக்களில் நிரப்பிக் கொண்டிருந்தனர்.

கனகசபை வாத்தியாரும் கிழக்குப்பகுதி இளைஞர்களிற் சிலரும், முதுகில் கூனல் விழுந்து தளர்ந்து போன சின்னப்பு ஆசாரியாரோடு சுறு சுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தனர்.

தரையை மெழுகி மஞ்சட் பொடிக்கோலமிட்டு, பச்சைப் பன்னாங்கு பரவி, அதன் மீது குளிப்பாட்டி அலங்கரிக்கப் பட்ட குருக்களின் உடம்பைக் கிடத்தியிருந்தார்கள்.

நெற்றியில் நீண்ட திரிபுண்டர விபூதிக்குறி - சந்தன குங்குமப் பொட்டு, கழுத்தில் உருத்திராக்ஷ மாலை, சோமன் வேட்டியில் பஞ்சகச்சம் - உத்தரியம் - தலையில் மடித்த மாறு கரைப் பட்டுச் சால்வையால் சடாட்சரக்குருக்கள் தன் நண்பருக்கு அழகிய தலைப்பாகை கட்டி விட்டிருந்தார். உடம்பின் பக்கங்களை தலையிலிருந்து கால்வரை நீண்ட பெரிய துளசி மாலை அணைத்துக் கொண்டிருந்தது.

சடலத்துக்கு முன்னால் மண் முட்டிக் கும்பங்கள் - உரல் உலக்கை - சாம்பிராணிப்புகை - ஊடுபற்றி எரியும் குத்து விளக்கு ......

மணல் பரவிய மண் சட்டியில் தீ மூட்டி, சாஸ்திரிகள் அந்தியக் கிரியைகளை ஆரம்பித்து விட்டார்.

மழித்த தலையும் ஈர வேட்டியும், வலத் தோளில் புரளும் பூணூலுமாக, கவலை தோய்ந்த முகத்தோடு இராமச்சந்திர சர்மா, சாஸ்திரிகள் சொன்னபடி இருந்து எழுந்து, கர்த்தாவாகக் கருமாதிக் கிரியைகளைச் செய்து கொண்டிருந்தான்.

காவேரியம்மா குந்தி உட்கார்ந்து, தனது மொட்டையில் கைகளைக் குவித்து வைத்த வண்ணம் பிரமை பிடித்தது போல ஓயாமல் வாய் முணு முணுத்த வாறிருந்தாள்.

கிரியைகள் ஆரம்பித்து நடந்து கொண்டிருந்த அந்த மௌனச் சூழ் நிலையில், உமாவின் மெல்லிய விசும்பொலியையும் மீறிக்கொண்டு சாஸ்திரிகளின் மந்திர உச்சரிப்புகள் தடித்த குரலில் ஒலித்த படி இருந்தன.

''பங்கஜப்ரிய பரம காரணாதி சதுர் முக

சுந்தரப்ரிய கேய நிருத்த ஹிரண்ய சதுர் பிதா மஹா......
... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ...''

காரிலிருந்து இறங்கி சனக்கூட்டத்தை விலக்கிக் கொண்டு சரவணனும் கௌரியும் திடீரென வந்த போது, அத்தனை கண்களும் அவர்களை மொய்த்தன.

தகப்பனின் முகத்தைப் பார்த்து சரவணன் 'அப்பா' என வெடித்து வீரிட்டு அலறித் துடித்த போது, அந்தச் சபையி லிருந்தவர்களின் கண்களிலும் நீர் பனித்து விட்டது.

குருக்களின் பாதங்களைத் தொட்டுக் கும்பிட்டபடி சடலத் தின் காலடியில் வீழ்ந்து கிடந்து விம்மி அழும் கௌரியை எவருமே தொட்டுத் தூக்கி விடவில்லை.

எல்லாம் முடிந்து விட்டது.

குருக்களின் சவம் மயானத்துக்குச் செல்வதற்கு முன்பே மார்க்கண்டரின் இளைய மகனின் சடலம் பெருத்த பறை முழக்கத்தோடு வந்து எரிந்து முடிந்து விட்டது.

எவரும் எதிர் பார்க்காதபடி எல்லாம் முடிந்து விட்டது.

உமாவுக்கு இழைக்கப்பட்ட அவமானத்தைக் கேள்வியுற்று, கனகசபை வாத்தியாரோடு அங்கு வந்த இளைஞர்கள், கோயில் வாசலில் குற்றுயிராய்க் கிடந்த குருக்களைப் பார்த் துப் பதறிப் போய்...... காரில் கனகசபை வாத்தியாரோடு குருக்களை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்து விட்டு...... கூட்டமாகக் கிழக்கே போய்...... குற்றமிழைத்தவனை இனங்கண்டு......

எல்லாம் நடந்து முடிந்து விட்டது.

நீறுபூசி நெறியோடு வாழ்ந்த குருக்கள் ஒரு பிடி சாம்பரா கித் தசாக தினமும் நடந்து முடிந்து விட்டது.

கௌரியை இன்னும் அவர்கள் வீட்டிற்குள் சேர்க்கவில்லை. பாட்டி சொற்படி அவளை தனியாக வெளித் திண்ணையி லிருத்தித் தேவகி சோறு போட்டாள். சரவணனுக்கு மனசு சங்கடமாயிருந்தது. உமா ஒருத்தி மட்டும் அவ ளோடு ஒட்டி அன்பாகக் கதைத்தாள். லக்ஷ்மியம்மா கௌரியை உற்று உற்றுப் பார்த்து, முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க, தனது கன்னத்தை தோளில் இடித்து முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

மருமகன் இராமச் சந்திர சர்மாவையும் தனது மகளையும் அன்று காலையில் ஊருக்கு அனுப்பி வைத்து விட்டு, சடாட் சரக் குருக்கள் சரவணனை அழைத்து தமக்கருகில் உட்கார வைத்துக் கொண்டு அந்த முற்பகல் வேளையில் வெளித் திண்ணையிலிருந்து பேசிக் கொண்டிருந்தார். அநாதரவாகி விட்ட அந்த வீட்டுக் குடும்பத்தின் எதிர் காலத்தைப் பற்றி அவர்கள் ஆலோசித்து ஒரு முடிவுக்கும் வர முடியாமல் மூளையைக் குடைந்து கொண்டிருந்தனர்.

பிள்ளையார் கோயிற் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள புதிய குருக்கள், கோயில் வாசல் மண்டபத்தில் சைக்கிளை நிறுத்தி விட்டு, கண்டா மணிக் கயிற்றை இழுத்து அவசர அவசரமாக ஆயத்த மணி ஒலித்தார்.

''புதிசாக கோயிலை ஏற்றிருக்கிறவர் யாரோ ஜெகதீஸ்வர ராம்...... முன்பு கொழும்பில் உத்தியோகம் பார்த்தவராம். கலவரத்தோடு ஊருக்கு வந்தவர் உத்தியோகத்துக்குப் போகாமல் குருத்துவத்திலிறங்கி யிருக்கிறாராம்...... உனக்கு அவரைத் தெரியுமோ?'' - மணிச் சத்தம் ஓய்ந்ததும் சடாட் சரக் குருக்கள் கேட்டார்.

சரவணன் நினைவு படுத்திப் பார்த்தான். ......... மீசை யும் அரையில் லுங்கியுமாக ......... சாப்பாட்டு மேசையில் கையில் முள்ளுக் கரண்டியால் கொத்தி எடுத்து ......... 'தே' ஆர் சம் விலேஜ் பெலோஸ் புறம் யாப்னா.........

'செத்தாலும் இனிச் சிங்களப் பகுதிக்கு வர மாட்டன். வீட்டுக் காறன்ரை மேன் பறைத்தெமிளு எனச்சொல்லி அடித்து விரட்டிப் போட்டான்.. ...... ரிடயர் பண்ணி பெஞ்சன் எடுத்துக் கொண்டு வேறை தொழில் பார்ப்பம்.........'

சரவணனுக்கு ஜெகதீஸ்வர சர்மா நினைவுக்கு வந்து விட்டார்,

'ஓம் மாமா எனக்கு அவரைக் கொழும்பிலேயே தெரியும்' சிரித்துக் கொண்டு சரவணன் சொன்னான்.

''ஆசாரியர் பிஷேகமுஞ் செய்து கொண்டு அவர் இப்ப பெரிய குருக்கள்!'' - சடாட்சரக் குருக்கள் அவனுக்குச் சொல்லி முடித்துக் கொண்டிருந்த போது -

வயற் பொதுக் கிணற்றில் அள்ளிக் குளித்து விட்டு உமாவு கௌரியும் வெளிப் படலையைத் திறந்து கொண்டு வீட்டுக்கு உள்ளே சோடியாக வந்தனர்.

மோகனமான அகன்ற பிரகாசமான விழிகள், கூரிய நீண்ட மூக்கு, சிரிக்கிற போது சிறு குளி கவியும் கன்னம், மோவாயில் சிறு பள்ளம்......

சடாட்சரக் குருக்கள் அவர்களிருவரையும் கண்ணிமைக்காமல் வியப்போடு உற்றுப் பார்த்துக் கொண்டேயிருந்தார்.

''நீங்க ரெண்டு பேரும் ஒன்றாகச் சேர்ந்து வருகிற போது அக்காவும் தங்கையும் போல ஓரே அச்சாக இருக்கு'' அட்டகாசமாகச் சிரித்துக் கொண்டு அவர் தனது ஆச்சரியத்தை வெளிப் படுத்தினார்.

பாட்டிக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது:

''உமக்கு அறளை பேந்து போச்சு. சொல்கிறதை யோசிச்சுப் பேச வேண்டாமா? - எவளையோ பிடித்து அவள் உமாவைப் போல இருக்கிறாளென்று சொல்லி, அக்கா

தங்கை உறவையும் கொழுவி விடப் பார்க்கிறீர்...... சரவணன் தகப்பனின் கண்ணிலும் முழிக்காமல் கெட்டுப் போனது மாதிரி, இந்தக் குடும்பம் இன்னும் அவமானப் படவேணும் என்று நினைக்கிற எங்களின் ஜாதி ஆட்களே ஒரு பொறாமைக் கூட்டம்''

மனசில் பட்டதை ஒரு ரசனைப் பாங்கில் சொல்லப் போக, அது காவேரியம்மாவுக்கு இத்தனை கோபத்தை மூட்டி விட்டதைக் கண்ட சடாட்சரக் குருக்கள் தலை குனிந்து மௌனமாகி விட்டார்.

பாட்டியின் ஆவேசத்தையும் பொருட்படுத்தாமல் உமா கௌரியின் கையைப் பிடித்தபடி நின்றாள்.

தேவகி உள்ளே சமைத்துக் கொண்டிருந்தாள்.

லக்ஷ்மியம்மா தன் மனசில் இரு வாரங்களாகப் பொருமிக் கொண்டிருந்த அந்த விஷயத்துக்கு ஒரு முடிவு காண்பதென்ற முடிவோடு விடுவிடென வெளியே வந்தாள். உமாவை இழுத்து ஒரு பக்கம் தள்ளி விட்டு கௌரியைப் பார்த்து சத்தம் போட்டுக் கேட்டாள்.

''நீ ராமசாமிப் பண்டாரத்தின் பேத்திதானே?...... உன் அம்மா பெயர் காஞ்சனாதானே?...... அவை களுத்துறையிலிருந்தவை...... அப்படித் தானே?''

அந்தக் குறுக்கு விசாரணைகளுக் கெல்லாம் கௌரியிடமிருந்து வந்த ஓமென்ற தலையாட்டலுக்கு முன்னால் நின்று கொள்ள முடியாமல் லக்ஷ்மியம்மா வெளியே நிற்க இயலாமல் இரைக்க இரைக்க அறைக்குள் ஓடிப் போய் விட்டாள்.

பயந்து நடுங்கிக் கொண்டிருந்த கௌரியின் கரங்களை உமா இறுக்கமாகப் பிடித்துக் கொண்டாள்.

''சிறுமியாயிருக்கும் போதே உவளை எனக்குத் தெரியும் அம்மா.'' - அறைக்குள்ளிருந்து கேவிக் கொண்டே லக்ஷ்மி உரத்துச் சொன்னாள்.

மத்தியானச் சாப்பாட்டு நேரம் வரை, யாரும் எவருடனும் கதைக்கவில்லை. லக்ஷ்மியம்மா அறையை விட்டு வெளியே வரவுமில்லை.

அடுக்களையில் இலை போட்டு சடாட்சரக் குருக்கள், சரவணன், உமா என்ற வரிசையிலுட்காந்திருந்த போது -

காவேரியம்மா எழுந்து வந்து உமாவுக்கருகில் இன்னொரு இலையைப் போட்டு விட்டு, உமாவை எழுந்து அதில் உட்காரச் சொன்ன போது அவர்களுக்குக் காரணம் புரியவில்லை.

''பிள்ளை கௌரி. நீயும் உள்ளே வா. சரவணனுக்கு அருகில் இருந்து சோடியாகச் சாப்பிடுவதை கண்குளிர நான் பார்க்க வேண்டும்.'' - பாட்டி அவளை இழுத்துக் கூட்டிக் கொண்டு வந்து இருத்திய போது, அவர்களுக்கு வியப்பும் திகைப்புமாயிருந்தது.

தேவகி எல்லோருக்கும் பரிமாறத் தொடக்கினாள்.

## 34

சரவணன் எழுந்து அந்த முடிவைச் சொன்ன போது, அங்கு கூடியிருந்த ஊரவர்கள் அதிர்ந்து போய் விட்டனர்.

சடாட்சரக் குருக்களும் சரவணனும் நன்கு யோசித்து அன்று பகல் முடிவு செய்து விட்டனர் - வீட்டுக் காணியை வாசிக சாலை கட்டுவதற்கு உபகரித்து விட்டு, ஆண் துணையில்லாத அந்தக் குடும்பத்தைக் கூட்டிக் கொண்டு போய் இராமச்சந்திர சர்மா வீட்டில் குடியமர்த்துவதென்றும் அவர்களின் செலவுக்கான ஒரு பகுதியை சரவணன் மாசா மாசம் தமையனுக்கு அனுப்பி வைப்பதென்றும் முடிவெடுத்து விட்டு, காவேரிப் பாட்டிக்கும் லக்ஷ்மி மாமிக்கும்

அதனைச் சரவணன் சொன்ன போது அவர்களும் சம்மதித்து விட்டனர்.

இந்த முடிவைச் சொல்லி, காணியைக் கையளித்து விட்டு விடை பெறுவதற்காக கனகசபை வாத்தியார், சின்னப்பு ஆசாரியார், மற்றும் அவ்வூர் இளைஞர்களையும் அன்று மாலை தனது வீட்டுக்கு சரவணன் அழைத்திருந்தான்.

காவேரிப்பாட்டி, லக்ஷ்மியம்மா, தேவகி, உமா, கௌரி எல்லோரும் அங்கு இருந்தனர்.

வாசிகசாலை கட்டுவதற்கு ஒரு காணி தேவை என்ற போதிலும், அதற்காக அந்த மண்ணையும் மக்களையும் நம்பி வந்து குடியேறியிருந்த குருக்கள் குடும்பம் அடியோடு ஊரை விட்டே போய் விடுவதென அக்குடும்பத்தார் எடுத்த முடிவை ஏற்றுக் கொள்ள முடியாமல் அங்கு கூடியிருந்த ஊரவர்களின் மனம் கஷ்டப்பட்டது.

''ஆண் துணையில்லாத இவர்களுக்கு இங்கே பாதுகாப்பு யார்? ...... அவர்கள் ஜீவிப்பதற்கு உழைப்புக்கு வழியென்ன?'' எனச் சடாட்சரக் குருக்கள் கேட்ட போது, அவர்கள் ஒருவராலும் மறுமொழி சொல்ல முடியவில்லை.

'எங்கடை சவத்தைக் கடந்து கொண்டுதான் இனி எவனாவது இவர்களைத் தொட முடியும்...... இப்போ அவையின்ரை காலம் முடிஞ்சு போச்சு. இளம் தலை முறை புதிதாய்ச் சிந்திக்கத் தொடங்கி விட்டுது. உமாத்தங்கச்சியைத் தொட்டவன் எங்கடை ஆளாகஇருந்த போதிலும் அவன்ரை சவங்கூட அந்தக் கையில்லாமல் தான் எரிஞ்சதை குருக்கள் மறந்து போனியளோ?... இவையின்ரை பாதுகாப்பைப் பற்றிப் பயப்பட வேண்டாம்'' - கிழக்குப் பகுதி இளைஞர் எழுந்து உணர்ச்சியோடு சொன்னார்கள்.

''தம்பிமாரே... வயசு போய் விட்டாலும் எனக்கும் நெஞ்சில் துணிவு இருக்கிறது...... ஆனால் இந்தப் பெண் ஜீவன்களுக்கு

பசிக்கிற வயிறும் இருக்கிறதல்லவா? அதற்கு வேளா வேளைக்கு சாப்பாடு போட அவர்களுக்கு உழைப்பதற்கு யார் இருக்கிறார்கள்?'' - சடாட்சரக் குருக்கள் கேட்டார்.

மௌனமாக இதுவரை இருந்த கனகசபை வாத்தியார் தனது மூளையில் உதித்த அந்த மாற்று யோசனையைச் சொன்னார்.

''உமா படித்த பிள்ளை...... தானும் படித்துக் கொண்டு பின்னேரத்தில் எங்கள் பிள்ளைகளுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுக்கலாம். இருபது முப்பது பிள்ளைகளை நானே சேர்த்துத் தருகிறேன்..... தேவகித் தங்கச்சி அழகாகப் பூப் போட்டு உடுப்புகள் தைப்பதற்கு பயிற்சி பெற்றவ......... தையல் மெஷினும் சாமன்களும் வாங்கித் தருகிறோம் ..... எங்கள் குமர்ப் பிள்ளைகளைத் துணையாக வைத்துக் கொண்டு அவர்களுக்கும் இதைப் பழக்கி விடலாம்......... இவர்களின் ஆற்றல் அடுப்படியோடு முடங்கி விடக் கூடாது......... இந்த வருமானம் இந்தக் குடும்பத்துக்குப் போதாதென்று யோசிக்க வேண்டாம். பெரிய குருக்கள் உயிரோடு இருந்த போது, அவருக்கு ஒத்தாசையாக இருந்ததுபோல இந்தக் குடும்பத்துக்கும் உதவி செய்ய மாறக்க மாட்டோம் ......பெரியகுருக்கள் செத்தவுடனே அவரில் வைத்திருந்த பக்தியையும் விசுவாசிப் பையும் மறந்து, அவரை நம்பி இருந்த குடும்பத்தாரை ஊரை விட்டு குடி யெழுப்பிக் கலைத்து விட்டார்கள் என்ற பழியும் பாவமும் இந்தக் கிராமத்துக்கு வரக் கூடாது.'' - கனகசபை வாத்தியாரின் குரல் நெகிழ்ந்து......... தொடர்ந்து பேசமுடியாமல் அவர் உட்கார்ந்து விட்டார்.

,சடாட்சரக்குருக்கள் சால்வையால் தமது கண்களை ஒற்றித் துடைத்தார்.

''இங்கிருந்து குடியெழும்ப வேண்டாம்.''

''ஊரை விட்டுப் போகாதேங்கோ...'' எங்கள் பெரிய குருக்களின் நினைவாக இங்கேயே இருங்கோ,''

அங்கு திரண்டிருந்த இளைஞர்கள் ஒரே குரலில் பிடிவாத மாக அவர்கள் கெஞ்சினார்கள்.

சரவணன் முடிவுக்கு வர முடியாமல் தடுமாறினான். கௌரியின் முகத்தைப் பார்த்த போது அவள் நெற்றியிலும் வியர்வை அரும்பியிருந்தது.

உள்ளே எழுந்து சென்ற அவள் தனியாக அவனைக் கூப் பிட்டு அவனிடம் சொன்னாள்.

'தெய்வமாகி விட்ட ஐயாவின் நினைவை மறக்க இயலா மல் எங்களைப் போலவே அவர்களும் தவிக்கிறார்கள்...... இந்தக் குடும்பம் குடியெழும்பிப் போய் விட்டால் என்னை நீங்கள் முடித்ததாலும், உமாவுக்கு நேர்ந்த அவமானத்தா லும்தான் ஐயர் குடும்பமே ஊரை விட்டு ஓடி விட்டது. என பிறகு மற்றவர்கள் தூற்றிக் கொண்டு தாங்கள் வெற்றி பெற்று விட்டதாக வீறாப்புப் பேசுவார்கள்...... உங்கள் படிப்புக்காக முன்னேற்றத்துக்காக ஒவ்வொரு எதிர்ப்புக்கும் முகம் கொடுத்து உங்கள் அப்பா துணிவாக நின்றது போல, அவர் பெயரைக் காப்பாற்ற இந்தப் பிரச்சனைக்கும் ஒரு நல்ல முடிவுக்கு வாருங்கோ ராசா... எங்களுக்கு உறவில்லை... ஆனாலும் இத்தனை மக்களின் அன்பு இருக்கும் போது அந்தப் பலத்திலேயே நாங்கள் துணிவாக இங்கு வாழலாம். தேவகியும் உமாவும் என் அப்பாவின் பிள்ளைகளென்று தெரிந்த பின் அந்தச் சகோ தரிகளின் எதிர் காலப்பொறுப்புமிருக்கு ராசா. நீங்கள் இடமாற்றம் எடுங்கோ. நாங்கள் இங்கேயே இருப் போம்.'' - சரவணன் ஒரு தெளிவான முடிவுக்கு வருவதற்கு கௌரியின் ஆலோசனை வழி வகுத்து விட்டது.

அந்தக் குடும்பத்தினர் தொடர்ந்தும் அங்கேயே இருப்பார் களென்றும், தானும் விரைவில் இடமாற்றம் பெற்றுக் கொண்டு மனைவியோடு அவ்வூர் வாசியாக வந்து விடுவா னென்றும் சரவணன் தெரிவித்த போது, அவ்வூரவர்களுக்கு மிக ஆறுதலும் மட்டற்ற மகிழ்ச்சியுமாயிருந்தது.

''குருக்களின்ரை மகனும் தகப்பனைப் போல எங்களில நல்ல வாரப்பாடு......... எங்களை விட்டு விட்டுப் போமாட்டாரெண்டு எனக்கு உள்மனம் எப்பவோ சொல்லிக் கொண்டிருந்தது.'' - சின்னப்புக் கிழவர் பெருமிதப் பட்டு பலமாகச் சிரித்தார்.

''சரவணா! உனக்குத் தோதான பெட்டையைத் தான் தேடிப் பிடித்திருக்கிறாய்'' - சடாட்சரக் குருக்கள் அவன் முதுகில் தட்டிக் கொடுத்து அட்டகாசமாகச் சிரித்தார்.

தேவகி எல்லோருக்கும் தேநீர் கொண்டு வந்து கொடுத்தாள்.

உமா கௌரியின் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தாள்.

## 35

அந்த இளைஞர்கள் துணிச்சல் காரர்கள் மட்டு மல்ல, கெட்டிக் காரர்களும் தான்!
கனகசபை வாத்தியாரின் சரியான வழி நடத்தலில் சுறுசுறுப்பாக இயங்கி ஆறு மாசத்திலேயே அந்தப் பெரிய கட்டடத்தை, குருக்கள் வீட்டுக் காணியில் கட்டியெழுப்பி வைத்தீஸ்வரர் நினைவாலயத்தை இயங்க வைத்து விட்டனர்.

வாசிகசாலை, அதனையொட்டி காலையில் சிறுவர் பாடசாலை சக மாலை நேர தையற் பயிற்சி நிலையம், பக்கத்தில் விஸ்தாரமான நெசவுப் பயிற்சி நிலையம் - மூன்றும் நீளமான ஒரே கட்டிடத்தில் இயங்கத் துவங்கி விட்டன.

கட்டடத்துக்கு வேண்டிய மரங்களையும் பொருட்களையும் ஊரில் உபகரிப்பாகப் பெற்று, உழைப்பைச் சிரமதானமாக நல்க வைத்து, சீமெந்துக்கும் ஓட்டுக்கும் மட்டும் செலவழித்தது போக, கதம்ப விழாச் சேகரிப்பில் எஞ்சியிருந்த நிதியில், நான்கு தையல் மெஷின்களும் நெசவுசாலை உபகரணங்களும், தள பாடங்களும் வாங்கி விட்டனர்.

தேவகி காலையில் பாலர் பாடசாலை ஆசிரியையாகவும்' பிற்பகலில் தையல் பழக்குபவளாகவும் பணியாற்றிக் கொண் டிருந்தாள்.

கௌரிக்கு நெசவுப் பயிற்சி ஆசிரியையாக முழு நேரவேலை. உதவியாளராக சீதேவியைச் சேர்த்து வைத்துக் கொண் டாள்.

உமா உயர் கல்வி படிப்பதற்காக எச். எஸ். சியில் சேர்ந்து யாழ். இந்து மகளிர் கல்லூரி விடுதியில் தங்கியிருந்து படித்தாள்.

லக்ஷ்மியம்மா வீட்டுச் சமையற் பொறுப்பை ஏற்றுக் கொண் டுவிட்டாள்.

கண்பார்வை மங்கி விட்ட காவேரியம்மாவின் பேச்சுத்து ணைக்கும், வீட்டுக்கு உதவிக்குமாக சின்னப்பு ஆசாரிக்கிழ வர் குருக்கள் வீட்டு வெளி விறாந்தையில் இடம்பிடித்து நிரந்தரமாக ஒதுங்கி விட்டார். அவரின் பாக்கியம் மூத்த மகளின் பச்சைக் குழந்தையைப் பராமரிக்க அவளோடு போய்த்தங்கிவிட்டாள்.

கணபதிப்பிள்ளையருக்குப் பாரிசவாதமாம். படுக்கையோடு கிடந்தார். அவர் வைத்த புதிய குருக்கள் வருமானங் காணதென ஒருமாசத்தோடு குழப்பிக் கொண்டு போன பின் வரசித்தி விநாயகரின் பூசையும் நின்று கோயில் வெ றிச்சிட்டு விட்டது. சின்னப்பு ஆசாரி வெள்ளி செவ்வாயில் மட்டும் போய் வெளி வாசலில் விளக்கு வைத்து விட்டு வந் தார்.

பாழடைந்தது விட்ட வரசித்திவிநாயகர் கோயிலைப் புனர மைப்புச் செய்வதற்கு, நிர்வாகப்பொறுப்பை பொதுமக்கள் சபையிடம் ஒப்படைக்க வேண்டும் என வாசிகசாலையில் ஊர் கூடி நிறைவேற்றிய தீர்மானத்துக்கிணங்க, கணபதிப்

பிள்ளையின் புத்திரர்கள் உறுதி எழுதிக்கொடுத்து விட்டார்கள்.

கனகசபை வாத்தியாரைத் தலைவராகக் கொண்டு தேர்ந்தெடுக்கப் பட்ட அவ்வாலய நிர்வாக சபையினருக்கு, தெட்சணாயனம் முடிந்த பின் பாலஸ்தாபனஞ் செய்து திருப்பணி வேவைவயைத் தொடங்கலாம் என சடாட்சரக் குருக்கள் நாள் குறித்துக் கொடுத்து விட்டார்.

சரவணனுக்கு யாழ்ப்பாணத்துக்கு இன்னும் இடமாற்றம் கிடைக்கவில்லை. மனித நேயமும் விஸ்வாசமும் மிக்க அந்த ஊர் மக்கள் மத்தியில் வாழும் நான்கு பெண்களுக்கும் தனது நேரடிப் பாதுகாப்பு அவசியம் என்ற அச்சம் அவனுக்கு எழவேயில்லை. - ஆனாலும் கௌரியைப் பார்க்க அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்தான்.

வடக்கு, கிழக்கு, மேற்கு என்ற பாகுபாடில்லாமல், காலை முதல் மாலை வரை சிறார்களும், குமர்ப்பிள்ளைகளும் படிப்புக்கும் பயிற்சிக்குமாக வைத்தீஸ்வரர் நினைவாலயத்துக்கு வந்து போய்க் கொண்டிருந்தனர்.

முன்னால் அமைந்துள்ள கரப்பந்தாட்டத்திடலில் பொன் வெயிலில் இளைஞர்கள் வியர்க்க வியர்க்கச் சுறுசுறுப்பாக விளையாடிக்கொண்டிருந்தனர்.

பத்திரிகை படிப்பவர்களின் வசதிக்காக, இன்னும் மின்சாரம் எட்டிப்பார்க்காத அந்தக் கிராமத்து வாசிகசாலையில் மாலை நேரங்களில் பெற்றோமாக்ஸ் பிரகாசமான ஒளியைப்பரப்பிக்கொண்டிருந்தது.

(முற்றும்)

★ ★ ★



ஈழத்துச் சோமு என்னும் திரு. என். சோமகாந்தன். ஐம்பதுகளின் தொடக்கத்தில் எழுதத் தொடங்கியவர். சிறுகதைகளையே அதிகமாக எழுதியுள்ளவர். ஒரு கால கட்டத்தில், ஆண்டுதோறும் ஒரு வகையான இலக்கியக் கணிப்பீட்டுக் கட்டுரைகளை எழுதிவந்தார். அந்தக் கட்டுரை கள் அச்சமயத்தில் ஈழநாட்டில் எழுதப்பட்ட கதைகளின் தொகையையும் தரத்தையும் மதிப்பீடு செய்யும் முயற்சி களாய் அமைந்தன.'

'ஈழத்துச் சோமு'வின் "விடிவெள்ளி பூத்தது" நாவல் இப்பொழுது வெளிவருகிறது. தமக்கு மிகவும் பழக்கமான ஒரு சமூகச் சூழலைப் பின்னணியாக்கி, அச்சூழலில் உலவும் மனிதர்களின் அவதிகளையும், ஆதங்கங்களையும், வேட்கைகளை யும் விரக்திகளையும், இயல்புகளையும், இககட்டுகளையும் தாம் புனைந்துள்ள நெடுங்கதையில் இவர் கையாண்டுள்ளார். சோமு ஏற்கெனவே எழுதியுள்ள கதைகளிலும் இப்பொருள் கள் கையாளப்பட்டுள்ளன. ஆனால், இப்பொழுது வெளிவரும் நெடுங்கதை விசாலமானதொரு காட்சியையும் வித்ம்வித மான கருத்துகளையும் முழுமையாகத் தருகிறது.

— முருகையன்